116

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

இதழ் 5

செந்தமிழ் மாதசஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 முஹர்ரம் மீ 1933 மே மீ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-JUN 1933

உள்ளடக்கம்.

1. ஸூரத்துல் இன்பிதார் ... 161
2. நாயக வாக்கியம் ... 165
3. அஞ்சாரம் ஒழிக! ... 167
4. ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் தியாக நிகட்சி ... 168
5. யான் எதற்காக முஹம்மத் அரபீ (ஸல்.) அவர்களின் அடிமைத் தனத்தை ஒப்புக் கொண்டேன்? ... 178
6. மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டு ... 182
7. தற்கால அப்கனிஸ்தான் ... 188
8. முரசின் முசடு ... 195
9. தா. இ. ஹாபிஸின் தடுமாற்றம் ... 196
10. 'யவ்முந்நபீ' விழாவும், முஸ்லிம்களின் கடமையும் 197
11. நிரூபசாரம் ... 199

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

சந்தா நேயர்கட்கு.

மாண்புமிக்க நண்பீர் !

உங்களிலனேகருடைய சந்தா, சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்திருந்தும், நடைபெறும் 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தா ரூபாயை இதுவரை அனுப்பாதிருக்கின்றீர்கள். நமது அரும் மாசிகைக்கேற்பட்டுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாதலின் நண்பர்கள் அதனை முன் பணமாக அனுப்பி வைத்தாலன்றி தக்கமுறையில் காரியாதிகளைக் கவனித்துச் செல்ல முடியாதாகையால், அன்பர்கள் தயவு கூர்ந்து தங்கள் சந்தாக்களைத் தாமிதமின்று அனுப்பி வைப்பார்களென்று மிகவும் எதிர்பார்க்கிறோம்.

அறிவிப்பு.

அன்பர்காள் !

நமது பத்திரிகாலயமும், ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க ஆபீசும் சென்னை போஸ்டாபீஸ் தெருவு நெ. 43. A-க்கு மாற்றப்பட்டிருப்பதால், இனி கீழ்கண்ட விலாசத்திற்கே அட்ரஸ் செய்யும்படி கோருகிறோம்.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெருவு,

G. T. மதருஸ்.

حفاظة الإسلام

OFFICE OF THE REGISTRAR OF ...
5 - JUN 1933
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 முஹர்ரம்மீ 1933 ளூ மே மீ	இதழ் 5

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறேம்.)

ஸூரத்துல் இன்பிதார்.

1. வானம் பிளந்து விடும்போது,

2. இன்னும் நக்ஷத்திரங்கள் உதிர்ந்து விடும்போது,

3. இன்னும் கடல்கள் ஓடவிடப்படும் போது,

4. மேலும் கப்ர்களிலிருந்து எழுப்பப்படும் போது,

5. ஒவ்வொரு ஜீவனும் தான் முன்னாலனுப்பியதையும் பின்னே விட்டுவேந்ததையும் அறிந்துகொள்ளும்.

6. ஏ, மனிதனே! எந்த வஸ்துவானது உன்னை, கொடையாளனுன உன்னுடைய நாயன் விஷயத்தில் ஏமாற்றிவிட்டது.

7. எப்படிப்பட்டவனெனின், அவன் உன்னைப்படைத்துப் பிறகு உன்னைச் செம்மையாக்கிப் பின்னும் உன்னை ஒழுங்காக்கினுன்.

8. அவன் நாடிய உருவத்தில் உன்னை அமைத்தான்.

9. காரியம் அவ்வாறில்லை! ஆயினும் நீங்கள் கூலி கொடுக்கப்படுவதைப் பொய்யாக்கி வைக்கின்றீர்கள்.

10. நிச்சயமாக உங்கள்மீது காவலாளிகளிருக்கும் நிலைமையில்,

11. சங்கைவான்களான எழுதக்கூடிய (காவலாளிகள்)

12. நீங்கள் செய்கிறதை எல்லாம் அறியக்கூடியவர்கள்.

13. நிச்சயமாக நன்மை செய்தோர் காருண்யங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

14. இன்னும் நிச்சயமாகத் தீமை செய்தவர்கள் நரகத்தை அடைவார்கள்.

15. அவர்கள் நியாயத் தீர்ப்புடைய நாளன்று அதில் புகுவார்கள்.

16. அவர்கள் அந்த நரகத்தைவிட்டு (வேறெங்கும்) செல்கிறவர்களாயில்லை.

17. இன்னும் அந்த நியாயத்தீர்ப்பு நாள் எதுவாயிருக்குமென்பது உமக்குத் தெரியுமா?

18. மறுபடியும் (கேழ்க்கின்றேம்) அந்த நியாயத்தீர்ப்பு நாள் எதுவா யிருக்குமேன்பது உமக்குத் தெரியுமா?

19. அந்நாளில் எந்த ஆன்மாவும் வேறு ஆன்மாவுக்கு யாதொன்றையும் பிரயோசனஞ் செய்ய சுதந்தரமில்லை. மேலும் அந்நாளில் அதிகாரம் முழுதும் அல்லாஹ்வுக்குடையதாகவே யிருக்கும்.

[அதாவது வானம்பிளந்து நக்ஷத்திரங்கள் உதிர்ந்து கடல்கள் ஓட ஆரம்பித்து கப்ர்களிலிருந்து மானிடர்களை எழுப்பப் படுங்காலை ஒவ்வொரு ஆன்மாவும் தான் உலகின் கண்ணிருக்கும்போது புரிந்துவந்த நன்மை தீமைகளை நன்கறிந்துகொள்ளும். ஆகவே ஏமானிடனே! கொடையாளனை உன்னுடைய ரப்புக்கு வழிப்பட்டு நடப்பதை விட்டு எந்த வஸ்துவானது உன்னை ஏமாற்றத்திலாக்கி வைத்துவிட்டதென்பது உனக்குத் தெரியுமா? அவன் உன்னைப்படைத்து செம்மைப்படுத்தி ஒழுங்காக்கியவனும், தான் நாடிய உருவத்தில் அமைத்தவனுமாகும். ஆண்டவன் அளவற்ற கிருபையுடையவனுகையிருப்பதால் தன் அளவற்ற கிருபையைக் கொண்டு மறுமை நாளில் பாவங்களை மன்னித்துக்கொள்வான் என்னும் தைரியத்தோடு நீங்கள் பாவ காரியங்களில் பிரவேசிப்பதில்லை. ஏனெனில் அவ்வாறு தைரியங் கொள்வதானது மறுமை நாளை உண்மையாக்கி வைப்பதுகொண்டு ஏற்படுவதாகும். ஆகவே நீங்கள் மறுமை நாளுண்டென்பதை உண்மை கொள்ளாதிருப்பதால், காரியம் நீங்கள் நினைப்பதுபோலில்லை. நீங்கள் கூலி கொடுக்கப்படும் நாளைப் பொய்யாக்கி வைக்கின்றீர்கள். நிச்சயமாக உங்கள்மீது ஆண்டவன் புறத்திலிருந்து காவலாளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறர்கள். அவர்கள்சங்கைவான்கள்; உங்களுடைய செயல்களடங்கலையும் எழுதக்கூடியவர்கள்; நீங்கள் செய்பவைகளடங்கலையும் தெரிந்துகொள்ளக் கூடியவர்கள். நிச்சயமாக அந்நாளில் நல்லடியார்கள் பெரும் சுவண்டியிலிருப்பார்கள். கெட்டோர்கள் நரகவேதனை அடைவார்கள். மேலும் அந்த நரகத்தைவிட்டு அவர்கள் ஒருக்காலும் மறைந்துவிடமாட்டார்கள். அந்த நியாயத்தீர்ப்பு நாளில் எந்த ஆன்மாவும் வேறு ஆன்மாவுக்கு யாதொரு பிரயோசனத்தையும் செய்துவிட முடியாதென்பதும், அந்த நாளில் அதிகாரமுழுதும் ஆண்டவனது கையிலிருக்குமென்பதும் உனக்குத் தெரியாதா? என்பதே.]

இவ்வத்தியாயம் மக்கியாம். இதன் ஆரம்பத்தில் 'இன்பதரத்' பிளவுபடுவது அதாவது, வானம் பிளவுபடுவதன் விஷயம் குறிப்பிடப்பட்டிருப்பதால் இஃது 'ஸூரயே இன்பிதார்' என்னும் திருப்பெயருடன் அழைக்கப்படுகிறது.

இதன் முந்திய வாக்கியத்தில் வானம் பிளந்துபோகுமெனக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் இதுபோலவே வானம் பிளந்துபோகுமென எத்தனையோ குர்ஆன் வாக்கியங்கள் அறிவிக்கின்றன. எனவே முடிவாக ஒருநாளில் இவ்வுலகு முழுதும் அழிந்து நாசமாகி சதாவுமிருக்கக்கூடிய வேறு ஒரு உலகம் ஏற்பட்டுப்போகும். அவ்வுலகிற்கு வேண்டியனவற்றைச் சேகரித்துக்கொண்டு போவதற்காக சில நாளின் விருந்தாளியாக மானிடன் இவ்வுலகின்கண் வந்திருக்கிறுன். பிறகு அவன் இங்கிருந்து சென்றபின் சதாகாலமும் அங்கிருக்கும்படி ஏற்பட்டுப்போகும். தவிர அல்லாஹதஆலா இவ்வுலகு அழிந்துபோகக்கூடிய விதத்தை விபரிக்குங்கால், ஆரம்பமாக வானம் பிளந்துபோகும் எனக் குறிப்பிட்டு உலகின் நாசத்தைத் தெரியப்படுத்துகிறுன். எனவே ஒரு வஸ்துவை உற்பத்தி செய்வதாயின் அஸ்திவாரத்திலிருந்து அதனைச் செய்ய வேண்டும். அழித்துவிடுவதாயின் உயரம் மேட்டிலிருந்துதான் அதனை நாசமாக்குவது வழக்கம். ஆகவே நாசத்தைக் கூறுங்கால் வானம் பிளந்து அதிலுள்ள நக்ஷத்திரங்கள் கீழே விழுந்துபோகும் எனத் தெரிவித்துவிட்டு, அக்காலை கடல்கள் ஓட விடப்படுமென்றும், பூமியில் புதைக்கப்பட்டிருக்கும் மனிதனும் இதர வஸ்த்துக்களும் பூமிக்குமேல் வந்துவிடுமென்றும், மானிடனது உறுப்புக்கள் ஒன்றேடொன்று சேர்ந்துவிடுமென்றும், அந்தநேரத்தில் அர்ஷுக்குக் கீழாலிலிருந்து தண்ணீர் பொழியுமென்றும், இஸ்ராபீல் (அலை) ஸூர் ஊதியவுடன் மானிடர்களின் ஆத்மாக்கள் அததன் சரீரத்துடன் போய்ச் சேர்ந்துவிடுமென்றும், அதுகாலை ஒவ்வொரு ஆன்மாவும் தான் உலகின்கண் புரிந்திருக்கும் நன்மை தீமைகளை அறிந்து கொள்ளு

மென்றும் இதன் 3-4-5 வாக்கியங்கள் மூலம் அறிவிக்கின்றான். ஆகவே எவன் இவ்வுலகின் கண் நற்கருமங்கள் புரிந்து பாவமான காரியங்கள் செய்வதைவிட்டு விலகிக்கொண்டானோ அவனது இருப்பிடம் சுவர்க்கமாகும். எவன் இதற்கு மாற்றஞ் செய்தானோ அவனது இருப்பிடம் நரகமாகயிருக்கும் என நன்கு தெரிந்து கொள்கிறோம். ஏ மானிடனே! மறுமை நாள் வரப்போகிற தென்பதையும், அந்நாளையில் மானிடன் தனது நன்மை தீமைகளை உற்றுணர்ந்து பார்த்துக் கவலைப்பட்டு கையைப் பிசைந்துகொள்வான் என்பதையும் நன்கு அறிந்து கொண்டபின் எந்த வஸ்த்துவாகிறது உன்னை ஏமாற்றி வைத்திருக்கிறது எனவும், அல்லாஹ்த ஆலா அபாரக் கிருபையுடையவனாக யிருப்பதால் உலகிலேயே கெட்டவேலைக்கு தெண்டனை கொடுக்காது நல்லோர் கெட்டோர் யாவருக்கும் தனது மட்டில்லாக் காருண்யங்களை அளித்து சிறப்புறச் செய்திருப்பது உன்மை ஏமாற்றத்திலாக்கிவைத்திருக்கிறதா எனவும் இதன் 6-வது வாக்கியத்தின் மூலம் வினவுகின்றான்.

தவிர, இந்த வாக்கியத்தில் மானிடன் எனக் கூறப்பட்டிருப்பதால் அது ஆண்டவனுக்கு மாறுசெய்த காபிர்களையும் முஃமின்களில் பாவஞ்செய்தவர்களையும் குறிப்பிடுகிறது என உலமாக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். எனவே முஃமினான ஒருவன் ஒருபாவத்தைச் செய்தபின் அதற்காக ஆண்டவ்னிடம் மன்னிப்புக்கேட்டு அதை விட்டுத் திரும்பாமலிருப்பானாகில் அவன் மறுமைநாளில் நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுக்கப்படுவதை ஒப்புக்கொள்ளாதவன் போலாய் விடுகிறான்; தெண்டனை அளிக்கப்படுவதன்பயம் அவன் மனதைவிட்டு நீங்கி விடுகிறது. இவ்வாறு பயமற்றுப் போவது மமதைகொண்டு ஆண்டவனது நியாயத் தீர்ப்பை -மறுப்பதுபோலாய் விடுகிறது. ஆகவே அவன் ஏமாற்ற மடைந்தவனாய் விடுகிறான். இதுவன்றி ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பாவமான காரியம் செய்ய நேரிட்டுவிடின், உடனே அதன்மீது கவலை கொண்டு பாவமன்னிப்புத் தேடிக்கொள்வது ஈமானுக்குமுரணான செய்கையாகாது. தவிர கிறிஸ்தவர்களைப் போன்று தாங்கள் புரிந்துவரும் பாவகாரியங்களுக்கு தண்டனையாக ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்கள் ஏற்கனவே சிலுவையிலறை பட்டுப் போய்விட்டார்களாதலின் இதுபொழுது தாங்கள் நாடியவைகளைச் செய்துகொண்டிருக்கலாமென்று கூறிக்கொண்டு பஹிரங்கமாக பாவ காரியங்கள் புரிய முற்படுவதும் ஆண்டவன் விஷயத்தில் மானிடன் ஏமாந்துபோனதிலுள்ளதாக யிருக்கும். இவ்வாறான துர்க்கொள்கையானது எஹூதிகளிடம் காணப்பட்டது எனவே அவர்கள் ஹஸ்ரத் இப்றாஹீம் ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை,ம்.) இவர்களது சந்ததிகளாக யிருப்பதே தாங்கள் விடுதலை பெறுவதற்குப் போதியனவாகுமென்று கருதியிருந்தார்கள். இத்தன்மை போலவே தான் சில அறியாத மக்கள் தாங்கள் மேன் குலத்தவர்களென்றும், தங்கள் மூதாதைகளாகிய தகப்பன், பாட்டன், முப்பாட்டன்மார்கள் மகா சிறந்த மகான்களாகவும் வலிமார்களாகவும் குத்புகளாகவுமிருந்ததால் தங்கள் பாவங்கள் யாவற்றும் மன்னிக்கப்பட்டுப்போய்விடுகிறதென்றும் எந்தப்பாவம் புரிந்தாலும் தங்களுக்கு தண்டனை கிடைக்காதென்றும் அப்படி ஒருக்கால் ஏதாகிலுமேற்படுவதாகயிருந்தாலும் முன்னோர்கள் அதனைக் கவனித்துக் கொள்வார்களென்றும் தைரியமாகக் கூறத் துணிந்து விடுகின்றார்கள். இதுவும் ஆண்டவன் விஷயமாக மானிடன் மருண்டுபோனதிலுள்ளதாகும். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வாறான யூத கிறிஸ்வதக்கொள்கைகள் தப்பானதென அறிவித்து அதனைக் கண்டித் திருக்கின்றார்கள். எனவே தங்களது அருமைப் புதல்வியாகிய ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களை நோக்கி, 'அருமை பாத்திமாவே! என்னிடத்திலிருக்கக் கூடிய உலக சம்பந்தமான வஸ்த்துக்களைப் பெற்றுக் கொள்ள உனக்கு பாத்தியதை யிருப்பதால் அதனைப் பெற்றுக் கொள். ஆனால் மறுமையில் தாம் முஹம்மதுடைய (ஸல்) மகளாகயிருக்குமென்று சொல்வதால்யாதொரு பிரயோசனமு மேற்படாதென்பதை நன்கு தெரிந்து கொள். எனக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே இஸ்லாம் மார்க்கமானது ஆண்டவனது பதவியையும் அவனால் படைக்கப்பட்ட வஸ்த்துக்களின் பதவியையும்வேறுபடுத்திக் காண்பித்திருப்பதுடன் மானிடர்களுக்கு சங்கை மரியாதைகள் ஏற்படுவதெல்லாம் அவர்கள் ஆண்டவனுக்கு பயந்து நடக்

கும் அளவுக்குத்தான் ஏற்படுகிறதென்றும், குலத்திற்குமட்டில் ஒரு தனிச்சிறப்பு இருக்கவில்லை என்றும் நன்கு விளக்கிக் காண்பிக்கிறது. இதுவன்றி இந்துக்களில் பிராமணர் கூட தாங்கள் பர்மாஜீயின் சந்ததிகளென்றும், தாங்கள் ஒருக்காலும் நரகம் அடையப்போவதில்லை என்றும் தாங்கள் நாடியதைச் செய்யலாமென்றும் அதனால் யாதொரு பாவமுமில்லை என்றும் கருதியிருக்கின்றார்கள். முடிவாக இவ்வாறான மனப்பான்மைகளானது மானிடர்களிடையே அதிகமாகப் பரவிப்போயிருந்ததால் அதனை இஸ்லாம் மார்க்கமானது விலக்கியிருக்கின்றது. தவிர, கெட்ட வேலை செய்பவன் அக்காரியம் புரிவதினால்தான் தனக்கு மதிப்பேற்படுகிறதென்றும், விக்கிரக ஆராதனை செய்பவன் அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் காருண்யங்கள் யாவற்றும் தான் வணங்கும் சுவாமிகளால்தான் கிடைக்கிறதென்றும், வழிகேட்டிலிருப்பவன் அவ்வழிகேட்டை, நேரான உண்மையான பாதை என்றும் கருதுகின்றான். முடிவாக எத்தனையோ விஷயங்களை இம்மை மறுமை இவைகளின் ஜெயத்திற்குள்ள காரியங்களென்று கருதியிருக்கின்றார்கள். இவ்வாறு அன்னோர் கருதுவது அவர்களது அறியாத்தனத்தினாலும் ஷைத்தான் அவர்களை ஏமாற்றிவிடுவதினாலும் ஏற்படுவதாகும். எனவே மானிடன் புரியும் கெட்ட காரியங்களுக்கு அல்லாஹ்த ஆலா உடனே தண்டனை கொடுக்காவிட்டால் அவன் செய்த காரியம் ஆண்டவனுக்குப் பொருத்தமுடையதாகயிருக்கிறதென்றும், அதனை அவன் பொருந்திக்கொள்ளாவிட்டால் தனக்கு இவ்வளவு மரியாதைகளையும் ஐசுவரியங்களையும் கொடுக்கமாட்டான் என்றும் ஷைத்தான் அவன் மனதில் ஒரு எண்ணத்தை உண்டுபண்ணி வைத்துவிடுகிறான். இதனைக்கண்டு அவனும் தனது அறியாத்தனத்தால் அதனை ஒப்புக்கொண்டு மருண்டுபோகிறான். ஆகவே இவர்களடங்கலும் அல்லாஹ்த ஆலாவின் விஷயத்தில் ஏமாற்றமடைந்தவர்களாகும் என்பது நன்கு புலனாகின்றது.

இதன் 7-வது வாக்கியத்தில், ரப்பின் கொடையை விபரித்துக் காண்பித்து மானிடன் நல்ல விதமாகக் கண்ணைத்திறந்து பார்த்து யார்விஷயத்தில் ஏமாற்றமடைந்து மிரண்டுபோயிருக்கிறான் என்பதை தெரிந்துக்கொள்வதற்காக, ஆண்டவன் தன் கிருபையால் மானிடனின் வேண்டுகோளன்றி இல்லாமையிலிருந்து உண்டென்பதளவில் கொண்டுவந்து அவனை விகாரமான ரூபத்தில் படைத்து விடாதபடி உறுப்புகளுக்கிடையில் ஒழுங்குசெய்து, காதிருக்க வேண்டிய இடத்தில் காதையும் மூக்கிருக்க வேண்டிய இடத்தில் மூக்கையும் கண்ணிருக்க வேண்டிய இடத்தில் கண்ணையும் அமைத்து போதிய பலத்தையும் உஷ்ணம் சீதோஷ்ணம் இவைகளையும் கொடுத்து, எந்த உறுப்புக்கு எவ்வளவு உஷ்ணம் தேவையோ அந்த அளவுக்கு ஏற்படுத்தி எவ்வளவு சீதோஷ்ணம் தேவையோ அவைகளையும் அளித்து ஒழுங்குபடுத்தியிருக்கிறான் என்பதை நன்கெடுத்துக் காண்பிக்கிறான்.

ஆண்டவன் மானிடனுக்கு இவ்வாறான காருண்யங்களையெல்லாம் அளித்ததற்குப் பகரமாய் மானிடன் நன்றி செலுத்துகின்றானா வென்பதை கவனிப்போமாகில், ஒருக்காலுமில்லை. ஆனால் அதற்குப்பகரமாய் மறுமை நாளை மறுத்து மூக்குக் கயிறு அவிழ்த்துவிடப்பட்ட ஒட்டகத்தைப்போல் தனது மன இச்சைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதிலீடுபட்டு அதைக் கொண்டு சுவண்டி பெறுவதற்காகத் தான் படைக்கப்பட்டிருப்பதாகக் கருதுவதாகவும், மரணமடைந்தபின் உயிர்ப்பித்து எழும்பவேண்டியதிருக்கிறதென்பதையும் அவ்விடத்தில் கேள்வி கணக்கிருக்கிறதென்பதையும் நன்மையான காரியங்களுக்கு நற்கூலியும் தீமைக்கு வேதனையும் கிடைக்குமென்பதையும் அவன் கருதவில்லை எனவும் இதன் 9-வது வாக்கியத்தின்மூலம் தெரிவிக்கிறான்.

இதன் 16-வது வாக்கியத்தில், அவர்கள் அந்த நரகத்தை விட்டு வேறெங்கும் செல்பவர்களாகயில்லை எனக் கூறுகின்றான். அதாவது, எவ்வாறு மானிடர்கள் உலகத்தின் கஷ்டம் சங்கடம் முதலியவைகளை விட்டுத் தப்பித்துக் கொள்வதற்காக பல இடங்களுக்கும் சென்று விடுகின்றார்களோ அதைப்போல் அந்த நாளையில் யாதொரு தந்திரமும் ஏமாற்றமும் கைகூடி வராதென்பதையும், அந்த கஷ்டத்தினின்று எவ்வகையிலும்

அவர்களுக்கு விடுதலை ஏற்படாதென்பதை யும், அந்த நெருப்பின் சூடானது பாவிகளை வெகு தூரத்திலிருந்து தன்பக்கல் இழுத்துக் கொள்ளுமென்பதையும், நரகத்தின் தலை வாயலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மலக்கு கள் சங்கிலியால் அவர்களைக் கட்டி நரகத்தில் போடுவார்களென்பதையும், அதைவிட்டு ஒடு வதற்கு யாதொரு வழியும் அவர்கட்குக் கிடைக்கமாட்டாதென்பதையும், அங்குள்ள வர்களை எதிர்ப்பதற்கு எவ்வித சக்தியும் ஏற் படமாட்டாதென்பதையும் நன்கு தெரிந்து கொள்கிறோம்.

இதன் 18-வது வாக்கியத்தில் 'தும்ம' என்னும் அரபிப் பதம் திரும்பவும் கூறப்பட் டிருக்கிறது. அதாவது ஒருவிஷயம் கூறப் பட்டவுடன் அதனை மானிடன் நன்கு விளங் கிக்கொள்ள முடியாமலும் அது மானிட னது அறிவுக்குப் புலனாகாமலும் இருப்பதும் அதற்குப்பின் சற்று ஆழ்ந்த சிந்தனை புரிந்த பின் அதன் உண்மை இன்னதென்று தெரிந்துவிடுவதும் சகஜமாக யிருந்துவரு கின்றது. ஆனால் கூலி கொடுக்கப்படும் நாள் விஷயமாக நீங்கள் எவ்வளவுதூரம் சிந்தனை புரிந்து பார்த்தபோதிலும் அதன் நிலைமை யைத்தெரிந்துகொள்ளமாட்டீர்களென அறி வித்து, இதன் 19-வது வாக்கியத்தின்மூலம் அந்நாளின் நிகட்சிகளினின்று சிலவற்றை விவரிக்கின்றான். அதாவது, அந்நாளில் ஒரு வன் மற்றவனுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாதென்றும் தகப்பனின்று மகனுக்கோ அல்லது வேறு உறவினர்களுக்கோ எவ்வித உபகாரமும் செய்ய முடியாதென்றும் அந் நாளில் அதிகார முழுதும் அல்லாஹ்வின் கைவசமே இருக்குமென்றும் நன்கு விளக் கிக் காண்பிக்கின்றான்.

(வல்லாஹ் அஃலம்.)

நாயக வாக்கியம்.

ஒரு கூட்டத்தார் ஏதாகிலுமோரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு அல்லாஹ்த ஆலாவை ஞாபித்துக்கொண்டிருப்பார்களா யின், அவர்களை மலக்குகள் சூழ்ந்துகொள்ளு கின்றார்கள்; அல்லாஹ்த ஆலாவின் கிருபை யும் அவர்களுக்கேற்படுகிறது என எம்பெரு மானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் கூறி யிருக்கின்றார்கள்.

சோதரர்காள்! அல்லாஹ்த ஆலாவை ஞாபித்துக்கொண்டிருப்பதானது மிகமிக மேலான வணக்கமாகும். அதனாலேற்படும் பலன்கள் குர்ஆன் ஹதீது முதலியவைகளில் நிரம்பக்காணப்படுகின்றன. மானிடன் உட் காரும்போதும் எழும்பும்போதும் படுக்கும் போதும் அல்லாஹ்த ஆலாவை ஞாபகப்படுத் துவது ஈமானுடைய அடையாளமாகும். இத ற்காகத்தான் ஒவ்வொரு இடங்களிலும் ஒவ் வொரு நேரங்களிலும் அல்லாஹ்த ஆலாவை ஞாபிப்பதற்காக பிரார்த்தனை புரியவேண்டு மென ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. எனவே மனிதன் சாப்பிட்ட பிறகும் மல பாதை செய்த பிறகும் துயில்புரியுங்காலை யும் விழித்தவுடனும் பிரார்த்தனை புரிய வேண்டுமென சன்மார்க்கத்தில் கூறப்பட் டிருக்கிறது. அதன்கருத்தாவது, மானிடன் எந்த நேரத்திலும் தன் எஜமானை மறந் திருக்கலாகாதென்பதும் ஒவ்வொரு நிமிஷ மும் தன் நாயனின் ஞாபகத்திலேயே யிருக்க வேண்டுமென்பது மாகும்.

ஒருநாளன்று ஒரு மனிதர் எம்பெருமா னார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் வந்து நாயகம் (ஸல்.) அவர்களே! மானிடர் களில் யார் சிரேஷ்டமானவராகுமென்று வினவினர். அதற்கு எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் யாருடைய வயது நீளமாகயிருந்து அவருடைய செய்கை நல்லதாக யிருந்ததோ அவர்தான் மேலானவராகுமென்று கூறினார் கள். மறுபடியும் அம்மனிதர், நாயகம் (ஸல்.) அவர்களே! வணக்கங்களில் எது மேலான வணக்கமாகுமென்று வினவவே, உம்முடைய நாவானது அல்லாஹ்தஆலா வைத் துதிப்பதில் ஈரமாகயிருக்கும் நிலைமை யில் நீர் இவ்வுலகவாழ்க்கையைத் துறந்துவிடு வதாக யிருக்குமென உலகதயாளர் அப்ல

லூற்றுஸூல் (ஸல்.) அவர்கள் கூறினார்கள்.

நேயர்காள்! மானிடன் தன் வாணாளை அல்லாஹ்தஆலாவுக்கு வழிப்படுவதிலும் அவனுக்கு வணக்கம் புரிவதிலும் செலவு செய்யும் நிலைமையில் அவன் நீண்ட ஆளுடையவனாகயிருப்பது மேலாகுமென்றும், அவன் ஆண்டவனுக்கு வழிப்பட்டு வணக்கம் புரிவதற்குப் பதிலாய் அல்லாஹ்வுக்கு மாற்றஞ் செய்வது, பாவமான காரியங்கள் புரிவது முதலியவற்றில் ஈடுபடுவானாகில் அவன் ஜீவித்திருப்பதைவிட மரணமாய்விடுவது மேலாகுமென்றும் இந்த ஹதீது ஷரீப் மூலம் நன்கு தெரிந்துகொள்கின்றோம்.

"மானிடர்காள்! வழிநடைப்பாதையில் உட்காராதீர்கள்" என எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறினார்கள். அதற்கு அங்கிருந்த சஹாபாக்கள், ஒருக்கால் ஏதாகிலும் அசந்தர்ப்பத்தால் அங்கு உட்காரும்படி நேர்ந்துவிடின் யாது செய்வதென வினவினார்கள். அதற்கு எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், ஒருக்கால் உட்காருவதற்கு நேர்ந்துவிடுமாயின், பாதையின் பாத்தியதையை அவசியம் பேணவேண்டுமென்றுகூறி, அங்குவீற்றிருப்போர் தங்கள் பார்வையை கீழே செலுத்த வேண்டுமென்றும், யாருக்கும் நோவினை கொடுக்கக்கூடாதெனவும், நலவை ஏவி கெடுதியை விலக்கவேண்டுமென்றும், வழிதப்பிப் போவோருக்கு வழி காண்பித்துக் கொடுக்க வேண்டுமெனவும் அறிவித்தார்கள்.

நண்பர்காள்! பொது வழி நடபாதையில் சகலரும் நடந்து செல்லவேண்டியிருப்பதால் பலவாறானவர்களும் அங்கு செல்வார்கள். எனவே அவர்களில் நல்லோர் கெட்டோர் பெண்டீர் முதலியவர்களும் மனசஞ்சலமடைந்திருக்கும் ஏழைகளும் மனதிருப்தி அடைந்திருக்கும் சீமான்களும் செல்வர். இவ்வாறு பலவகையானோரும் செல்லும் வழிநடைக்குச் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு பலவிதமான தோற்றங்களைக் காண்பது கொண்டு மனிதனின் சுபாவகுணமே மாறிப் போய்விடுவதால்தான் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அவ்வாறு உட்கார வேண்டாமென விலக்கியிருக்கின்றார்களென்பதையும், அவ்வாறு ஏதாகிலுமொரு சந்தர்ப்பத்தில் உட்காரும்படி நேர்ந்துவிடின் பெண்டீர்கள் அவ்வழி நடப்பார்களாயின் பார்வையை கீழாக்கிக்கொள்ளவேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்களென்பதையும், மனசஞ்சலமடைந்திருக்கும் மனிதர்கள் அவ்வழி நடப்பார்களாயின் அவர்களது சஞ்சலத்தை அகற்றுவதற்கு வேண்டிய பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டுமென அறிவித்திருக்கின்றார்களென்பதையும், பாதையில் மானிடர்களுக்கு ஹிம்சை கொடுக்கக்கூடிய கல் முள்போலொற்றவஸ்துக்கள் காணப்படின் அதை அகற்றிவிடவேண்டுமென கட்டளைப் பிறப்பித்திருக்கின்றார்களென்பதையும், அங்கு நடந்து செல்லும் முஸ்லிமின் சலாத்திற்கு மறுமொழி கூறவேண்டுமென்றும், மூர்க்க குணம்படைத்த துஷ்டன் அவ்வழியே செல்வானாகில் அவனுக்கு உபதேசம் புரிய வேண்டுமெனவும் கூறியிருக்கின்றார்களென்பதையும் நன்கு தெரிந்து கொள்கின்றோம்.

பொன்னே போன்று போற்றத்தக்க எவ்வாறான உபதேசமாகயிருக்கின்றது பார்த்தீர்களா? இதனை ஒரு மனிதன் அனுஷ்டித்து நடப்பானாகில் அவன் உண்மையான முஸ்லிமாகத் திகழ்வானென்பது திண்ணம்.

ஒருநாளன்று சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அனஸ் (ரலி.) அவர்களை நோக்கி, மகனே! நீர் வீட்டிற்குச் செல்வீராகில் 'ஸலாம்' சொல்லும். அல்லாஹ்த ஆலா அந்த ஸலாத்தின் பொருட்டால் உம் குடும்பத்தாருக்குக் கிருபைபுரிவான் எனக் கூறினார்கள்.

அன்பர்காள்! மானிடன் தன் வீட்டிற்குள் புகும் முறையை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் எந்த விதத்தில் அறிவித்திருக்கின்றார்கள் என்பதைப் பார்த்தீர்களா? இம்முறையை அநேகர் கைவிட்டிருக்கின்றார்கள். இஃதென்ன? அவ்வாறு ஸலாம் சொல்வது மரியாதைக்குறைவென்றுங் கூட அநேகர் கருதுகின்றனர். ஆனால் எம்பிரான் (ஸல்.) அவர்களின் சத்போதனையைப் பின்பற்றி நடப்பதுதான் மரியாதையான விஷயமாகுமென்பது அன்னோருக்குத் தெரியாது போனதேனோ? எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் சிறார்களிருக்கும் கூட்டங்களுக்குச் செல்வார்களாயினும் அன்னோருக்கும் ஸலாம்சொல்வார்கள். ஆகவே அவ்வுத்தம சற்குணத்தை நாமும் பின்பற்றி நடந்து ஜெயசீலர்களாகச் சிறந்து விளங்குவோமாகவும்.



அனாச்சாரம் ஒழிக!

தூய்மைவாய்ந்த நம் சுத்த சத்திய பரிசுத்த இஸ்லாம் மார்க்கமானது சத்தோழுக்கப் போதனைகள் நிலவி சிறந்து விளங்கிவரும் சன்மார்க்க மென்பதும் மௌட்டீகச் சடங்குகள், ஆபாஸ ஷிர்க் பித்அத்கள் முதலிய அனாச்சாரங்களை விட்டும் பரிசுத்தமான தூய்மைவாய்ந்த மார்க்கமென்பதும் வெள்ளிடையாம். எனவே இஸ்லாத்தின் இனியபோதனைகள் ஏனைய சர்வபோதனைகளைக் காட்டினும் மிகமிகச் சிறந்ததாகவும் ஆழியகருத்துக்களமைந்ததாகவும் புத்திக்கும் யுக்திக்கும் மிக மிகப் பொருத்தமானதாகவும் அமைந்திருப்பதை யாரே மறுக்கவல்லார். உண்மை இவ்வாறிருக்க, நம் முஸ்லிம் சமுகத்தில் தோன்றிய மார்க்க அறிவு ஞான மில்லாத ஒரு சிலர், தங்களது நித்திய நிகட்சிகளில் பலதிறப்பட்ட மூடக்கொள்கைகளையும் சன்மார்க்கத்திற்கு விலக்கான காரியங்களையும் ஏகதெய்வக் கொள்கைக்கு ஒவ்வாத ஷிர்க்கான செயல்களையும் பற்பல பித்அத்தான கருமங்களையும் கையாண்டு சன்மார்க்கத்துறையில் மிகவே வீழ்ச்சி அடைந்திருப்பதைக் காண்கின்றோம். எனவே நிகழும் முஹர்ரம் மாதம் முதற் பத்து நாட்களில் இவ்விந்தியாவின் பற்பல நகர கிராமப்பகுதிகளில் பஞ்சாவைத்தல், ஸந்தூக் எடுத்தல், பஞ்சாதூக்கித்திரிதல், வேஷம் போடுதல், அருசையான கோப்பிப்பாட்டுகளைப் பாடித்திரிதல், மாரடித்தல், பாட்டுக் கச்சேரி நடத்தல், பச்சைத்துணி அணிந்து பஞ்சாவின்முன் பணிந்து நேர்ச்சை செய்தல், அக்கினிவளர்த்து அதில் குதித்தல் போன்ற நூற்றுக்கணக்கான ஆகாக் கருமங்கள் நம்முஸ்லிம்களுக்கிடையே தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. இக்காரியங்கள் நம் இஸ்லாமிய - ஸுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைக்கு முற்ற முற்ற விரோதமான தென்பதை யாராலும் மறுக்கமுடியா தென்பது திண்ணம். இந்நிலையில் நம்மவர்களென்று கூறிக்கொள்பவர்களில் ஒரு சாரார் மேலே கூறப்பட்டுள்ள சடங்குகளைப் பிடிவாதமாய்ச் செய்து சீர்கேடடைந்து வருவது வருந்தற்குறிய விஷயமேயாகும்.

முஹர்ரம் மாதத்திற்கும் இத்தகைய ஷிர்க் பித்அத்தான காரியங்களுக்கும் ஏதேனும் சம்பந்த முண்டாவென்பதை சற்று கவனித்துப் பார்ப்போமாகில், இம்மாதம் சிறப்பும் கண்ணியமும் பொருந்திய புண்ணிய மிக்கதோர் மாதமாக யிருப்பதால் இம்மாதத்தில் இவ்வாறான ஆபாஸச்செயல்கள் யாதொன்றும் புரியலாகாதென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். இத்திங்கள் இத்துணை மகாத்மியம் மிக்கதாயிருந்தும் அறியாத மாக்கள் இம்மாதத்தின் முதற்பத்து நாட்களை ஷிர்க் பித்அத்தான காரியங்கள் புரிவதிலும் கைச்சிலையாகிய பஞ்சாவைத் தூக்குவது வேடங்கள் பூண்டு அவிவேகத்தனமாய் மிருகங்கள் போன்று நடிப்பதிலும் போக்குவது அவிவேகத்தனமான காரியமல்லவா? பரிசுத்தத்தன்மை வாய்ந்த முஸ்லிம்களென்று கூறிக்கொள்பவர்களி லிருந்து இத்தகைய ஆகாக் கருமங்கள் ஆபாஸ சம்பவங்கள் நிகழ்வதைக் கண்ணுறும் இதரர்கள், முஸ்லிம்களை இழிவுபடுத்திக் கூறிச் சிரிக்கின்றனர். இத்தகைய ஷிர்க் பித்அத்தான செயல்களால் நன்மையொன்றும் உண்டாகப் போவதில்லை என்பது ஒரு பக்கலிருக்க, இவற்றின் காரணமாய் ஏற்படும் நஷ்டங்களோ பலப்பலவாகயிருப்பது வெள்ளிடை. இக்காரியங்களைச் செய்வதற்கு ஏராளமான பொருள் செலவிடப்படுகின்றன அதிலும் முஸ்லிம்கள் பொருளாதார நிலையில் மிகவும் க்ஷீணதிசையடைந்து கிடக்கும் இக்காலத்தில் வீணான ஷிர்க் பித்அத்தான காரியங்களுக்கு நூற்றுக்

கணக்கான பணத்தைவாரி விரயஞ்செய்வது அறிவுடைய தன்மையாகுமோ?

ஆகவே இவ்வாறான கெட்ட காரியங்களி லும் பாவச்செயல்களிலும் பாமரர்கள் சிக் குண்டு போகாது பாதுகாத்துக்கொள்ளவேண் டியது ஆங்காங்குள்ள அறிஞர்கள் ஆலிம்கள் அதிகாரிகள் முதலானோர் மீது முக்கியக் கட மையாகும். இப்பணியே அல்லாஹ் ரஸூ லுக்கு விருப்பமான திருப்பணியாகும். எனவே சகலவிதமான ஷிர்க் பித்அத் அனுச் சாரங்கள் ஒழிந்து எங்கணும் சன்மார்க்க ஜோதி வீசும் காலமே சிறந்த காலமாகும். அதுதான் முஸ்லிம்கள் மேன்பாடு அடைவ தற்குள்ள காலமுமாகும். அக்காலத்தையே நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் தியாக நிகட்சி

அமீர் முஆவியாவின் மரணத்திற்குப் பின் அவருடைய மகனாகிய எஜீத் என்பான், தான் கலீபாவாகயிருப்பதாய் அறிக்கை வெளியிட்டான். அக்காலை ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் மக்காவிலிருந்தார்களாயினும் கூபாவிலுள்ள முஸ்லிம்கள் யாவரும் ஹஸ்ரத் அவர்களை அங்கு வரும்படியும் அவர்கள் யாவரும் ஹஸ்ரத் அவர்களுடன் அறுதிமானம் (பைஅத்) செய்து கொடுப்பதாகவும் கடிதம் வரைந்தனுப்பியிருந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் அக்கடிதத்தைப் பார்த்தவுடன் தங்கள் சிறிய தந்தையின் குமாரரான 'முஸ்லிமிப்னு உகைலை' அறுதிமானம் வாங்குவதற்காககூபாவின் பக்கல் அனுப்பிவிட்டுத் தாங்களும் அங்கு புறப்பட்டுச் செல்லத் தயாராகயிருந்தார்கள்.

இச்செய்தி ஹஸ்ரத் அவர்களின் உற்றார் உறவினர்களுக்குத் தெரியவே அவர்கள் யாவரும் பெரும் கவலையடைந்தவர்களாய் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.)போலொற்ற பெரியார்கள் மூலம் தடைசெய்து பார்த்தும் யாதொரு பிரயோசனமு மேற்படவில்லை. அதற்குப் பின் ஹஸ்ரத் அவர்கள் புறப்படுவதற்கு ஆயுத்தமாக யிருக்குங்கால் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் மறுமுறையும் மனசஞ்சலத்தோடு ஹஸ்ரத் அவர்களிடம் சென்று சிறிய தந்தையின் குமாரரே, நான் தங்களைத் தடுக்காமலிருப்பதற்கு முடியாதிருக்கிறது; தாங்கள் செய்யும் பிரயத்தினத்தில் தங்களுடைய அழிவையே காண்கின்றேன்; தங்களை கூபா வாசிகள் யாவரும் ஒற்றுமையுடன் அழைப்பார்களாயின், தாங்கள் செல்வதற்குமுன் விரோதிகளை அவ்விடத்தை விட்டு அகற்றி விடுவதற்குள்ள ஏற்பாடு செய்துவிடுங்கள். தாங்கள் இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுவிட வேண்டுமெனக் கருதுவீர்களாயின் 'எமன்' தேசம் சென்றுவிடுங்கள் அங்குள்ளோர் யாவரும் தங்களுடைய க்ஷேமத்தை விரும்புபவராகயிருக்கின்றார்கள் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள், ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களின் வார்த்தைகளை செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, சோதரீர்! நிச்சயமாகத் தாங்கள் எனது நலவை நாடிப் பலவாறு உபதேசம் புரிவது உண்மையேயாயினும் நான் செல்வதற்கு உறுதிகொண்டுவிட்டதால் என் பிரயாணத்தைத் தடைசெய்யாமலிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என கேட்டுக்கொண்டார்கள்.

அக்காலை மதீனாவிலிருந்த ஹஸ்ரத் அவர்களின் சிறிய தந்தையின் குமாரரான அப்துல்லாஹ்பின் ஜஅபர் அவர்களுக்கு இச்செய்தி தெரிந்து அவர்கள் ஒரு கடிதம் எழுதி ஆள் மூலம் அனுப்பியிருந்தார்கள். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, இக்கடிதம் கண்டவுடன் ஆண்டவனுக்காக தாங்கள் நாடியிருக்கும் பிரயாணத்தை அகற்றி வைத்து விடுங்கள்; இப்பிரயாணத்தில் தங்களுடையவும் அஹ்லபைத்களுடையவும் நாசமிருக்கிறதென்று யான் கருதுகின்றபடியால் ஒருக்கால் தாங்கள் கொல்லப்பட்டுப் போய் விடுவீர்களாயின் பூமியின் ஒளி மங்கிவிடும்;

தாங்கள் நேர்வழிக்கு அடையாளமாகவும் ஈமானுடையவர்களின் நம்பிக்கைபெற்றவர்களாகவுமிருக்கின்றீர்கள் ஆதலின் பிரயாணத்தைத் தீவிரப்படுத்த வேண்டாம் நான் அங்கு வந்து சேர்கின்றேன் என தெரிவித்திருந்தார்கள். இதுவன்றி மதீனவின் கவர்னராகிய அம்ருப்னு ஸயீத் அவர்களும், தாங்கள் 'இராக்' தேசம் செல்ல வேண்டாமென்றும் மதீனவுக்குத் தங்களிடம் வந்துவிடும்படியும், அங்கு எவ்வித பயமும் கிடையாதென்றும் வேண்டிய உதவி கிடைக்குமென்றும் தெரிவித்திருந்தார்கள்.

இவ்வாறு பலரும் பற்பலவாறு கூறியும், எழுதித் தெரியப்படுத்தியும் ஹஸ்ரத் அவர்கள் தாங்கள் நினைத்த காரியத்தில் ஒரே உறுதியாகயிருந்து மக்காவிலிருந்து இராக்கின் பக்கல் பிரயாணமாய் விட்டார்கள். சபாஹ் என்னுமிடத்தில் ஹஸ்ரத் அவர்களின் குடும்பத்தின்மீது அனுதாபமுடைய 'பிர்ஜோக்' என்னும் பெயருடைய பிரக்யாதிபெற்ற புலவரொருவர் வசித்து வந்ததால், செல்லும் பாதையில் அவரைச் சந்தித்துக் கூபாவாசிகள் விஷயமாய்க் கேட்டார்கள். அதற்கு அவர், "கூபாவாசிகளின் மனம் தங்கள்மீது விருப்பங்கொண்டிருந்தபோதிலும் வாளாயுதம் தங்கள் பகைவர்களின் கரங்களிலிருக்கின்றது" என கூறவே, ஹஸ்ரத் அவர்கள் பிர்ஜோக் அவர்களை நோக்கி, தாங்கள் உண்மை கூறுகின்றீர்கள் ஆனல் விஷயங்கள் ஆண்டவனது நாட்டப்படிதான் நடக்கும் என்றுகூறிவிட்டு, குதிரையின்மீது வீற்று பிரயாணமாய்விட்டார்கள். அங்கிருந்து சற்று தூரம் சென்றவுடன் எஜீதின் கவர்னராகிய 'உபைதுல்லாஹ் பின்ஜியாத்' என்பவன் கூபாவில் ஹஸ்ரத் அவர்களின் பிரதிநிதியாகிய 'முஸ்லிமிப்னு உகைல்' அவர்களைக் கொன்றுவிட்டான் என்றும், கூபா வாசிகள் அவர்களுக்கு யாதொரு உதவியும் புரியவில்லை என்றும் தெரிய வந்தது. அதுகாலை ஹஸ்ரத் அவர்களுடனிருந்தவர்களிற் சிலர், அல்லாஹ்வுக்காக எங்கள் வார்த்தைக் கிணங்கித் திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். தாங்கள் அதற்குச் செவிமடுக்காது, 'முஸ்லிமிப்னு உகைலுடைய மரணத்திற்குப் பின் நான் ஜீவித்திருப்பதில் யாதொரு இன்பமும் கிடையாது' எனத் தெரிவித்துவிட்டார்கள்.

அந்த இடத்தில் 'பதவி'களிலுள்ள ஒரு பெரும் கூட்டத்தார் ஹஜ்ரத் அவர்களுடனிருந்தார்களாதலின், ஹஸ்ரத் அவர்கள் அன்னோர் யாவரையும் அழைத்து "நண்பர்காள்! முஸ்லிமிப்னு உகைலும் அவர்களின் இரு துணைவர்களும் கூபாவில் கொல்லப்பட்டுப் போய்விட்டார்கள்; இதுகாலை நமக்கு உதவிபுரியக் கூடியவர்கள் அங்கு யாருமில்லை ஆதலால் என்னுடன்கூட வருவதற்கு மனமில்லாதவர்கள் இங்கேயே தங்கிவிடுவது நல்லது; அதனல் எனக்கு யாதொரு வருத்தமுங் கிடையா"தென அறிவித்தார்கள். இவ்வார்த்தையைக் கேட்டு ஹஸ்ரத் அவர்களுடனிருந்தவர்களி லனேகர் திரும்பிவிட்டார்கள். ஆனல் மக்காவிலிருந்து ஹஸ்ரத் அவர்களுடனே வந்த உண்மைவான்களோ கூடவேயிருந்தார்கள்.

ஹுற்றுப்னு எஜீதின் வருகை

காவிதிய்யாவைவிட்டு சற்றுதூரம் சென்றவுடன் 'ஹுற்றுப்னு எஜீத்' என்பான் 1000 வீரர்களுடன் அங்குவந்து ஹஸ்ரத் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். இராக்கின் கவர்னராகிய 'இப்னுஜியாத்' என்பவன், ஹஸ்ரத் அவர்களை எவ்வகையிலும் தர்பாருக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடவேண்டுமென் ஹுற்றுக்கு கட்டளை பிறப்பித்திருந்தான். ஹஸ்ரத் அவர்கள் லுஹர் தொழுகையுடைய நேரத்தில் தங்களுடன் வந்தவர்களையும் ஹுற்றுடைய சிப்பாய்களையும் நோக்கி, "மானிடர்காள்! நான் என்னிஷ்டத்திற்கு உங்களிடம் வரவில்லை; நீங்கள் எத்தனையோ கடிதங்கள் எழுதியும் தூதுவர்களை அனுப்பியும் என்னைக் கூப்பிட்டிருந்தீர்கள்; அதற்கு ஒற்றுமையாக நீங்கள் நடப்பதாக உறுதி கூறுவீர்களாகில் நான் உங்கள் ஊருக்குவரத் தயாராகயிருக்கிறேன்; இல்லாவிடின் திரும்பிப் போய்விடுகிறேன்" என உருக்கமாகக் கூறினர்கள். அன்னோர் இதற்கு யாதொரு மறுமொழியும் கூறவேயில்லை. அதுகாலை முஅத்தின் தக்பீர் சொல்ல ஆரம்பித்தார். ஹஸ்ரத் அவர்கள், பகைவர்களின் தலைவனை ஹுற்று இடத்தில், நீங்கள் தனியாகத் தொழுகை நிறைவேற்ற நாடுகின்றீர்களாவெனக்கேட்டார்கள். அதற்கவன் தாங்கள்

இமாமாக நின்று தொழுகையை நிறைவேற்றுங்கள்; நாங்களும் தங்களுக்குப்பின் நின்று தொழுகிறோமென்று கூறினான். அவ்வாறே தொழுகை நிறைவேற்றப்பட்டது. பிறகு அஸர் தொழுகையும் அதே தோரணையில் தான் நிறைவேற்றப்பட்டதாதலின் யாவரும் பின் தொடர்ந்து தொழுதுகொண்டார்கள்.

அசர் தொழுகை முடிந்தபின் கடிதமெழுதி கூபாவின் விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமென ஹஸ்ரத் அவர்கள் நாடினார்கள். அதற்கு ஹுர்று என்பான், நாங்கள் கடிதமனுப்புகிறவர்களல்லர்; இப்னுஜியாதின் சிப்பாய்களாகயிருக்கும்; தங்களை இப்னுஜியாத் இடத்திற்குக் கொண்டு சேர்க்கக்கட்டளையிடப் பட்டிருக்கிறோம் எனக்கூறவே, ஹஸ்ரத் அவர்கள் வரமுடியாதென அழுத்தமாய்த் தெரிவித்துவிட்டார்கள். சில மணிநேரம் தர்க்கம் நடந்தபின் ஹுர்று என்பான், தாங்கள் கூபாவிற்குவர இஷ்டப்படாவிடின் வந்தவழியே திரும்பிச் சென்றுவிடுங்கள்; கூபாவிற்கும் செல்லக்கூடாது மதீனாவிற்கும் செல்லக்கூடாது; இதுவிஷயத்தை யான் இப்னுஜியாதுக்குத் தெரிவித்துவிடுகிறேன்; தாங்களும் தெரிவித்துவிடுங்கள் எனக் கூறினான். ஹஸ்ரத் அவர்கள் இதனை அங்கீகரித்துக் கொண்டு இப்னுஜியாதுக்கு முடிவுகோரி கடிதம் வரைந்தனுப்பினார்கள்.

ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் பிரயாணமாகி வருங்காலை இடையில் அறியதோர் சொற்பொழிவாற்றினார்கள். அதில், சோதரர்காள்! இதுகாலை நிகழ்வுறும் விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள்; உலகமானது தன் வரணத்தை மாற்றிக் கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்கிறது; உலகில் நலவுபுரிவதென்பதே இல்லாது மறைந்துபோய்விட்டது; அதன் அடையாளத்தில் கொஞ்சந்தான் மீதமிருக்கின்றது; அதன் அற்ப வாழ்க்கை தான் காணப்படுகின்றது; உண்மை முதுகுக்குப் பின்புறம் போடப்பட்டுப்போய்விட்டது என்பதையும், அதற்கு மாற்றமாய் காரியாதிகள் நடைபெறுகிற தென்பதையும் நீங்கள் காண்கின்றீர்கள்; உண்மையைக் கடைபிடித்தொழுகும் எந்த மனிதரையும் காணுவது குதிரைக் கொம்பாக யிருக்கிறது; முஃமின்கள் உண்மையைத் தேடுவதில் ஆண்டவனது பொருத்தத்தை ஆதரவு வைத்தவர்களாகயிருக்கவேண்டியது அத்தியா அவசியமாகும்; நான் ஆண்டவன் பாதையில் ஷஹீதாய்விட விரும்புகின்றேன்; அனியாயக்காரர்களுடன் உயிர்வாழ்வது ஒரு பாவமான காரியமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்கள். ஜுஹைல் என்பவர் இதற்கு மறுமொழியாக ரசூலுல்லாஹி(ஸல்.) அவர்களின் சதந்தியே! ஆண்டவன் தங்களுடனிருப்பதால் தாங்கள் யாதொன்றுக்கும் பயப்பட வேண்டாம்; நாங்கள் தங்களின் உபதேசத்தைக் கேட்டோம்; எங்களுக்கு உலகவாழ்க்கையில் அதிக நாள் ஜீவித்திருப்பதென்று ஏற்பட்டிருந்தாலும் நாங்கள் தங்களுக்காக எங்களது உயிர்களையும் தியாகஞ் செய்யத்தயாராகயிருக்கின்றோம்; தவிர இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து தங்களுடன் மரணமாய்விடவும் தயாராக இருக்கிறோம் எனக் கூறினார்கள்.

மரணத்திற்கு பயப்படாதிருந்தது.

இந்நிலைமையில் ஒருநாளன்று ஹுர்று என்பான் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, ஆண்டவன் மீது பிரமாணமாக தாங்கள் யுத்தம் புரிவீர்களாயின் நிச்சயமாகக் கொல்லப்பட்டுப் போய்விடுவீர்களென்னக் கூறினான். உயிர்வாழ்வது,மரணமடைவதுஇவ்விரண்டிற்கிடையிலுள்ள தாரதம்மியம் இன்னதென்பதை நன்கு தெரிந்துள்ள ஹஸ்ரத் அவர்கள் கோபத்திலாகி ஒ ஹுர்றே! எனக்கு மரணத்தின் பயத்தைக் காட்டுகின்றாயா? ஆண்பிள்ளை சிங்கங்களுக்கு மரணமானது கௌரவத்தை அளிக்கக் கூடியதாகயிருக்கிறது; அதிலும் நல்லெண்ணங்கொண்டு இஸ்லாத்தின் பாதையில் யுத்தம் புரிந்து மரணமடைவது மிகமிகச்சிரேஷ்டமான தாகுமென்பது உனக்குத் தெரியாதா? எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அவர்களது கூட்டத்தார் 'அதீபுல்ஹஜானத்' என்னுமிடம் போய்ச்சேர்ந்தவுடன் கூபாவாசிகளில் நான்கு நபர்கள் இப்னுபதூலின் வம்சத்தின் மகிமையையும் கியாதியையும் போற்றிப் புகழ்ந்து கவிபாடியவர்களாய் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களது பட்டாளங்களின் சமீபம் வந்தார்கள். ஹுர்றிப்னு எஜீதாகிறவன் அந்நால்வர்களையும் எதிர்க்க நாடினாலும், ஹஸ்ரத் அவர்களைச் சேர்ந்தோர்கள் அதனைத்தடுத்து விட்டார்கள். அதுபொழுது, ஹுர்றுடைய

அபிப்பிராயப்படி இப்னு ஜியாதிடத்திற்குக் கடிதம்கொண்டுபோன கைஸ்பின்ஜுஹைர் என்பவர் கொல்லப்பட்டுப் போய்விட்டதாக அந்நால்வரும் அறிவித்தார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் அச்செய்தியைக் கேட்டு அளவற்ற கைசேதமடைந்து, சத்தியவான்களாகிய எத்தனையோ பெயர்கள் மரணமடைந்துவிட்டார்கள்; எத்தனையோ பெயர்கள் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்; ஆனால் அன்னோர் சத்தியத்தைக் கைக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு எவ்வித மாறுபட்ட நோக்கமுடையவர்களாக இருக்கவில்லை ஆதலின் 'யாஅல்லாஹ்! அன்னோர்களையும் எங்களையும் உனது கிருபைக்குத் தாழால் ஒன்று சேரும்படி உதவி புரிவாயாக' எனப் பிரார்த்தித்தார்கள்.

அதுபொழுது 'தரஹ்பின்அதீ' என்பார், ஹஸ்ரத் அவர்களை நோக்கி "ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது சந்ததியே! யான் நல்லவிதமாகக் கண்ணை விழித்துப் பார்த்தபோதிலும் தங்களுக்குத் துணைபுரியக்கூடிய எந்த மனிதரையுமே காண்பது அறிதாகயிருக்கின்றது; இதுபொழுது உங்களைப் பின்தொடர்ந்து வருபவர்கள் உங்களை எதிர்த்தபோதிலும் அதோகதியாய்விடும்; கூபாவின் ஆரம்பத்தில் பெரியபடையொன்று நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து வந்திருக்கிறேன்; அவர்கள் யாவரும் தங்களுடன் யுத்தம்புரிவதற்காக வேண்டியே தயாராக நிற்பதாகத் தோன்றுகிறது; ஆகவே அல்லாஹ்வுக்காக வேண்டி தாங்கள் சற்றேனும் முன்செல்லாது என்னுடன் மலைமீது வாருங்கள் அங்கு தைக்கூட்டத்தாரில் 20 ஆயிரம் வீரர்கள் தங்களுக்கு ஊழியம் புரிவதற்கும் தங்களது கார்மானத்திற்காகவும் தயாராக இருக்கின்றார்கள் எனத் தெரிவித்துக்கொண்டார். இதனைச் செவியுற்ற உத்தமகுணம் வாய்ந்த சத்தியப் பெரியாராகிய ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் "தரஹ்பின் அதீ அவர்களே! அல்லாஹ்தஆலா தங்களுக்கு கிருபை செய்வானாகவும்; இப்னு ஜியாதிடத்திற்கு அனுப்பிவைத்திருக்கும் தூதுவர் வரும்வரை அவர்களுக்கும் எங்களுக்கும் அறுதிமானம் ஏற்பட்டுப்போயிருக்கிறது; அந்த அறுதிமானம் முடிவடையும்வரை அதற்கு மாற்றமாய் நான் யாதொன்றும் செய்துகொள்ள முடியாதெனத்" தெரிவித்துக்கொண்டார்கள்.

பயங்கரமான சொர்ப்பனம்.

ஹஸ்ரத் அவர்களுடனிருந்தோர் யாவரும் 'பனூமுகாபில்' கூட்டத்தாரின் மாளிகைக்குச்சென்றகாலை ஹஸ்ரத் அவர்களுக்கு தூக்கமேலிட்டு விட்டதால், சற்றுநேரம் துயில் புரிந்துவிட்டு திடீரெனவிழித்தெழுந்து 'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்' எனக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அவர்களின் குமாரராகிய அலிய அக்பர் அவர்கள், அதன்விஷயம் யாதாகுமெனக்கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், ஒட்டகத்தின்மீது வீற்றிருக்கும் ஒருவர், இவர்கள் செல்லுகின்றார்கள்; மரணம் இவர்கள் கூடவே சென்றுகொண்டிருக்கிறது எனக் கூறிக்கொண்டே செல்வதாக சொர்ப்பனங் கண்டேன் எனத் தெரிவித்தார்கள். அதற்கு அலிய அக்பர் அவர்கள், அருமைத் தந்தை அவர்களே! நாம் சத்தியத்தின் மீதில்லையா? என வினவியமைக்கு ஹஸ்ரத் அவர்கள், நாம் சத்தியத்தின்மீது தானிருக்கிறோம்; சத்தியத்தின் மீதிருக்கும்போது எதற்காக மரணத்திற்குப் பயப்படவேண்டும் என ஆக்ரோஷத்தோடு கூறினார்கள். அதன்பின் மறுநாள் பிரயாணிப்பதற்குத் தயாராகயிருக்குங்காலை இப்னுஜியாதின் பதில் வந்துவிட்டது. அதில், ஹுஸைனுக்கு இடவசதி செய்து கொடுக்கக் கூடாதென்றும், ரொம்ப ஹிம்ஸை கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு செய்கிறார்களா வென்பதை கவனிப்பதற்காக தூதுவர் அங்கு தங்கியிருப்பாரென்றும் குறிப்பிடப் பட்டிருந்தது.

இக் கடிதத்தைப் பார்த்தவுடன் எதிரிகள், ஹஸ்ரத் அவர்களைப்பலவகையிலும் நெறுக்குவதற்கு ஆரம்பித்து அளவற்ற கஷ்டங் கொடுக்க முற்பட்டுவிட்டார்கள். எனவே 'புராத்' என்னும் நதிக்கரையிலுள்ள ஓர் ஊரின் தலைவாயலை அடைத்துவிடும்படி 'ஜுஹைர்' யோசனை கூறினர். ஹஸ்ரத் அவர்கள் அவ்வூரின் பெயர் யாதாகுமென வினவியதற்கு, அகர் (பிரயோசனமற்றது) என்பது அந்த ஊரின் பெயராகுமென அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் அவர்கள் மனவருத்தமடைந்தவர்களாய் அங்கிருந்து பாழடைந்த பூமிக்குச்

சென்றார்கள். அந்த இடத்தில் ஆண்டவனது விதியானது அவர்களைத் தடுத்துவிட்டது. அதுதான் 'கர்பலா' வென்னும் மைதானமாகும்.

உமரிப்னு ஸஅதின் வருகை

முஹர்ரம் மாதம் 3உ அதிகாலையில் சூரியன் உதயமாக ஆரம்பித்தவுடன் இப்னுஜியாதின் படைத் தலைவனான உமரிப்னுஸஅத் என்பான் 4 ஆயிரம் வீரர்களுடன் அங்கு தோன்றினான். அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள் அவனைத் திரும்பிப் போய்விடும்படி ஆலோசனை கூறினார்களாதலின், அவன் அதனைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு இப்னுஜியாதிற்குத் தெரியப்படுத்தினான். அதற்கு இப்னுஜியாத் என்பான், ஹுஸைனும் அவரைச் சார்ந்தவர்களும் முதலாவதாக எஜீதுக்கு அறுதிமானஞ் செய்து கொடுக்கட்டும்; அதற்குப்பின் மற்ற விஷயங்களை ஆலோசித்துக்கொள்வோம்; இதற்குப் பின் ஹுஸைனுக்கும் அவரைச் சார்ந்தோர்களுக்கும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கிடைக்கும்படி செய்யக்கூடாதென கண்டிப்பாய் எச்சரிக்கை செய்து உத்திரவு அனுப்பி வைத்தான்.

இவ்வாறு இப்னுஜியாத் உத்திரவு அனுப்பியபின் 500 சிப்பாய்கள் ஆற்றங்கரையில் காவல் வைக்கப்பட்டார்கள். அவ்வாறு காவல்வைக்கப்பட்டிருந்தும் ஹஸ்ரத் அவர்களின் சோதரரான அப்பாஸிப்னு அலீ அவர்கள் 30 சவாரிகளையும், 20 கால்நடைச் சிப்பாய்களையும் அங்கழைத்துச் சென்று அவர்களை எதிர்த்து 20 குடத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த இடத்தில் ஹஸ்ரத் அவர்களுக்கும் சஅதிப்னு அம்ருக்கும் 3, 4 முறை சந்திப்பேற்பட்டது. அதுகாலை ஹஸ்ரத் அவர்கள் 3 நிபந்தனைகள் கூறினார்கள் (1) திரும்பிச் செல்வதற்கு அனுமதி அளித்துவிடுங்கள் (2) எஜீதுடன் நேரில் கலந்து பேசிக்கொள்ளுவதற்கு வசதி அளியுங்கள் (3) எங்களை முஸ்லிம்கள் வசிக்கக்கூடிய ஏதாகிலுமொரு இடத்திற்கு அனுப்பி விடுங்கள்; அங்குள்ளவர்களுக்கு நேரிடுபவை எங்களுக்கும் நேரிடட்டும் என்பதே. ஸஅதிப்னு அம்ர் என்பான் இம்மூன்று நிபந்தனைகளையும் இப்னுஜியாதிற்கு எழுதித் தெரியப்படுத்தினான். எனவே இப்னுஜியாத் என்பான் ஒருவாறு இதற்குக் கட்டுப்பட சம்மதித்தபோதிலும் ஹஸ்ரத் அவர்களின் பந்துக்களிலுள்ள 'ஷும்ர்பின்தில்ஜோஷன் என்பான் சற்றும் சம்மதிக்காது, இது பொழுது ஹுஸைன் என்பார் நமக்கு வழிப்படாது திரும்பிப்போய் விடுவாராயின் அதன் முடிவு வருந்தற்குறிய பெரும் அபாயமானதாக வந்து சம்பவிக்கும் எனக் கூறவே, இப்னுஜியாத் அந்தப்பக்கம் சாய்ந்து ஷும்ருடைய யோசனைப் பிரகாரம் அம்ருப்னு ஸஅத் என்பாருக்கு கீழ் கண்டவாறு நிருபர் வரைந்தனுப்பினார். அதாவது, "ஏ அம்ருப்னு ஸஅதே! ஹுஸைனின் பாதுகாப்பிற்காகவும், அவருக்கு சிபாரிஷ் செய்வதற்காகவும் உம்மை அங்கு அனுப்பிவைக்கவில்லை; அவர் நாம் கூறுகிறபடி செய்வதாக ஒப்புக்கொண்டால் இவ்விடம் அனுப்பிவைக்கவேண்டியது இல்லாதுபோனால் சற்றும் ஆலோசியாது எதிர்த்துப் போர்புரிந்து வழிப்படாத கூட்டத்தார்களை குதிரையின் குளம்புகளால் மிதித்து நாசப்படுத்திவிடவேண்டியது" என்பதே.

கடைசி இரவின் உபதேசம்

இக்கட்டளைக்குப்பின் 'அஸர்' தொழுகையின் நேரத்தில் உமரிப்னு ஸஅத் என்பான், தன் படையினருக்கு உற்சாகமூட்டினான். அதுகாலை ஹஸ்ரத் அவர்கள் இப்னுஜியாதால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் கருத்தை அறிந்துகொண்டு எதிரிகளுடன் எதிர்ப்பதை ஒத்திவைத்து அன்றிரவு ஆண்டவனிடம் பாவங்களை மன்னிக்கத் தேடுவதுடன் பிரார்த்தனையும் புரியவேண்டுமெனக் கருதி, தங்களைச் சேர்ந்த யாவர்களையும் ஒன்றுகூட்டி அடியில் வருமாறு கூறினார்கள். அதாவது, ஆண்டவா? உன்னைத் துதிசெய்கின்றேன்; நீயே எங்கள் வீட்டை நபிப்பட்டம் அளித்துச் சிறப்பித்து வைத்தாய்; மார்க்கத்தை விளங்கிக்கொள்வதையும் குர்ஆன் ஷரீபை அறிந்துகொள்வதையும் அளித்து உதவி புரிந்தாய்; இக்காலை இவ்வுலகின் கண் என்கூட இருப்பவர்களைவிட சிரேஷ்டமானவர்களிருக்கின்றார்களா வென்பது எனக்குப் புலனாகவில்லை? அல்லது என் குடும்பத்தார்களைவிட கஷ்ட சங்கடத்தில் சிக்குண்டு போயிருப்பவர்கள் யாராகிலு மிருக்கின்றார்க

ளென்பதும் எனக்குப் புலனாகவில்லை; ஏ மானிடர்காள்! ஆண்டவன் உங்கள் முயற்சிக்கு நற்கூலி அளிப்பானாகவும். நாளைய தினம் எனக்கும் எதிரிகளுக்குமிடையில் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும். நான் ஆழ்ந்த சிந்தனை புரிந்தபின் எனக்கு ஒருவிஷயம் தோன்றுகிறது அதாவது, நள்ளிரவிலேயே நீங்கள் யாவரும் சந்தடியில்லாது என் சந்ததிகளையும் அழைத்துக்கொண்டு இவ்விடத்தை விட்டுப்புறப்பட்டு எங்காகிலும் சென்றுவிடுங்கள். இதுவிஷயத்தை நான் மனதிருப்தியுடன் கூறுகிறேனாகையால் எவ்விதத்திலும் வருத்தமடையமாட்டேன் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். தவிர பகைவர்கள் என்னையே நாடியிருப்பதால் என் உயிரை வாங்கிக்கொண்டு உங்களை மறந்துவிடுவார்கள் என்பதே.

ஹஸ்ரத் இமாம் அவர்களின் இவ்வார்த்தைகளினால் வானம் பூமி இவைகளுக்கிடையில் கூக்குரல் எழும்பிவிட்டது. ஹஸ்ரத் அவர்களின் குடும்பத்தார்களும் தங்களுக்கேற்பட்டுள்ள சமாளிக்க முடியாத மனக்கவலையால் கூக்குரலிட ஆரம்பித்தார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், இமாம் அவர்களே! தங்களுக்குப்பின் நாங்கள் ஜீவித்திருப்பதென்னும் விஷயத்தை ஆண்டவன் எங்களுக் களிக்காதிருக்க வேண்டுமென்று கூறினார்கள். முஸ்லிமிப்னு உகைலைச் சேர்ந்தவர்கள் யாவரும், ஆண்டவன் மீது பிரமாணமாக எங்களுடைய உயிர், ஐசுவரியம் முதலிய யாவற்றையும் தங்களுக்காக தியாகஞ்செய்யத் தயாராகயிருக்கிறோமென்று கூறினார்கள். முஸ்லிம் அவர்கள், தங்களைத் தனியே விட்டுவிட்டு நாங்கள் எங்கு செல்வது? யான் எனது ஈட்டியைக் கொண்டு எதிரிகளின் நெஞ்சுகளைப் பிளந்துவிட்டு என் உயிரைத் துறக்கும் வரையில் வாள் தாங்கி யுத்தம் புரிவேன்; ஒருக்கால் ஆயுதத்தை இழந்து விடுவேனாகிலும் கல்லை வீசி எதிரிகளை நாசப்படுத்திவிட்டு அதிலேயே என் உயிரையும் தியாகஞ்செய்து விடுவேன் எனக் கூறினார்கள். ஸஅதிப்னு அப்துல்லா என்பவர்கள், ஆண்டவன்மீது பிரமாணமாக நாங்கள் அல்லாஹ்வை சந்திக்கிறவரை தங்களைவிட்டுப் பிரியமாட்டோம்; நான் 70 முறை கொல்லப்பட்டுப்போயினும் நெருப்பில் கரிக்கப்பட்டுப்போயினும் தங்களுடன் சேர்ந்திருப்பதை விட்டு ஒரு இம்மியும் அகன்றுவிடமாட்டேனென்று கூறினார்கள். ஜுஹைர் அவர்கள், ஆயிரம் விடுத்தம் என்னை ரம்பத்தைக்கொண்டு அறுக்கப்பட்டபோதிலும் தங்களைவிட்டுச் சற்றேனும் பிரியவே மாட்டேன் என்று கூறினார்கள். இதேபோன்று இன்னுமனேகர் கூறி முடிந்ததும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தொழுகையிலும் குர்ஆன் ஓதுவதிலும் பிரார்த்தனை புரிவதிலும் பாவங்களை மன்னிக்கத் தேடுவதிலும் இரவு முழுதையும் போக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பகைவர்களின் நடப்போ வேறு விதத்திலிருந்தது. எனவே அவர்கள் இரவு முழுதையும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் படைக்குச் சூழால் சுற்றிக்கொண்டிருப்பதிலேயே போக்கினார்கள்.

இமாம் அவர்களின் உபதேசம்.

முஹற்றம்மாதம் 10-ந்திகதியாகிய வெள்ளி அல்லது சனிக்கிழமையதினம் பஜர் தொழுகைக்குப் பின் 'அம்ர்பின்ஸஅத்' என்பான் தன் படைகளுடன் புறப்பட்டான். ஹஸ்ரத் இமாம் அவர்களும் தங்களைச் சேர்ந்தவர்களை வரிசையாக நிறுத்தி வைத்தார்கள். எதிரிகளின் படையிலிருந்து 22 சவாரிக்காரர்களும் 40 கால்நடைக்காரர்களும் முன் வந்தார்கள். அவர்களில் ஷும்ர் என்பான் குதிரையை விரட்டிக்கொண்டு முன்வந்து 'ஏ ஹுஸைன்! கியாமத்திற்கு முன்பே நெருப்பை ஒப்புக்கொண்டிருக்கிறீர்' எனக் கூறினான். இதைக் கேட்டவுடன் முஸ்லிம் அவர்கள், அவன் மீது அம்பு வீசுவதற்கு நாடினார்கள். உடனே ஹஸ்ரத் அவர்கள் குறுக்கிட்டு யுத்தம் புரிவதில் எவ்வகையிலும் நாம் முந்தக்கூடாதென்று அறிவித்து விட்டார்கள். அதுபொழுது எதிரிகளின் படைகள் முன்வரவே ஹஸ்ரத் அவர்கள் அன்னேருக்கு முன் வந்து உறத்ததொனியில், மானிடர்காள்! சற்று அமர்க்கையோடு என் வார்த்தையைக் கேளுங்கள்; தீவிரஞ் செய்யாதீர்கள்; என் மனதிலுள்ளதை வெளியாக்கிவிட இடமளியுங்கள்; நான் இவ்விடம் வந்த வரலாற்றை சற்றுகேளுங்கள்; நான் கூறுவது சரியாகயிருந்து அஃது உங்களிடம் ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஆய்விடுமாகில், உங்களுக்கு பெரும் பாக்கியமுண்டு; அவ்வாறில்

லாது போனால் உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்; நான் ஒவ்வொரு விஷயத்திலும் ஆண்டவன்மீதே பூர்ண நம்பிக்கை வைத்திருக்கிறேன் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அவர்களின் சந்ததிகள் இவ்வார்த்தையைக் கேட்டவுடன் மனங்கலங்கியவர்களாய் கூடாரத்தினுள்ளிருந்து கொண்டே அழுகைச் சப்தத்தை எழுப்பினர்கள். ஹஸ்ரத் அவர்கள் அப்பாஸ், அலிய அக்பர் இருவர்களையும் அங்கனுப்பி அமர்க்கையாகயிருக்கும்படியும், அழுவதற்குள்ளநேரம் வேறிருக்கிறதென்று தெரிவிக்கும்படியும் செய்துவிட்டு தாங்கள் உபதேசம் புரிய ஆரம்பித்தார்கள். அதாவது,—மானிடர்காள்! எனது வம்சத்தை ஞாபகத்திற்குற்குக் கொண்டுவாருங்கள்; நான் யார் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்; அதற்கு பின் என்னைக் கொன்று விடுவதும் என் மரியாதைக்குப் பங்கம் விளைவிப்பதும் ஆகுமாவென்பதை தலையைக்குனிந்து மனதிடத்தில் ஆலோசனை புரியுங்கள்; நான் உங்கள் நபியின் புதல்வியாகிய பாத்திமாவின் மகனாகவும் நபியின் பெரியதந்தையின் மகனாராகிய அலியின் புத்திரராகவுமிருக்கின்றேன். மேலும் ஷுஹதாக்களின் தலைவரான ஹஸ்ரத் அமீர்ஹம்ஜா (ரலி.) அவர்கள் எனது தந்தையின் சிறிய தந்தையல்லவா? 'ஜஅபரிப்னு தய்யார்' அவர்கள் என் சிறிய தந்தை அல்லவா? உலக ரட்சகர் காத்தமுந் நபிய்யீன் (ஸல்) அவர்கள் என்னுடையவும் என் சோதிரருடையவும் விஷயத்தில் 'சுவனலோக வாலிபர்களின் தலைவர்கள்' என்று கூறவில்லையா? என் வார்த்தை உண்மையற்றதென ஒருக்காலும் நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்; நான் அறிவுடையவனானது முதல் இதுவரை ஆண்டவன்மீது பிரமாணமாக யாதொரு பொய்யும் பேசியதுகிடையாது; இந்நிலைமையில் எதற்காக உருவிய வாளோடு என்னைச் சந்திக்கின்றீர்களென்பதை அறிவியுங்கள்? நீங்கள் என் வார்த்தையை ஒப்புக்கொள்ளாதுபோனால் உங்களிலுள்ள ஜாபிரிப்னு அப்துல்லாஹ் அன்ஸாரீ, அபூஸயீத குத்ரீ, சஹ்லிப்னுஸஅத், ஜைதிப்னு அர்கம், அனஸிப்னு மாலிக் முதலானோர்களிடம் கேட்பீர்களாகில் அவர்கள் அறிவித்துக் கொடுப்பார்கள். தவிர ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் என் விஷயமாகவும் என் சகோதரர் விஷயமாகவும் யாது கூறியிருக்கிறார்களென்பது அன்னோருக்கு நன்கு தெரியும்; இதுகாலை உலகின்கண் என்னைத் தவிர நபியின் புத்திரியின் எந்த ஆண் சந்ததியும் கிடையாதென்னும் விஷயம் நான் கொல்லப்படாதிருப்பதற்குப் போதியனவாக யிருக்கவில்லையா? நான் யாருடைய உயிரையாகிலும் வதை செய்து விட்டேன் என்பதற்காகவோ, அல்லது யாருடைய முதலையாகிலும் அபகரித்துக்கொண்டேன் என்பதற்காகவோ என்னைக் கொல்ல முயற்சிக்கின்றீர்கள்? இல்லாதுபோனால் என் குற்றம் யாதாகுமென்பதை சற்று தெரிவியுங்கள் பார்ப்போம் என்பதே. ஹஸ்ரத் அவர்கள் இப்பிரசங்கத்தில் பலவாறு பலமுறை கூறியும் யாரும் மறுமொழி அளிக்க முன் வராதிருப்பது கண்டு கூபாவாசிகளில் கியாதி வாய்ந்தவர்களின் பெயர்களைச் சொல்லி அழைத்து, கனிவர்க்கம் பழுத்துக் கனிந்துபோய்விட்டது; பூமி பசுவையுள்ளதாக யிருக்கிறது; நதிகள் கரைபுரண்டு ஒட ஆரம்பித்திருக்கிறது ஆகவே, தாங்கள் இதுசமயம் இங்கு வருவீர்களாகில் பெரும் வெற்றி கிடைக்குமென்று நீங்கள், எனக்கு எழுதியனுப்பவில்லையா? எனக் கேட்டார்கள். அதனை அவர்கள் யாவரும் மறுத்து விட்டதால், ஹஸ்ரத் அவர்கள் வெகு கோபத்தோடு எழுந்து நீங்கள்தான் அவ்வாறு எழுதி அனுப்பியிருந்தீர்கள் ஆனால் இதுகாலை உங்களுக்கு திருப்தியில்லாது போனால் என்னைவிட்டு விடுங்கள் நான் திருப்பிப்போய் விடுகிறேன் எனக்கூறினார்கள். அதுபொழுது கைஸிப்னு அஷ்அத் என்பான், 'தங்களது சிறிய தந்தையின் புத்திரரிடம் தங்களை ஒப்புவித்து விடுகிறோம்' எனக் கூறினான். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், ஆண்டவன்மீது பிரமாணமாக நான் யாரிடமும் ஒப்புவிக்கப் படுவதை ஒருக்காலும் அங்கீகரித்துக் கொள்ளமாட்டேன் எனக் கூறிவிட்டார்கள்.

அதுபொழுது இப்னுஸஅத் என்பான் படையினருக்கு ஊக்கமூட்டவே, ஹுற்று என்பார் கூட்டத்தை விட்டுத்தனியே போய் நின்று கொண்டார். இதைக்கண்ட முஹாஜிரிப்னு அவ்ஸ் என்பான் உம்மீது எனக்குச் சந்தேக மேற்படுகிறதென்று தெரிவிக்கவே, ஹுற்று என்பார், நான் துண்டந்துண்டமாக வெட்டப்பட்டுப் போன போதிலும்

ஒருக்காலும் நரகத்தைத் தெரிந்து கொள்ள மாட்டேன் என மெதுவாகக் கூறிவிட்டு குதிரையை விரட்டிக் கொண்டு சென்று ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் படையில் நுழைந்துகொண்டு ரொம்ப வருத்தமடைந்தவராக மன்னிப்புத் தேடிக்கொண்டார். தாங்கள் பெரும்தயாள சிந்தையோடு அவருக்கு மன்னிப்பளித்து விட்டார்கள்.

யுத்த ஆரம்பம்.

இச் சம்பவத்திற்குப் பின் அம்ரிப்னு சஅத் என்பான் வில்லைக்கையிலெடுத்து ஹஸ்ரத் அவர்களின் படையை நோக்கி எய்தக்கால், மானிடர்களே! எல்லோருக்கும் முதலிலேயே நான்தான் அம்பெய்தேன் என்பதற்கு நீங்களெல்லோரும் சாக்ஷியாகயிருங்கள் எனக்கூறினான். அதற்குப் பின் அவன் ஹஸ்ரத் அவர்களின் பட்டாளத்தைத் தாக்க ஆரம்பிக்கவே, கடும்போர் நிகழ ஆரம்பமாய் இரத்த வெள்ளம் பெருகலாயிற்று. எனவே ஹஸ்ரத் அவர்களின் வீரியம் பொருந்திய சிப்பாய்கள் எத்திசையை நோக்கிய போதிலும் அங்குள்ளோர்களை விரண்டோடும்படியே செய்துவந்தார்கள். ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாகயிருந்ததால் எதிரிகள் சற்றுநேரத்திற்கெல்லாம் திரும்பிவந்து சேர்ந்துவிடுகிறவர்களா யிருந்தார்கள். எனவே சில மணிநேரத்திற்கெல்லாம் ஹுஸைன் (ரலி.) அவர்களது படையிலுள்ள கியாதிவாய்ந்த வீரர்களாகிய முஸ்லிமிப்னு ஊஸஜா, ஹுற்று, ஹுபைப்பிப்னு முதாஹிர் ஆகியோர் ஷஹீதாய்விட்டார்கள். இந்நிலைமையில் எதிரிகள் ஹஸ்ரத் அவர்களின் சமீபம் வருங்கால் தொழுகைநேரம் சமீபித்துவிட்டதால், ஹஸ்ரத் அவர்கள் அபூதுமாமாவிடம் சொல்லி தொழுகைக்காக சற்று இடமளிக்குமாறு எதிரிகளிடம் கேட்கும்படி செய்தார்கள். ஆனால், எதிரிகள் இதற்குச் சம்மதியாது ஒரே மூச்சாய் யுத்தத்தை நடத்திக்கொண்டு சென்றார்கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் அவர்களைச் சேர்ந்தவர்களில் ஒருவர் பின்னொருவராய்க் கொல்லப்பட்டுப் போகவே, பனூஹாஷிம்களின் முறையும் அஹ்லபைத்களின் முறையும் வந்தது. எனவே ஆரம்பமாக அலிய அக்பர் ஷஹீதாய் விட்டார்கள். அதுபொழுது திரைமறைவிலிருந்து தன்னுணர்வற்ற ஒரு மாது கிளம்பி வந்து சகோதரரே! என்று கூக்குரலிட்டார்கள். அம்மாது நமது உலகரெட்சகர் (ஸல்.) அவர்களின் அருமைப் புத்திரியாகிய பாத்திமா (ரலி.) அவர்களின் புதல்வியாகிய ஜைனபாகயிருக்கும். உடனே ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் அம்மாதைத் தடுத்து கூடாரத்திற்குள் அனுப்பிவிட்டு அலிய அக்பரின் ஜனஸாவைத் தூக்கிக் கூடாரத்திற்கு முன் வைக்கும்படி செய்தார்கள். அதற்குப் பின் அழகுபொருந்திய இள வாலிபரொருவர் யுத்தகளத்தின்முன் தோன்றித் தனது வீரியத்தைக் காண்பித்து ஷஹீதாய்விட்டார். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்கள் அவ் விள வாலிபரின் தலைப் பக்கம் நின்றுகொண்டு அவர் காலை பூமியில் தேய்த்துக்கொண்டிருப்பதைக்கண்டு உம்மைக் கொன்றவர்கள் நாசமாய்ப் போய்விடக்கடவர்; அன்னோர் இறுதித் தீர்ப்புநாளில் உமது பாட்டனாருக்கு என்ன சொல்லப்போகின்றார்களோ தெரியவில்லை எனக்கூறி, அவரை மடியில் தூக்கிக்கொண்டபோது அவருடைய நெஞ்சானது ஹஸ்ரத் அவர்களின் நெஞ்சோடு சேர்ந்திருந்தது; கால்கள் பூமியிலிருந்தது; இந்நிலைமையில் அவரை அலிய அக்பரின் ஜனஸாவுக்குப் பக்கத்தில் வைத்தார்கள். அவ்விள வாலிபர் ஹஸ்ரத் ஹஸன் (ரலி.) அவர்களின் அருமைப் புதல்வரான காஸிமாகும்.

அதே நேரத்தில் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. எனவே தாங்கள் அக்குழந்தையை மடிமேல் வைத்துக்கொண்டு காதில் பாங்கு சொல்லிக்கொண்டிருக்குங்கால் ஒரு அம்பானது அங்கு வந்து சிசுவின் தொண்டையில் சிக்கிக்கொண்டது. ஹஸ்ரத் அவர்கள் அந்த அம்பைத் தொண்டையைவிட்டுப் பிடுங்குங்கால் இரத்தஞ் சொறிந்ததாக வெளி வந்தது. உடனே ஹஸ்ரத் அவர்கள், யாஅல்லாஹ்! எங்களுக்கு உதவி அளிப்பதைத் தடைசெய்துவிட்டாய் ஆகவே, எதில் எங்களுக்கு நலவிருக்கின்றதோ அதைச் செய்வாயாக என்று கூறினார்கள். பனூஹாஷிம்களிலும் அஹ்லபைத்களிலும் ஒருவருக்குப்பின் ஒருவராய் ஷஹீதாய்விடவே ஷஹீதீன்களின் தலைவரான ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் முறை வந்துவிட்டது. அதுகாலை ஹஸ்ரத் அவர்களோ தனியாக யுத்த

களத்தில் நின்றுகொண் டிருப்பதைக் கண்ட பகைவர்கள், ஆடம்பரத்தோடு அங்கு வந்தபோதிலும் ஹஜ்ரத் அவர்களைத் தாக்குவதற்கு யாரும் துணிவுகொள்ளவில்லை. ஒவ்வொருவரும் ஹஸ்ரத் அவர்களைக் கொன்ற பழி மற்றவர்மீது ஏற்படவேண்டுமென்பதையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதுபொழுது 'ஷ¯ம்ரிப்னு தில்ஜோஷன்' என்பவன் படையினருக்கு உற்சாகமூட்டியதால் அனியாயகாரர்கள் ஹஸ்ரத் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். இதனைக்கண்ட ஒரு சிறுவர் கூடாரத்திலிருந்து ஒரு தடியைத் தூக்கிக்கொண்டு யுத்தகளத்திற்கு ஓடிவந்தார். ஹஸ்ரத் அவர்கள் சப்தங்கொடுத்து அச்சிறுவரைத் தடைசெய்து கொள்ளும்படி கூறினார்கள். அதனால் ஹஸ்ரத் ஜைனப் அவர்கள்கூடியவரை அவரைத் தடுத்துப்பார்த்தும் அவர் மீறிக்கொண்டு ஹஸ்ரத் அவர்களது பக்கத்தில் வந்து சேர்ந்துவிட்டார். அந்த நேரம் 'பஹ்ரிப்னுகஅப்' என்பவன் ஹஸ்ரத் அவர்கள்மீது வாள் எடுத்தநேரமாகயிருந்தது. உடனே அச்சிறுவர், ஏ அநியாயகாரனே! என் சிறிய தந்தையின்மீதா வாட்பிரயோகஞ்செய்கின்றாய் எனக்கூறினார். இவ்வாறு கூறியவுடன் ஹஸ்ரத் அவர்கள்மீது வீசப்பட்ட வாளானது அந்தச் சிறுவர்மீது விழுந்தது. அதனை அச்சிறுவர் தடுக்கவே, கை துண்டாக்கப்பட்டு தொலியுடன் ஒட்டித் தொங்கிக்கொண்டிருந்தது. அதனால்அச்சிறுவர் கஷ்டம் சகிக்க முடியாது அழ ஆரம்பித்தார். ஹஸ்ரத் அவர்கள் அச்சிறுவரை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு கஷ்டத்தைச் சகித்துக்கொள்; அல்லாஹ்த ஆலா உனக்கு நற்கூலி அளித்து அவனது சாலிஹான அடியார்களுடன் உம்மையையும் சேர்த்துக் கொள்வான் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அவர்களது ஷஹாதத்.

பிறகு பகைவர்களின் வாட்பிரயோகம் ஹஸ்ரத் அவர்களை நோக்கியது. அதுகாலை சுத்த வீரியபராக்கிரமசாலியான ஹஸ்ரத் அவர்கள், தங்கள் வாளைக் கையில் பிடித்தவர்களாய் பகைவர்களின் பக்கல் முன்னோக்கி வீரியத்தோடு மகா சாமர்த்தியமான விதத்தில் தங்கள் பெயர் உலகின்கண் என்றும் விளங்கிக்கொண்டிருக்கும் விதமாய் யுத்தம் புரிந்துகொண்டிருக்கும் போது தாகம் சகிக்கமாட்டாதவர்களாய் 'புராத்' என்னும் நதியை நோக்கிச் செல்லுங்கால், திடுகூறாகப் பகைவர்களின் அம்பானது வந்து ஹஸ்ரத் அவர்களது தொண்டையில் பதிந்துவிட்டது. தாகத்தால் நாவறண்டு போயிருக்கக்கூடிய ஹஸ்ரத் அவர்கள், அம்பைப் பிடுங்கிக்கொண்டு இருகைகளையும் முகத்தின் பக்கல் உயர்த்தவே, இருகைகளும் இரத்தத்தால் நிரம்பிவிட்டது. தாங்கள் அந்த இரத்தத்தை வானத்தின் பக்கல் எறிந்துவிட்டு, யா அல்லாஹ்! இந்த அனியாயக்காரர்கள் ரசூலின் பேரருடன் எவ்வாறு நடந்துகொள்கிறார்களென்பதை நீ பார்த்துக்கொண்டிருக்கிறாய் எனக் கூறிவிட்டு, குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து கூடாரத்தின் பக்கல் திருப்பினார்கள். உடனே பகைவர்கள் பாதையைத் தடுத்துவிட்டதைக் கண்டு அன்னோர் கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறார்களென்பதைத் தெரிந்துகொண்டு, ஹஸ்ரத் அவர்கள் ஷ¯ம்ர் இடத்தில் தங்களது கடைசி வேண்டுகோளைத் தெரிவித்துக் கொண்டார்கள். அதாவது, தங்களது கூடாரத்தை அனியாயகாரர்கள், துற்செய்கை புரிவோர்கள் ஆகியவர்களைவிட்டு காப்பாற்றி வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ஷ¯ம்ர் என்பவனும் அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டான். பகைவர்களின் மனம் துணிவுகொண்டிருக்குமாகில் இதற்கு வெகு நேரத்திற்கு முன்பே ஹஸ்ரத் அவர்கள் கொல்லப்பட்டுப் போயிருப்பார்கள். ஆனால் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஈரல் துண்டாகிய இமாம் அவர்களின் இரத்தப்பழி தங்கள்மீது சாறலாகாதென்று ஒவ்வொருவரும் கருதி விலகியிருந்தார்கள். அதுகாலை ஷ¯ம்ர் என்பான் கடுமையாக அலறியதால் 'இப்னுஷரீக்கதைமீ' என்பவன் முன்வந்து ஹஸ்ரத் அவர்களின் இடது கையைக் காயப்படுத்திவிட்டு தோள்மீது அம்பு வீசினான். அதனால் ஹஸ்ரத் அவர்கள் களைப்புறவே, 'சினானிப்னு அனஸ நகயீ' முன்வந்து அம்பு எய்தான் அதனால் ஹஸ்ரத் அவர்கள் பூமியின்மீது விழுந்துவிட்டார்கள். உடனே அந்த மூதேவி ஹஸ்ரத் அவர்களது தலையை அறுத்துவிடும்படி உத்திரவிட்டான். ஒருவன் தலையை அறுப்பதற்காக ஓடிவந்தும் மனந்துணியாது நின்றுவிட்டான். உடனே 'சினான்பின் அனஸ்' என்பான் கோபாக்கினி பொங்கிய

வனுய்த் தானே கீழே இறங்கி ஒரே தடவையில் அருமை சிரசை ஜடலத்தைவிட்டுப் பிறித்துவிட்டான். அதுபொழுது ஹஸ்ரத் அவர்களின் மேன்மைவாய்ந்த சரீரத்தில் 33 அம்புக்காயங்களும், 34 வாள் வீச்சுகளும் ஏற்பட்டிருந்தது. அதுகாலே ஹஸ்ரத் அவர்களின் சரீரத்தைக் குதிரைக் கொளம்புகளால் நசுக்கிவிடும்படி அம்ரிப்னு சஅதுக்கு உத்திரவிடப்பட்டது. எனவே அந்தவிஷயமும் ஹஸ்ரத் அவர்களின் தூய்மை வாய்ந்த சரீரத்தின்மீது நடத்தாட்டப்பட்டுப்போயிற்று. ஆகவே 10 குதிரைவீரர்கள் குதிரையைக்கொண்டு ஹஸ்ரத் அவர்களின் சரீரத்தை மிதித்தார்கள். அந்தயுத்தத்தில் ஹஸ்ரத் அவர்களைச் சேர்ந்தோரில் 72-நபர்களும் கூபாவாசிகள் 88-பெயரும் கொல்லப்பட்டுப் போனுர்கள்.

ஷஹாதத்திற்குப் பின்னுள்ள சம்பவம்.

ஜைனப் அவர்கள், அனீதியாகக் கொல்லப்பட்டவர்களின் மையத்துகளைப் பார்த்தவுடன் நடுநடுங்கிப்போய் தன்னுணர்வற்று முறைப்பாடு செய்ய ஆரம்பித்து, ஏ முஹம்மதே! (ஸல்.) ஹுஸைன் மணலில் கிடப்பதையும் அவர்கள் இரத்தம் மணலோடுகலந்திருப்பதையும் திரேகம்முழுதும் துண்டந் துண்டமாகப் போயிருப்பதையும், உங்கள் பெண் சந்ததிகள் சிறைவைக்கப்பட்டிருப்பதையும் ஆண் சந்ததிகள் வெட்டப்பட்டுப் போய் அவர்கள்மீது காற்று மண்ணைப் போடுவதையும் பாருங்கள் எனக் கூறினுர்கள்.

வெட்டுண்டுபோன யாவர்களின் சிரங்களையும் அறுத்துக்கொண்டு அம்ரிப்னு ஸஅத் என்பான் மறுநாள் யுத்தகளத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றுன். அச்சிரங்கள் யாவற்றும் இப்னு ஜியாதின்முன் வைக்கப்படவே அங்கிருந்தோர் யாவரும் நடுக்கமுற்றுவிட்டனர். அதுகாலே இப்னு ஜியாதின்கையில் ஒரு பிரம்பு இருந்தது. அவன் அதனுல் ஹஸ்ரத் அவர்களின் உதட்டில் அடித்தான். பல முறையும் இவ்வாறு அடிக்கவே, நாயகம் (ஸல்.) அவர்களின் சஹாபியாகிய 'ஜைதிப்னு அர்கம்' அவர்கள் மாலே மாலேயாய்க் கண்ணீர் வடித்தவர்களாய் சப்தத்தோடு எழுந்து ஆண்டவன்மீது பிரமாணமாக எம் பெருமானுர் (ஸல்.) அவர்கள் தங்கள் உதட்டை இந்த உதட்டின்மீது வைத்து முத்தம் கொடுத்திருப்பதை எத்தனையோமுறை யான் பார்த்திருக்கிறேன் எனக் கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

எஜீதின் கைசேதம்.

இப்னு ஜியாத் என்பான், ஹஸ்ரத் இமாம் அவர்களின் சிரசை ஒரு மூங்கிலில்கோர்த்து பெண்டீர்கள் குழந்தைகள் சகிதம் திம்ஷக்கிலுள்ள எஜீதிடத்திற்கு அனுப்பி வைத்தான். எஜீத் என்பான் கர்பலாவில் நடைபெற்ற துக்ககரமான நிகட்சிகளைக் கேட்டவுடன் பிரமித்துப்போய் அல்லாஹ்தஆலா இப்னுஜியாதை நாசமாக்கி விடுவானுக; ஆண்டவன்மீது பிரமாணமாக நான் அங்கிருப்பேனுகில் இவ்வாறுன சம்பவமொன்றும் நிகழ்ந்திராது; அல்லாஹ்தஆலா ஹுஸைன் (ரலி.) அவர்களுக்குத் தனது சொந்தக் கிருபையை அளிப்பானுகவும் எனக்கூறினுன் (இப்னுஜுரைர் தாரீக் காமில்)

அன்றுமாலேப்பொழுது, எஜீதாகிறவன் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது சந்ததிகளைத் தலேவர்களின்முன்னிலேயில் அழைத்துஆலோசனைபுரியஆரம்பித்தான். உடனே 'நுஃமானிப்னுபஷீர்' அவர்கள், ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் இன்னோர்களை இந்த நிலேமையில் பார்ப்பார்களாகில்எவ்வாறு நடந்துகொள்ளுவார்களோ அந்தவிதமே நடந்துகொள்ள வேண்டுமென்று கூறினுர்கள். அது பொழுது ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் புதல்வியாகிய பாத்திமா (ரலி.) அவர்கள், ஏ எஜீதே! இவர்கள் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் சந்ததியாகயிருக்கும் என்பது உனக்குத் தெரியாதா? எனக்கூறவே, எஜீதும் மற்றும் அங்கிருந்தோர்யாவரும் தன்னுணர்வற்றவர்களாய் தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தார்கள். இதற்கிடையில், நிகழ்வுற்ற சம்பவம் எஜீதின் அந்தப் புறத்திற்குத் தெரிந்து எஜீதின் மனைவியாகிய ஹிந்து உடனே முகமூடி அணிந்துகொண்டு வெளியில்வந்து அமீருல் முஃமினீன் அவர்களே! ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் புதல்வியாகிய பாத்திமாவின் குமாரருன ஹுஸைன் (ரலி.) அவர்களின் சிரமா வந்திருக்கிறது? எனக் கேட்கவே, ஆம் என்று எஜீத் கூறினுன். அம்மாது, அதைப் பார்த்துக்கொண்டே அழுது கொண்டிருந்கள்; இப்னுஜியாத்

ரொம்ப அவசரப்பட்டுவிட்டான்; அல்லாஹ்த ஆலா அவனையும் சீக்கிரமாகக் கொன்றுவிடுவான் எனக் கூறினள். பிறகு ரசூலுல்லாஹ்வின் சந்ததிகள் எஜீதின் வீட்டிற்குள் புகவே, அங்குள்ளோர் யாவரும் இவர்களின் நிலைமையைக் கண்டு தன்னுணர் வற்றவர்களாய் அழ ஆரம்பித்தார்கள். இன்னேர் ஏஜீதிடம் இருக்கும் காலமெல்லாம் அவன் பல முறை, தான் செய்த தவறின்மீது கைசேதமடைந்தவனாய் அழுது கொண்டு இப்னுஜியாதை தூஷித்துக்கொண்டேயிருந்தான். நன்றிகெட்ட மனிதரில் எஜீதைவிடசற்குணத்தோடு நடந்துகொண்ட வேறுயாரையும் யான் பார்க்கவில்லை என்று ஹஸ்ரத் சகீனு (ரலி.) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குச் சில காலத்திற்குப் பின் ஹஸ்ரத் அவர்களின் குடும்பத்தார்களை எஜீதானவன் மதீனவிற்கு அனுப்பிவைத்தான். அவர்கட்கு துணையாக அனுப்பப்பட்டவர் வழிப்பாதையில், துக்கத்தில் சிக்குண்டிருப்பவர்களுடன் தக்க முறையில் நடந்து கொண்டாராதலின் அவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடம் வந்து சேரவே, ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் புதல்வியாகிய ஜைனப் (ரலி.) அவர்களும், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் புதல்வியாகிய பாத்திமா (ரலி.) அவர்களும் தாங்கள் அணிந்திருந்த காப்புகளையும் சோட்டிகளையும் கழற்றி அவரிடம் அனுப்பி, தாங்கள் எங்களுடன் நடந்து கொண்டதற்குப் பகரமாய் இதனைக் கொடுக்கின்றோம்; எங்களிடம் இதைத் தவிர வேறு யாதொன்றும் கிடையாதெனச் சொல்லி யனுப்பினர்கள். அத்துணைவர் அந்த நகைகளைத் திருப்பி அனுப்பிவிட்டு, ஆண்டவன் மீது பிரமாணமாக உலகில் கிடைக்கும் ஏதாகிலுமொரு வஸ்துவை அபேக்ஷித்து உங்களுடன் யான் சற்குணத்தோடு நடந்து கொள்ளவில்லை; எனக்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் மீதுள்ள பிரீதிதான் உங்களோடு அவ்வாறு நடந்து கொள்ளும்படி செய்தது எனக் கூறிவிட்டார். பிறகு இவர்கள் யாவரும் மதினவிற்குள் புகவே, பட்டணம் முழுதும் துக்கக்குறி தென்பட்டது. பனூஹாஷிம்களின் பெண்களெல்லாம் அழ ஆரம்பித்து வீடுகளிலிருந்து வெளியில் வரமுற்பட்டார்கள். அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி.

யான் எதற்காக முஹம்மத் அரபீ (ஸல்.) அவர்களின் அடிமைத்தனத்தை ஒப்புக்கொண்டேன்?

நவ்முஸ்லிம்காலித் லதீப் கோபா அவர்களின் வீரமொழிகள்.

(மௌலாஞ அப்துல்மஜீத் சாஹிப் கர்ஷீ வரைவது)

நமது அருமை சோதரராகிய மிஸ்டர் காலித் லதீப் கோபா, சில நாளைக்குமுன் மிஸ்டர் கனியாலால் கோபா என்னும் பெயருடன் அழைக்கப்பட்டு வந்தாராகையால், அவரை இவண் அறிமுகஞ் செய்துவைக்கவேண்டுமென்னும் அவசியமில்லை. அவருடைய தூய்மை வாய்ந்த தன்மையும் தைரியமும் வீரியமும், அவர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட சம்பவத்திலிருந்து நன்கு விளங்கக் கிடக்கின்றது. அவர், பஞ்சாபில் கல்வி மந்திரியாகவும் தேசிய வர்த்தகத் தொழிலில் கியாதியோடு சிறந்து விளங்கி வந்தவராகவுமான லாலா ஹரிகிருஷ்ண லால்ஜீயின் அருமைப் புதல்வராகும். அவர் கியாதி வாய்ந்த பாரிஸ்டராகவும் பிரக்யாதிபெற்ற லாகூர் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் பிரதான டைரக்டராகவுமிருந்தார். அவருடைய ஆங்கில நடையானது புகழுக் குறியதாகயிருந்தது. எனவே அவர் 'இந்தியத் தாய்' என்னும் நூலுக்கு எழுதிய மறுப்பானது ஜனங்களிடையே போற்றிப் புகழப்படுவதாக யிருந்து வருகிறது. இவ்வாறன மேன்மைவாய்ந்த மகா

புருஷர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட செய்தியானது பெரியதோர் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாகயிருக்கிறது. அது விஷயமாய் நாம் எவ்வளவுதூரம் பெருமை பாராட்டியபோதிலும் அது போதியனவாகாதென்பது திண்ணம். அல்லாஹ்தஆலா இந்த நமது காலிதை, காலித் (ரலி.) அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும்படி செய்வதுடன் உலக முழுதிற்கும் முன் மாதிரியாகத் திகழும்படியும் செய்வானாக. ஆனால் இந்து நண்பர்கள், நமது சோதரர் விஷயமாக அநேகப் புழுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டிருக்கின்றார்களாதலின் அதற்கு, தமது செய்கையின் அழகிய முன்மாதிரியைக் கொண்டும் மனத்தூய்மையைக் கொண்டும் விசால நோக்கத்தோடு பதில் கொடுக்குமாறு மிஸ்டர் காலித் லதீபை வேண்டிக்கொள்கின்றேன். ஒரு உண்மையான முஸ்லிம் தன்னிடத்தில் தர்க்கஞ் செய்கிறவர்களிடம் சற்குணத்தோடும் பெருந் தன்மையோடும் நடந்துகொள்வது தான் மகாசிரேஷ்டமானதாகும். அதுதான் தக்கபயன் அளிக்குமென்பதும் கண்கூடு. எனவே நமது சோதரராகிய காலித், எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் கொடிக்குத்தாளால் நின்றுகொண்டு தமது தூய்மைவாய்ந்த சற்குணத்தையும் ஆத்மவாழ்க்கையின் முன்மாதிரியையும் உலகத்தாரின் முன் வெளியிடுவாராகில், பகைவர்களால் கூறப்படும் ஆக்ஷேபணைகளெல்லாம் அவருக்குமுன் தலைசாய்ந்து விழுந்துவிடும்படி நேரிடுமென்பது திண்ணம். இதற்குப்பின், சோதரர் காலித்லதீப் இஸ்லாத்தைத்தழுவிய பிறகு பள்ளிவாசலில் ஆற்றிய சொற்பெருக்கைக் குறிப்பிடுவது கொண்டு பெருமை அடைவோம் (கர்ஷீ)

ஜனாப் காலிதின் சொற்பொழிவு

அருமை சோதரர்காள்! நான் இஸ்லாத்தைத் தழுவிய விஷயமாக, என்குடும்பத்தார்களையும் என்னையும் நீங்களெல்லோரும் எவ்வளவு உள்ளன்போடு வரவேற்றீர்களோ அதற்கு யான் நன்றிபாராட்ட அசக்தனாகயிருக்கின்றேன். வழிதவறிப்போன பிரயாணி ஒருவன் பல ஆண்டுகள்வரை வனங்களில் அலைந்து திரிந்துவிட்டுத் தன் சுயபதியை அடைந்துவிடுவானாகில், அவனுக்கு எவ்வளவு சந்துஷ்டி ஏற்படுமோ அவ்வளவு ஆனந்தம், நான் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டதால் எனக்கேற்பட்டிருக்கிறது.

இஸ்லாம், ஏகசகோதரத்துவத்தை அளிக்கிறதென்பதற்கு, நாமெல்லோரும் வேற்றுமையில்லாத ஒரேசகோதரர்கள் போன்று திகழ்வதைவிட வேறுகாரணம் வேண்டுமோ? அல்லாஹ்தஆலா, வழிகேட்டில் ஆழ்ந்து கிடக்கும் லக்ஷக்கணக்கானவர்களில் என்னைத் தெரிந்து நேர்வழி காண்பித்து இதரர்களுக்கு முன்மாதிரியாகச் செய்ததுடன் உண்மையை அடைவதற்குள்ள வழி இஸ்லாத்தைத் தவிர வேறெதிலுமில்லை என மானிடர்கள் யாவரும் அறிந்துகொள்ளும்படி செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

நண்பர்காள்! மானிடன் சிசுவாக இவ்வுலகின்கண் ஜனித்தபின் தசை, தொலி முதலிய யாவற்றும் ஏற்படுகிறது; அதன்பின் அவன் ஒரு வஸ்துவைத் தொடுகிறான்; பார்க்கின்றான்; முகக்கின்றான்; அவனுக்கு ஐயறிவு உண்டாகிறது; அதற்குப்பின்பலவாறானசுபாவங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதுகாலை அறிவு பூராயமடையாதிருப்பதால் அவன்சில காலம்வரை யாவற்றையும் ஆச்சரியத்தோடு நோக்குகின்றான்; பலவஸ்துக்களுக் கிடையில் வித்தியாசம் செய்துகொள்ள முடியாதவனாகயிருக்கின்றான். அதற்குப்பின் மெள்ள மெள்ள தாய் தந்தையர்கள் அறிவித்துக் கொடுப்பது கொண்டு வஸ்துக்களின் குணங்களைத்தெரிந்துகொண்டு உலகவாழ்க்கையின் பிரதான நோக்கத்தைக் கைகொள்கின்றான். அதுபோலவே மனிதனின் ஆத்மசக்தியும் சிறுபிராயத்திலிருந்து மெள்ள மெள்ள பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு நிலைமையை அடைகின்றது; அதனால் அவன் மறதி என்னும் தூக்கத்தினின்று விழித்து உண்மை என்னும் பிரகாச ஜோதியின் பக்கல் வந்துவிடுகிறான்.

மோகத்தின் பெருவெள்ளம்

நான் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டதால் எனது இந்து நண்பர்கள், தங்கள் மனதில் நிரம்பிக் கிடக்கும் கோபத்தைப் பலவாறு வெளியாக்கி வருகின்றார்கள். ஆனால் அவர்கள் என்மீது கூறும் பிரதான பழிகளிலொன்றை நான் ஏற்றுக்கொள்கின்றேன்

அதாவது, இந்துக்களின் பத்திரிகைகளிலனேகம், நான் ஒரு நிலையிலுள்ள உண்மை இந்துவாகயிருக்கவில்லை என குறை கூறுகின்றது. அதனை நான் முழுமனதோடு ஏற்று அவ்வாறில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். எனவே நான் அதுகாலை ஒரு வஸ்துவின்மீது விருப்பங்கொண்டு மனதைப் பறிகொடுத்த பைத்தியகாரனே போன்று இருந்துவந்தேன். அந்த மோகத்தைக்கண்டு சிலர், மோகமானது அவனைக் குருடனாகச் செய்துவிட்டதென்றும், மூளையில் கெடுதல் ஏற்பட்டுவிட்டதென்றும் கூறினர். அதனால் பேரின்பமோகத்தின் உண்மையை அக்குருடர்கள் தெரிந்துகொள்ள முடியாது போயிற்று. எனவே பிரகாசத்தின் மழைத் துளிகளைக் குறுகிய பார்வையுடையோர் காண முடியாதென்பது திண்ணம்.

இஸ்லாத்தின்மீது விருப்பங்கோண்டதன் ஆரம்பம்

எனதருமை சோதரர்காள்! எனக்கு இஸ்லாத்தின்மீது ஏற்பட்டுள்ள விருப்பமானது புதிதாக ஏற்பட்டதல்ல. இற்றைக்கு 15 ஆண்டுகளுக்குமுன் நான் மிஸ்ரிலிருந்த கால முதல் என் மனதில் அந்த நெருப்பின் கங்கிகளானது சுடர்விட்டெறிந்து கொண்டிருந்தது. அதுகாலை இஸ்லாத்தின் சத்தொழுக்கமும் ஆசார சீர்திருத்தமும் என் மனதில் அழிக்கமுடியாத ஒரு குணபாட்டை உண்டாக்கிவிட்டது. அதற்குப் பின் மெள்ள மெள்ள அக்கங்கிளானது எறிந்துகொண்டேயிருந்து கடைசியில் என் மனதிலுள்ள குப்பைக் கூளங்களை எல்லாம் கறித்துப் பொசுக்கி விட்டதால், இதுகாலை என் மனம் மூளை இவைகளெல்லாம் இஸ்லாத்தின் உண்மையைக்கொண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தவிர நான் மிஸ்ரிலிருந்து திரும்பி வந்தபின் எப்பொழுதாகிலும் ஒரு மஸ்ஜித் வழியாகச் செல்ல நேரிடுமாகில், அதன் சங்கை மரியாதையை யுண்ணி என்சிரம் அதற்குமுன் பணிந்தே செல்லும். மேலும் அதுகாலை மஸ்ஜிதின் மினாராக்கள் அதன் சமீபம் அழைப்பதுபோலவும், முஅத்தினாகிறவர் தொழுகையின் பக்கல் வரும்படியும் ஜெயத்தின் பக்கல் முன்னோக்கும்படியும் விறைந்து என்னை அழைப்பதுபோலவும் தோன்றும். எனவே என் மனமானது நெஞ்சைவிட்டுப் பிறிந்து போய் ஈமானுடையவர்களுடன் சேர்ந்துகொண்டு ஏகப்பரம்பொருளாகிய அல்லாஹ்த ஆலாவுக்கு வழிப்பட்டு நடக்கும் நல்லடியார்களில் சேர்ந்துகொள்ளுவதற்கு நாடும்.

இஸ்லாத்தின் மூலக்கோள்கை

நான் இதர மதங்களைவிட இஸ்லாத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டதற்குள்ள காரணங்களிற் சிலவற்றைக் குறிப்பாக இஸ்லாத்தைவிட்டுப்புறம்பாக யிருக்கக்கூடியவர்களுக்குத்தெரியப்படுத்துகின்றேன். (1) இஸ்லாமிய மார்க்கம் சாதாரணத் தன்மை பொருந்தியதாகயிருப்பதும், இஸ்லாமிய கடமைகள் விரல் விட்டெண்ணக்கூடியதாக யிருப்பதும், அவைகளடங்கலும் இரு வஸ்துக்களின்மீது அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறதென்பதும், அவைகளை சாதாரண அற்ப புத்தியுள்ள மனிதனும் அறிந்துகொள்ளக்கூடிய விதத்திலிருக்கிறதென்பதுமாகும். அவ்விரண்டு விஷயங்களாவன:—அல்லாஹ்த ஆலாவை ஓர்மைப்படுத்துவது அதாவது அவன் யாருக்கும் தந்தையாக யிருக்கவில்லை, அவனுக்கு யாதொரு சந்ததியுமில்லை, அவன் தனித்தவனாக யிருக்கிறான் என்பதும், நாயகம் (ஸல்.) அவர்களின் நபித்துவத்தை ஒப்புக்கொள்வது மாகும்.

(2) இரண்டாவது காரணம், இஸ்லாத்தின் சமத்துவக் கொள்கையாகும். கிறிஸ்தவ மார்க்கத்தில் கருத்த ஹபஷி ஒருவன், வெண்மை நிறத்தையுடைய பெண்ணொருத்தியைப் பார்ப்பதுகொண்டு அவன் அனியாயமாகக் கொல்லப்படுகிறான்; கருத்த நிறத்தையுடைய கிறிஸ்தவர்கள் பிரத்தியேகமான கோவிலில் வணக்கம் புரிகின்றார்கள். ஆனால் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஒவ்வொரு மஸ்ஜிதின் தலைவாயல்களும் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது; ஒரேவரிசையில் மஹ்மூத் கஜ்னவீ என்னும் அரசரும் அயாஜ் என்னும் அடிமையும் நின்று தொழுகையை நிறைவேற்றுகின்றார்கள்; அவ்விடத்தில் அடிமை என்றோ அரசரென்றோ எவ்வித வித்தியாசமும் பாராட்டப்படுவதில்லை. எனவே எஜமான் வேலைக்காரன், ஏழை சீமான் முதலிய யாவரும் ஒன்று சேர்ந்து ஆண்டவனது சமுகம் வந்துவிடுவார்களாயின் எல்லோரும் ஒன்றுபோலாய் விடுகின்றார்கள்.

இஸ்லாத்தின் அஸ்திவாரமானது மேலே கூறப்பட்டுள்ள இரு வஸ்துக்களின்மீதிருப்பதால், இஸ்லாத்தைத் தழுவிக் கொள்வதற்குவேறு பிரத்தியேகக் கட்டுப்பாடொன்றுங் கிடையாது. எனவே இஸ்லாத்தை அங்கீகரிப்பதற்கு இவ்விருவிஷயங்களே போதியனவாக யிருக்கின்றது. அதுவாகிறது இஸ்லாத்தின் கலிமாவாக யிருக்கும். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு) இதனைச் சொல்வது கொண்டு உலகின் பெரியதோர் சகோதரத்துவப் பிரீதியின் பந்தம் திறக்கப் பட்டுப்போய்விடுகிறது. அதில் ஒவ்வொரு மனிதனும் சரிசமமான அந்தஸ்தை வகிக்கின்றான். இது சாதாரணமாக மனதில்மட்டும் கிரகிக்கக்கூடிய விஷயமாகயில்லாது செய்முறையில் அனுஷ்டித்துக்காட்டும் விஷயமாக யிருக்கிறது. எனவே புதிதாய் இஸ்லாத்தைத் தழுவும் ஒருபுதிய முஸ்லிமானவன் அதேநிமிஷத்தில் மஸ்ஜித்திற்குள் புகுந்து சக்ரவர்த்திக்குப் பக்கத்தில் நிற்பதற்கு அருகனாகவும் அவருடன் சேர்ந்து ஒரே தட்டத்தில் சாப்பிடுவதற்குத் தகுதியுள்ளவனாகவுமாய் விடுகிறான்.

இந்துக்களும் தீண்டாமையும்.

(3) நான் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டதற்குள்ள மூன்றாவது காரணம், அதே சகோதரவாஞ்சை இஸ்லாத்தில் மிளிர்ந்து காணப்படுவதேயாகும். இதுகாலை இந்துக்களில், தீண்டாதார்களின் கோயில் பிரவேச விஷயமாய்ப் பெரும் எதிர்ப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இஸ்லாம் மார்க்கமானது மானிடர்களில் தீண்டப்படாதோர்களென்று ஒரு சாராரை ஒதுக்கிவைப்பது கிடையாது. அந்தப்பிணி நமது தூய்மைவாய்ந்த இஸ்லாம் மார்க்கத்தைத் தொடவேயில்லை. இதுவன்றி இந்துக்களில் ஒருசாரார் தீண்டாதார்களைச் சுத்திசெய்து தீண்டப்படுபவர்களில்சேர்த்துவிட முயற்சிசெய்து வருகின்றார்கள். நம்முடைய தூய்மைவாய்ந்த இஸ்லாம் மார்க்கத்திலோவெனில், ஒருவன் தான் முஸ்லிமாய்விட்டதாக அறிவிக்கவே அவன் முஸ்லிம்களின் சகல பாத்தியதைகளையும் அடைவதற்கு அருகனாக ஆய்விடுகின்றான். அந்த இடத்தில் அவன் தீண்டப்படுபவனா அல்லது தீண்டப்படாதவனா என்னும் பிரச்சினையே எழுவதில்லை. ஆகவே தீண்டப்படாதோர் யாவரும் சற்றும் யோசியாது இஸ்லாத்தின் அருட்கொடையின் நிழலுக்குத் தாழால்வந்து சேர்ந்துவிடுவது அவர்களுக்குப் பெரும் பிரயோசனமாக யிருக்குமென்று கருதுகின்றேன். இஸ்லாம் மார்க்கமானது அன்னோரை சந்தோஷத்தோடு வரவேற்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அன்னோர் இஸ்லாத்தைத் தழுவி விடுவார்களாயின், யாரை வேண்டுமானாலும் தொட்டுக்கொள்ளலாம்; யாருடன் உட்கார நாடிய போதிலும் உட்கார்ந்து கொள்ளலாம்; தொழுகையில் இமாமைப் பின்பற்றித் தொழுபவராகவோ அல்லது இமாமாகவோ இருக்கலாம். எனவே அன்னோர் யாதொரு கட்டுப்பாடின்றி சுயேச்சை பெற்றவராக ஆய்விடுகின்றனர். ஆகவே எவன் ஆண்டவனுக்கு பயந்து நடந்து தனது கடமையைத் தக்க முறையில் நிறைவேற்றுகின்றானோ அவன்தான் மேலானவனென மதிக்கப்படுகின்றான்.

தற்கால கஷ்ட நிவர்த்தி

(4) நான் இஸ்லாத்தைத் தெரிந்து கொண்டதற்குள்ள கடைசிக் காரணமாவது, இஸ்லாம் சமய சந்தர்ப்பத்தின் அவசியத்திற்குத் தக்க முறையில் அமைந்திருப்பதேயாகும். இக்காலை ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்குள்ள ஔஷதம் வேறு எந்தமார்க்கத்திலும் கிடையாது. எனவே இதுகாலை உலகமானது சமத்துவம் சகோதரத்துவம் இவைகளைத் தேடிக்கொண்டிருக்கிறது. இச்சிரேஷ்ட விஷயங்கள் இஸ்லாத்தைத் தவிர வேறெங்கும் கிடைக்குமென்று யாராலும் அறிவிக்க முடியுமா? இஸ்லாத்தில் உயர்வு தாழ்வு இவைகளை உறைத்துப் பார்க்கும் சாதனம் 'தக்வா' ஆண்டவனை பயந்து நடப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே யாருடைய நடவடிக்கைகள் நல்ல விதமாக யிருக்கின்றதோ அவன்தான் சிறந்த புருஷனாகும். இதுகாலை உலகின்கண் எங்கு பார்த்தாலும் பாத்தியதையைப்பெற்றுக் கொள்வதற்காகக் கிளர்ச்சி செய்யப்பட்டு வருகிறது; விவாகசம்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பந்தத்துவம் உறுதி அற்றதாகப் போயிருக்கின்றது. ஆனால் இஸ்லாம் மார்க்கமோ பெண்களுக்கு சுயேச்சை

யை அளித்து, அவர்களது பாத்தியதையை அடையும்படி செய்திருக்கிறது; ஆண் பெண் இருசாரார்க் கிடையிலுள்ள விவாக பந்தத்தைச் சிலாகிக்கத்தக்க விதமாய் நிலை நிறுத்தி வைத்திருக்கின்றது சுருங்கக்கூறின், இஸ்லாத்தின் சட்ட திட்டங்களெல்லாம் மானிட வர்க்கத்தார் யாவரும் அனுஷ்டித்து நடக்கும் விதத்தில் அமைந்திருக்கின்றது எனக் கூறுவது மிகையாகாது.

தவிர இஸ்லாமிய சபைகளில் ஆட்டபாட்டம், கூத்து நடனம் முதலிய துற்செய்கை போலொற்ற எந்த விஷயமுங் கிடையாது. எனவே மனிதர்களின் இயற்கைச் சுபாவத்திற்கு ஒற்றமைந்த மார்க்கம் இஸ்லாமே யாகும். இதுகாலை கோயில்களெல்லாம் பாழடைந்துபோயிருக்கின்றது; மஸ்ஜித்களோ ஈமானுடையவர்களைக்கொண்டு வனப்புடையதாகத் திகழ்கின்றது. நாளொன்றுக்கு ஐந்து முறை ஆண்டவனுக்காகத் தலையை பூமியில் வைக்கப்படுகிறது. இஸ்லாம் தன் பழையநிலைமையில் முன்னேற்றமடைந்து வருகின்றது. இதுகாலை உலகின்கண் எந்த சக்தியும் இஸ்லாத்தைப்போல் மானிடர்களுக்கு நடுத்தரமான பாதையையும் சற்குணவிஷயங்களையும் காண்பித்துக் கொடுப்பதாக யில்லை. 1300 வருடங்களுக்கு முன் எம்பிரான் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள் உலகோருக்கு எக்கடமையை வெளியாக்கிக் காண்பித்திருக்கின்றார்களோ அதனை நிறைவேற்றி வைக்க நீங்களெல்லோரும் முன்வாருங்கள். அதற்காக நாமெல்லோரும் நமது வாழ்நாட்களைத் தியாகஞ் செய்துவிடுவோம்.

இஸ்லாமியத் தொண்டின்மோகம்

அருமைச் சோதரர்காள்! நாங்கள் உங்களுடன் சேர்ந்து கொண்டதால் எனக்கேற்பட்டுள்ள சந்தோஷத்தை எனது சொற்பெருக்கை முடிவுக்குக் கொண்டுவருமுன் வெளியாக்கிக்காண்பித்து பெருமைபாராட்டநாடுகின்றேன். மேலும், எனது இருகைகளையும் உயர்த்தி, என்னை உண்மையான இஸ்லாமிய ஊழியனாக ஏற்றுக்கொள்ளும்படி அல்லாஹ்த ஆலாவிடம் பிரார்த்தனை புரிவதுடன் என் சொற்பெருக்கை முடித்துக்கொள்கின்றேன். தாங்கள் என்னையும் என் சந்ததிகளையும் அன்போடு வரவேற்று உபசரித்ததற்காக மீண்டுமொருமுறை நன்றி பாராட்டுகின்றேன். வஸ்ஸலாம்.

மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டு.

(ஓர் கூலிக்காரனயிருந்து இங்கிலாந்தின் பிரதம மந்திரியான வரலாறு)

இற்றை நாள் இங்கிலாந்தின் பிரதமமந்திரியாய் விளங்கி வரும் மேன்மை தங்கிய மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டு தமது கிராமத்திலிருந்து முதன்முதல் லண்டனுக்கு விஜயம் செய்தபோழ்து, அவரது சட்டைப் பையில் ஒரு காசுமில்லாமல் மிக வறுமையாளராயிருந்தார். எனவே, ஏதேனுமொரு உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு அதில் அமர்கிறவரைக்கும் வேண்டிய செலவுக்குக் கூட அவரிடம் காசில்லாமல் சிரமப்பட்டார். இறுதியாக அவர் முதன்முதலாய் கிடைக்கப்பெற்ற அற்ப உத்தியோகத்தை மனமாற ஏற்றுக்கொண்டார். அதாவது, வாராந்தம் ஒரு பத்து ஷில்லிங் கூலியின் பேரில் ஒரு கிளப்-விடுதியில் கடிதங்களின் உறைகள்மீது விலாசம் எழுதும் வேலையில் அமர்ந்தார். இவ்வூதியமானது அச்சந்தர்ப்பத்திலும் அவரது செலவினங்கட்குப் போதாத அற்பத்தொகையா யிருந்தது. எனவே மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டு, ஹோட்டல் சென்று ஒரு கப் டீ (தேனீர்) அருந்துவதற்கும் காசு மிச்சப்படாமல் அத்துணை வறுமையாளரா யிருந்தார். ஊதியத்தினின்று தேனீர் பருகவும் காசு மிச்சப்படாமல் போகவே அவர், தேனீருக்குப் பதிலாய் தண்ணீர் பருகி காலங்கழித்து வருவதானர்.

இவ்வாறே அநேக மாதங்கள் வரை அந்த கிளப்பில் சொற்பக் கூலிக்கு மிகப் பொறு

மையுடன் வேலைசெய்து காலங் கழித்து வந்தார். அக்காலை அவரது நித்திய உணவு மிகவும் சர்வ சாதாரணமா யிருந்து வந்தது. அதாவது, ஒரு ரொட்டியும் மூன்று பென்சுக்குக் கறியும் அத்துடன் இலவசமாய்க் (கொசுறு) கிடைக்கும் பதார்த்தமும் வாங்கி உண்டு நாட்களை கழித்து வந்தார். இங்ஙனம் வெண்ணெயில்லாத வெறும் ரொட்டியும் மூன்று காசுக்குக் கறியும் கொசுறு பதார்த்தமும் வாங்கித் தின்று மிகக் கஷ்டத்துடன் வயிறு வளர்த்து வந்த ராம்ஸே மாக்டனல்டு தான் இன்று இந்தியாவையும் இங்கிலாந்தையும் ஆளும் பிரதம மந்திரியாக இருந்து வருகிறார். அப்படிப்பட்ட எளியவர் எங்ஙனம் அபரிமிதமான முன்னேற்றமும் கீர்த்தியும் பெரும் பதவியும் அடைந்தார் என்பதை அவரது வாக்கு மூலமாகவே சொல்லப்பட்ட சுய சரிதையைக் கொண்டு இதன் கீழ் நம் நேயர்கட்கு அறிமுகப்படுத்திவைப்பாம்:—

எனது பாலப்பருவம்.

இங்கிலாந்தின் வடகிழக்கு நாடாகிய ஸ்காட்லாண்டு பிரதேசத்தைச் சார்ந்த 'லூஸீமாவுத்' என்னும் மிகச்சிறிய கிராமத்தில் தான் யான் பிறந்தேன். அந்த சிற்றூரின் ஜனத்தொகை இரண்டாயிரம் நபர்கட்கு மேலிராது. அத்தகைய சிற்றூரின் ஜனங்கள் இரண்டேவிதத் தொழில்செய்யும் இருவகையினரா யிருந்தனர். ஒருசாரார் நிலம் உழுது விவசாயம் செய்பவர்கள். மற்றொருசாரார் மீன் பிடித்து விற்று ஜீவனஞ் செய்பவர்கள். எனது தகப்பனர் முதல் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கிருஷிகராயிருந்தார். யான் பாலனயிருந்த அந்தக்கால நிலைமை எங்ஙனமிருந்ததெனின், அத்தேசத்துப் பெரிய பெரிய ஜமீன்தார்கள் எதேச்சாதிகாரம் பூண்டு, தங்களினும் தாழ்ந்த அந்தஸ்துள்ள சிறிய ஜமீன்தார்களின் நிலங்களை நிர்ப்பந்தத்தினல் அபகரித்துக் கொள்ளும் தன்மையுடையவர்களா யிருந்தனர். ஆகையால்சிறிய ஜமீன்தார்களுக்கிடையில், பெரிய ஜமீன்தார்களுக்கு எதிரிடையான உணர்ச்சியும் ஆவேசமும் எழும்பியிருந்து வந்தது. அதற்கு எதிரிடையான சூழ்ச்சிகளைப் பெரிய ஜமீன்தார்களும் புரிந்துவந்ததால்,சிறிய ஜமீன்தார்களின் எதிர்க்கிளர்ச்சி நாளுக்குநாள் பெருகி வலிமைபெற்றேங்கியது.

அதுகாலை யானொரு சிறுபையனகயிருந்தேனெனினும், அக்காலைக் கிளர்ச்சியில், சிறிய ஜமீன்தார்களின் சொத்து நிலங்கள் எங்ஙனம் பெரிய ஜமீன்தார்களின் அக்கிரம ஆதிக்கத்துக்குள்ளாய் வந்ததென்ற விஷயம் இன்னும் என் ஞாபகத்திருக்கின்றது. சிறிய ஜமீன்தார்களின் புதல்வர்கள் நாகரீகக் கல்வி பயிலுவதற்காக வென்று தங்கள் பிதுரார்ஜிதமான நிலம்புலன்களை விட்டு எம்பெர்டின் முதலிய வெளியூர் சர்வகலாசாலைகளுக்குப் போய்விடுவார்கள். அங்ஙனம் அங்கு போனபின், அவர்கள் அங்கேயே வசிப்பவர்களாய்விடுவர். ஆனல், அன்னேரின் பெற்றோர்களோ நிலம்புலன்களின் வருவாய்களை விருத்தி செய்வதை விடுத்து, கொண்டாட்டடங்களிலும் வீண்விரய அட்டகாசங்களிலும் சுகபோக வைபவங்களிலும் காலத்தைப்போக்கி இறுதியில் ஒட்டாண்டிகளாய் விடுவர். பெரிய ஜமீன்தார்களுக்கு எதிரிடையாய்சிறிய ஜமீன்தார்கள் கிளப்பிய எதிர்க்கிளர்ச்சியானது அபரிமிதமா யிருந்தபோதிலும் பணச் செல்வாக்கின்மையால் நாளுக்கு நாள் அக்கிளர்ச்சி நலிவுற்று க்ஷீணித்துப் போவதாயிற்று.

எனது கல்விப் பயிற்சி

யான் கல்விப்பயின்றது உள்ளூர்ப்பள்ளிக்கூடத்தில்தான். அந்தக் காலம் மிகவும் சாதாரணமானது. ஆகவே கல்வி விஷயத்தில் எங்கள் போஷகர்கள் அதிகம் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. எனவே யான் அக்காலை சரியாகப் படிக்காமல் தறிதலையாக அலைந்துத் திரியலானேன். அலைந்துத் திரிந்து அருங்காலத்தைப் போக்குவதற்கு, பெரும் பெரும் காடுகளும், விஷமத்தனங்கள்செய்து வாணாளை வீணாளாக்க அழகிய மலைகளும் எங்களூர்ப் பிரதேசத்தில் சிறிதும் குறைவில்லாமலிருந்தன. என்னுடன் பள்ளிக்கூடத்தில் படித்த எனது சம வயதுப் பையன்களோ விஷமத்தனங்கள் செய்வதில் என்னினும் குறைந்தவர்களல்லர். அன்னேரெல்லாம் இதுகாலை என்னைப்போல் பிரஜோபகாரமான பொதுச் சேவைகளில் (அதாவது அரசாங்கப் பதவிகளில்) மேன்மைக்கு வராதிருந்தபோதிலும் பெரும் பெரும் அந்தஸ்துள்ள பிரபுக்களாகவே இருந்துவருகின்றனர்.

எனக்கோ பால்ய காலத்திலிருந்தே அரசியல் விஷயங்களில் அதிகப் பற்றும் கவனமும் இருந்துவந்தது. சிறுவர்களாகிய நாங்கள் கூட அக்காலத்தில் அவ்வியக்கத்தில்ஈடுபட்டு குடியாட்சி முறையினைப் பிரசாரம் செய்து வந்தோம். எங்களூர் பணக்கார முதலாளிகளுக்கும், பெரிய பெரிய ஜமீன்தார்களுக்கும் விரோதமாக எங்கும் கிளர்ச்சியாக இருந்து வந்ததால், அன்னோர் பெருஞ்சங்கடமடைந்து வந்தனர். அதை யுத்தேசிக்குமிடத்து எங்களுடைய ஏழ்மை நிலைமையையே நாங்கள் மிக சிலாக்கியமாய் எண்ணியிருந்தோம்.

எனது விவசாயத் தோழில்

யான் அற்ப சொற்ப கல்விக்குப்பின், பள்ளிக்கூடத்தை விட்டு நீங்கியதும், ஏதேனும் தொழில் புரிந்து ஜீவனம் நடத்த வேண்டுமென்ற விசாரம் எனக்குண்டானது. எனவே யான் முதன் முதல் விவசாயத் தொழிலில் பிரவேசித்து உழைக்கலானேன். எனக்குச் சொந்தமான நிலங்களை உழுது பயிரிடலானேன். ஏர் உழுது விதைவிதைத்து பயிர்வளர்த்து அறுத்து சம்பாதிக்கும் கிருஷிகத்தொழில் எனக்கு மிகவும் கஷ்டமாய்த் தோன்றிற்றெனினும், அதுவே ஒரு நல்ல உத்தமமான தொழிலெனக்கொண்டு யான் அதில் சந்தோஷமும் ஊக்கமுங் கொண்டிருந்தேன்.

என்னைப்போல் விவசாயம் செய்துவந்த இதர கிருஷிகர்களைக் கண்டு எனக்கு வியப்புண்டாயிற்றெனினும் அவர்கள் பைபிள் வேத வசனங்களையும், ஸ்காட்லாண்டின் தேசியக்கவிஞரான பர்மின்ஸுடைய கீதங்களையும் நல்லவிதமாய் மனனஞ்செய்து தினமும் படித்துவந்தார்கள். ஆனால் எனக்கு அவை தெரியாததினால் வியப்படைந்தேன்.

மீண்டும் பாடசாலைச் சென்றேன்.

கிருஷிகத்தொழில் எனக்கு மிகவும் விருப்பமும் சந்தோஷமுமிருந்து வந்ததெனினும் மற்றவர்களைப்போல் போதிய அளவாவது கல்விக்கொள்ளாமற் போனது பெரிதும் வருத்தமாயிருந்தது. நான் முன்னர் பள்ளிக்கூடத்தைவிட்டு விஷமக்காரப் பையன்களுடன் சேர்ந்துத் திரிந்தபோழ்து, எனக்குப் பள்ளி ஆசானாகயிருந்த உபாத்தியாயருக்கே யான் விரோதமாயிருந்து வந்தேன். இப்போது எனக்குக் கல்வியின் மகிமை தெரிந்து, அதே உபாத்தியாயரை அணுகி கல்விப் பயிலவேண்டுமென்ற அபிலாஷை ஏற்படவே, முதலில் என் தாயாரிடஞ்சென்று விருப்பத்தைக்கூறி அனுமதி வேண்டினேன். என் அன்னை அதற்குச் சம்மதிக்கவே யான் அளவிலா மகிழ்வடைந்து என் பழைய உபாத்தியாயரிடஞ்சென்று என் நிலைமைகளை எடுத்துக்கூறி பணிவாக வேண்டிக் கொண்டேன். அவரும் என்மீது கருணைப்பூண்டு ஒப்புக்கொண்டதோடு பாடசாலை கட்டணத்தின் அரைப்பாகத்தை எனக்காக மன்னித்துக் குறைத்துவிட்டார். அதிலிருந்து யான் அதிக ஊக்கமாக கல்வி கற்று வரலானேன். அதேசந்தர்ப்பத்தில் யான் என்னுடைய வகுப்புக்குக் கீழ்பட்ட சின்ன புஸ்தகம் படிப்பவர்கட்குப் பாடமுஞ் சொல்லிக்கொடுத்து வரலானேன்.

எவ்வாறேனும் எம்பர்டின் சர்வகலாசாலையில் உயர்தர கல்வி கற்றே தீருவதென்று யான் பெரிதும் ஆர்வங்கொண்டேன். ஆனால் எங்களுக்கிருந்த பணக்கஷ்டத்தினால் அவ்வெண்ணத்தில் யான் ஜயமடைய முடியாமற் போயிற்று. அச் சர்வகலாசாலை படிப்புக்கு யான் அதிருஷ்டம் கொடுத்து வைக்கவில்லை. இங்ஙனம் யான் அபஜயமடைந்தேனெனினும், அதைப்பற்றி எனக்கு பிற்கால வாழ்க்கை யனுபவத்தில் ஒரு சிறிதும் வருத்தமே ஏற்படவில்லை. ஏனெனின், அத்தகைய மேலான சர்வ கலாசாலைகளில் மிகப் பிரயாசையோடு உயர் கலாகலைகள் பயின்று தேர்ச்சியடைந்து பெரும்பட்டங்கள் பெற்றுவிடும் மாணக்கர்கள் பிற்கால வாழ்வில் அவ்விதப் படிப்பினால் ஒரு சிறிதும் பிரயோஜனமடையாமல் நன்மைக்கு பதிலாய் தீமைக்கே ஆளாகின்றனர் என்பதை யான் அறிந்து கொண்டேன்.

எனது பரஸ்டல் வாழ்க்கை

சிறிது காலம்வரை யான் மேற்படி பாடசாலையில் ஆரம்ப உபாத்தியாயனாயிருந்துவிட்டு, அதன்பின் அவ்வேலையைவிட்டு, ஒரு கனவானிடத்தில் பிரைவேட் செக்ரடெரி (சொந்தக் காரியதரிசி) வேலையில் அமர்ந்து பரஸ்டல் நகருக்குப்போய் சேர்ந்துவிட்

டேன். அக்கால சைன்ஸ் என்னும் விஞ்ஞானக்கலையிலும் எனக்கு அபரிமிதப் பிரேமையிருந்தது. மேலும், எனக்குக் கிடைத்துள்ள புதிய உத்தியோகத்தில் காலக்ஷேபத்துக்கான வரும்படியும் புதிய வழியில் கிடைக்குமென்றும், அதன் காரணத்தினுல் கஷ்டமின்றி 'ராயல் காலேஜ் ஆப் மாய்ஸ்' என்னும் ஸைன்ஸ் கலாசாலையில் பிரத்தியேகமாக கல்விபயின்று பரிக்ஷை தேறவும், உபகாரச் சம்பளம் பெறவும் பற்பல அனுகூலங்கள் உண்டாகுமென்றும் எதிர்ப்பார்த்திருந்தேன். எனினும் எனது இவ்வாசையெல்லாம் யானெண்ணியபடி பூர்த்தியடையாது போய்விட்டது. ஆகவே, யான் பரஸ்டலே விட்டு லண்டனுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டேன்.

எனது லண்டன் வாழ்க்கை

யான் புதிதாய் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்த காலத்தில் ஆங்கு எனக்கு நன்கு அறிமுகமானவர் ஒருவருமே இருக்கவில்லை. ஆனுல், எனது சிறுபிராயத்தில் ஒரு மனிதருடன் எனக்கு ஏற்கெனவே கொஞ்ச பழக்கமிருந்தது. அந்த மனிதர் சாதாரணமானவர்தான். அவர் ஒரு வக்கிலுடைய கிளர்க்கு (குமாஸ்தாவாக) இருந்தார். எனவே, அவருடன் யான் போய்ச் சேர்ந்துகொண்டேன். அன்னவர் அரசியல் விஷயமாகவும், அதுசம்பந்தமான இதர துறைகளிலும் பற்றுக்கொண்டு பத்திரிகைகட்கு வியாசங்களும் நிருபங்களும் எழுதியனுப்பும் பழக்கமுள்ளவரா யிருந்தார். அத்துடன் எனக்கும் அவரைப்போன்றே அரசியல் விஷயங்களில் பற்றிருந்து வந்தமையால், நாங்களிருவரும் அள்வளாவிப் பேசி அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டமையால், நெருங்கிய நேசம் விருத்தியாகி அன்னியோன்னிய சினேகிதராய்விட்டோம். இது அந்தக்காலச் செய்தியாகும். இப்போது அந்த உத்தமத் தோழர் எங்கே இருக்கிஞர்? என்ன கொள்கையிலிருக்கின்ருர்? என்ன செய்துவருகிருர்? என்பவைகளை யான் கூற முடியாதவனுயிருக்கிறேன்.

யான் லண்டனுக்கு வந்தபோது என்னுடைய சட்டைப்பை வெறும் பையாக இருந்தது. செலவுக்குக் காசில்லாமல் யான்பெரிதும் அல்லலுற்றேன். ஆகையால் யான் ஏதேனுமொரு உத்தியோகம்—வேலை தேடிப் பெறுவதற்கு அபாரப்பிரயாசைப்பட்டேன். இதே சிந்தனையாக நாளெல்லாம் அங்குமிங்கும் எங்கும் அலைந்துத் திரிந்துகொண்டிருந்தேன். மிகப் பிரயாசையின் பயனுய் இறுதியில் எனக்குக்கிடைத்த ஒருசிறிய உத்தியோகம் "டோர்னிங் கிளப்" பிலாகும். அங்கு யான் (பிறரால் எழுதப்பட்ட) கார்டுகள், கவர்கள்மீது விலாசங்கள் எழுதிப் பூர்த்திச் செய்யும் வேலையில் நியமிக்கப்பட்டேன். அதற்காக எனக்குக்கிடைத்த வாரக்கூலி (சம்பளம்) ஒரு பத்து ஷில்லிங்தான். (ஷில்லிங்கு என்பது முக்கால் ரூபாயாகும்.) எனக்குக்கிடைத்த இந்த உத்தியோகங்கூட நிரந்தரமானதல்ல. கொஞ்ச நாளைக்கு மட்டுந்தான் இவ்வேலையிலிருந்தேன். அதன்பின், செலவினம் மிகுந்த லண்டன்மாநகரில் யான் சிலகாலம் 'காலி ஜேபு'க்காரனுயிருந்தமையால், பற்பலவிதத்திலும் கடன்கள் அதிகம் ஏற்பட்டு அந்தக்கடனைத் தீர்க்க வகையின்றி, வேறு உத்தியோக வேட்டைக்காக லண்டன் மாநகரின் வீதிகள்தோறும் பாதத்தாலலைந்து திரிந்தேன்.

இங்ஙனம் சொற்பகால அவஸ்தைக்குப் பின் என் நல்லதிருஷ்டவசமாக ஒரு பதினைந்து ஷில்லிங் வாராந்தச் சம்பளத்துக்கு ஒரு ஸ்டோரில் வைஸ் குமாஸ்தா உத்யோகம் ஒன்று கிடைத்துவிட்டது. யான் அந்த வேலையை சிரத்தையுடன் கவனித்து, அந்தச் சொற்பவரும்படியைக் கொண்டு, மிகச்சிக்கனமாகச் செலவுசெய்து, மிச்சப்படும் பணத்தினுல் கடனைத்தீர்த்துக்கொண்டு ஜாக்கிரதையாகக் காலங்கழித்து வந்தேன். கடன் தீர்ந்தபின் மீதப்படுவதில் சொற்பத் தொகையை ஒருபக்கல் பத்திரப்படுத்தி சேர்த்துவரலானேன். அப்படி கஷ்டப்பட்டு மிச்சப்படுத்திச்சேர்த்த பணத்தைக்கொண்டு டிக்கட்வாங்கி, ஒரு முறை என் சுதேசமாகிய ஸ்காட்லாண்டுக்குப் போய்வந்தேன். அத்துடன் என் தாயாருக்குச் செலவுக்குப் பணமும் அனுப்பி வரலானேன். இன்னமும் யான், விட்டி ஆப்லண்டன் காலேஜ், ஹைபிரீ இன்ஸிடிடியூட் என்னும் கலாசாலைகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்தி ஒய்வு நேரத்தில் அதிகமாக கல்வியும் கற்று வந்தேன்.

இவ்வளவு சொற்ப சம்பள வருவாயைக் கொண்டு மேற் குறிப்பிட்ட இத்தனை

செலவுகளை யெல்லாம் யான் எங்ஙனம் செய்துவந்திருப்பேன் என்று நீங்கள் சந்தேகப்படலாம். ஆம் வாஸ்தவமே. யானே மிகமிக சர்வசாதாரணமான முறையில் காலக்ஷேபஞ் செய்துவந்தேன். அதாவது மிகவும் சகாயமாய்க் கிடைக்கும் உணவுப் பொருளை வாங்கி வயிற்றை நிரப்பிக்கொள்வேன். இலவசமாய் கொசுறு கிடைக்கும் பதார்த்தத்தை அதிகம் கேட்டு வாங்கிப் புசிப்பேன். மேலும் யான் வசித்துவந்த ஸ்தலமானது மிகமிக ஏழைத்தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியாகும். ஆகையால் அப்பகுதியில் விற்கும் உணவுப்பொருள் முதலிய சாமான்கள் மிகமிக சகாயமானதாகவே இருக்கும். இதல்லாமல், வறுத்த கோதுமை மாவு (பொரிமாவு) எனக்கு ஒரு இடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. அதற்குரிய கட்டணத்தை அப்போதைக்கப்போது யான் கொடுத்து விடுவேன். அந்த மாவை யான் காலை உணவாகக்கொள்வேன். காப்பி, டீ முதலிய நாகரீக பானங்களை வாங்கிப் பருக என்னிடம் போதிய பணமிராது. ஆகையால் யான் காப்பி, டீ-யுக்கு பதிலாக தண்ணீரை வெந்நீராக்கிக் குடித்து திருப்தியடைவேன். வெறும் வெந்நீரே யானாலும் பிரியத்தோடு வழக்கமாக நாம் உபயோகித்து வருவோமாயின், அதுவுங்கூட டீ காபியைவிட பன்மடங்கு அதிக மதுரமாயிருக்குமென்பதை என் அனுபவபூர்வமாக அறிந்து கொண்டுள்ளேன். சமயா சமயத்தில் யான் 'லன்ச்' என்னும் சிற்றுண்டி சாலைகட்குப் போவதானாலும் இரண்டு மூன்று பென்ஸுக்கு (0-3-0)-க்கு மேல் செலவு செய்யவேமாட்டேன். இங்ஙனம் செலவு செய்துண்ணுவது எனது பகல் போஜனத்துக்காகும். அதிகமாக யான் உட்கொள்வது கொசுறுகக் கிடைக்கும் (படங்கு என்னும்) பதார்த்தமாகும். இவ்வாறெல்லாம் யான் செலவிடுவதைச் சேர்த்துக் கணக்குப் பார்த்தாலும் தினமொன்றுக்கு ஏழு எட்டுப் பென்ஸுகளுக்கு உள்ளாகவேயிருக்கும்.

இவ்வாறு சிறிது காலத்தில் என் சொந்தப் பிரயாசையின் காரணமாய் யான் சிறிது மேம்பதவிக்கு வந்தேன். என்னுடைய வாரச்சம்பளம் சிறுகச் சிறுக பெருகி ஒரு பவுனுக்கு உயர்ந்து விட்டது. அந்தக்காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கார சிநேகிதரொருவர், தம்முடைய நாட்டிலே போர்ட்டரி என்னும் ரசாயன ஆராய்ச்சிக் கூட்டத்தில் வந்து ஆராய்ச்சிச்செய்து ஏதேனும் கண்டுபிடிக்கும்படி எனக்கு அனுமதி கொடுத்தார். எனவே, எனது பழைய உத்தியோகத்தில் சிரத்தைக் குறைந்து இரசாயனத் துறையில் அதிகம் ஈடுபட்டு விட்டேன். இதன் காரணமாக என் உத்தியோகம் போய்விட்டதுடன் மருந்துகளின் குணப்பாட்டால் என் உடல் சுகமும் கெட்டுப்போய்விட்டது. ஆகவே, யான் பிணியில் வீழ்ந்த காரணமாய், முன்னர் சேர்த்துவைத்திருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது.

நேஷனல் லிபரல் கிளப்

இரசாயனத்தி லீடுபட்டதினாலேற்பட்ட வியாதியினின்று யான் சுகமடைந்து விட்டேனெனினும், மீண்டும் புதிய உத்தியோகம் தேடியாகவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளானேன். எனவே நேஷனல் லிபரல் கிளப் (தேசியத் தொழிலாளர்க் கழகம்) உடைய காரியதரிசியாயிருந்த எனது நண்பரொருவரை விசாரித்ததில், அக்கழகத் தலைவரான தாம்ஸ்லெப் என்ற கனவானுக்குப் பிரைவேட் செக்ரடெரிவேலைப் பார்ப்பதற்கு ஓர் ஆள் தேவையென்ற தகவலைத் தெரிவித்தார். இந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள எனக்கு மனப்பூர்வமான இஷ்டமில்லையெனினும் கஷ்ட திசையை முன்னிட்டு அந்த வேலையை ஒப்புக்கொண்டேன்.

என் வாழ்வின் இலக்ஷியம்.

என் வருங்கால வாழ்க்கையை எந்த வகையில் திருப்பலாமென்ற பிரச்சினை என் உள்ளத்தில் எழுந்தது. ஏற்கெனவே எனக்கு பற்றும் சம்பந்தமுமுள்ள சைன்ஸ் ஆராய்ச்சித்துறை என்னும் படகில் ஒரு காலை வைத்துக்கொண்டு, தற்போதய உத்தியோகத் துறையாகிய மற்றோர் படகில் வேறொரு காலை வைத்துக்கொண்டு துரிதப் பிரயாணஞ் செய்து இந்தப் படகிலுமில்லாமல் அந்தப் படகிலுமில்லாமல் நடுக்கடலில் வீழ்ந்து மாய்வதைவிட ஒன்றையே கெட்டியாய்ப்பற்றிப் பிடிப்பதென்று தீர்மானஞ் செய்துகொண்டேன். அதன்படி சைன்ஸ் ஆராய்ச்சித் துறையை ஒரே அடியாய் திரஸ்கரித்து, ஜர்

னலிஸம், பொலிட்டிகல் (என்னும் பத்திரிகா ஆராய்ச்சி, இராஜீயம்) ஆகிய துறையில் முழுப் பிரயாசையுடன் பிரவேசித்தேன்.

பத்திரிகாத் தொழில்.

சரியாக நான்கு வருடங்கள்வரை மிஸ்டர் தாம்ஸ் லெப் உடன் இருந்து காலந் தள்ளி வந்தேன். இக்காலத்தில் யான் அதிக ஊக்க மாய் கவனித்துவந்த பத்திரிகாத் தொழிலி னாலேயே இனி போதிய சம்பாத்தியம் புரிந்து கொள்வதற்குரிய ஆற்றலுடையவனுகி விட் டேன். எனது எஜமானராகிய மிஸ்டர் தாம்ஸ் லெப், பார்லிமெண்டின் ஓர் அங்கத் தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விடவே யான், அவருடைய காரியதரிசியாக இருக் கும் வேலையை ருஜினுமாச் செய்துவிட்டு எனக்கு அதிக ஊக்கமும் ஊதியமும் அளிக்க வல்லதாயிருந்த பத்திரிகாத்தொழிலை (ஜர்ன லிஸ்டை) பூரணமாய்க் கைகொண்டு சுயேச் சையுடன் வாழ்க்கை நடத்தலானேன்.

சமுதாய சீர்திருத்தக் கூட்டம்

யான் லண்டன் வாழ்க்கை ஆரம்பித்த சில ஆண்டுகட்குப்பின் எனக்கு ஏற்பட்ட செல் வாக்கின் பயனைப் யான், சோஷலிஸ்ட் பார்ட் டியில் (சமுதாய சீர்திருத்தக் கூட்டத்தில்) சேர்ந்துகொண்டேன். எனவே யான் அநேக மாய் அந்தப் பொதுச்சபை சம்பந்தமான எழுத்து வேலைகளையே அதிகம் செய்து வந் தேன். அந்த சமயத்தில் அந்தச் சபை சாதா ரண நிலைமையிலிருந்ததால் அதன் சார்பாக பொதுஜன ஊழியங்கள் அதிகம் செய்ய வசதியுமில்லாதிருந்தது. அந்நாளையில் ஒரு சமயம் ரீஜண்டு பார்க்கில் நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் அநேக கனவான்கள் வந்து கூடி இருந்தபோது மிஸ்டர் ஜான் பர்னன்ஸ் அவர்கட்கும் எனக்கும் சந்திப்பு ஏற்பட்டு நேசமும் உண்டாயிற்று. இதற்கு முன்னல் இவருக்கு விரோதமாக நான் பல வழக்கு விவகாரங்களில் ஈடுபட்டு வேலை செய்துள் ளேன். மிஸ்டர் எ. எச். நஷ்மேன் என்ற கனவானுடனும் அக்கூட்டத்தில் சந்திப்பும் நேசமும் ஏற்பட்டது. இவர் அந்த சோஷ லிஸ்ட் பார்ட்டியின் பிரதமமெம்பராயிருந்து வந்தார். இவர்களிடமெல்லாம் எனக்குப் புதிய நேசம் ஏற்பட்டதால் எனக்கு ஆதர வும் கௌரவமும் ஏற்பட்டது.

யான் சோஷலிஸ்ட் பார்ட்டியில் ஒரு மெம்பராகச் சேர்ந்துகொண்ட சொற்ப நாட்களுக்கெல்லாம், மற்றோர் பெரிய அரசி யல் ஸ்தாபனமான பேபியன் பார்ட்டியில் சேர்ந்துகொள்ளும் அதிருஷ்டமும் பெற் றேன். இந்த சபைக்குப் பிரதம அதிகாரி யாக இருந்தவர் மிஸ்டர் ஜார்ஜ் பர்னட்ஷா அவர்களாவர். இப்பெரியாருடனும் எனக்கு நல்ல பரிச்சியமும் அத்தியந்த நேசமும் உண்டாயிற்று.

இச்சம்பவம் நிகழ்ந்த மூன்று ஆண்டு கட்குப் பின்னர் யான் இண்டிபெண்டெண்டு லேபர் பார்ட்டி என்னும் அரசியல் ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டேன். அக்காலந் தொட்டு இன்று வரைக்கும் யான் நீங்காமல் அந்தப் பெரிய இண்டி பெண்டென்டு பார்ட்டியின் பிரதமமெம்ப ராகவே இருந்து வருகின்றேன். யானும் எங்களைச் சேர்ந்தவர்களும் சமூக சீர் திருத்த (சோஷலிஸ்ட்) துறையில் பிரவே சித்து வேலை செய்வதற்கு முடிவுசெய்து கொண்ட சேவை யாதெனில், ஏழைத்தொழி லாள ஜனங்களையும், அவர்களைப்போன்ற எளிய விவசாயிகளையும் ஆதரித்து, அவர் கட்கெல்லாம் புத்தூக்கம்புகட்டி ஒற்றுமைப் பட செய்வதற்கும், அவர்கட்கு வேண்டு மான இதர சகல துறைகளில் முன்நின்று வேலை செய்வதற்கும் முயற்சித்ததேயாகும்.

எனது சேவைகள்.

கி. பி. 1900-ம் ஆண்டில் நாங்கள் எல்லோ ரும் சேர்ந்து தொழிலாளருக்குச் சாதகமாக பிரதிநிதிகளின் கமிட்டி யொன்றை நியமித் தோம். அக்கமிட்டியின் சர்வபொறுப்பும் என்வசமேயிருந்தது. அதாவது அக்கமிட்டி ஸ்தாபனத்துக்கும் அதன் சகல காரியங் கட்கும் யானே முதல்வனுகயிருந்தேன். இன்னும் அந்த கமிட்டியானது "லேபர் பார்ட்டி" என்ற பெயரால் உலகமெங்கணும் பிரக்யாதிபெற்றிருப்பதை பத்திரிகை ஞான முடையோரறிவர்.

எனது ஆரம்பகாலத்திலேயே யான் தொழிலாள ஜனங்கட்கு ஆதரவான சங்கம் ஸ்தாபிப்பதிலும், சேவைகள் செய்வதிலும் சிரத்தையுள்ளவனுயிருந்தேன். மேலும் தொழிலாளர்களின் குழந்தைகட்குக் கல்வி யொழுக்கம் புகட்டிவைப்பதில் என்னுலான

வரையினும் ஏற்பாடுகள் செய்துவந்துள்ளேன். நான் எனது இளம்பருவத்தில், ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகளை அழைத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு ருசிகரமான சிறுகதைகளை அவர்கட்குச் சொல்லி உற்சாகப்படுத்துவேன். மேலும் யான் டோமென் இண்டஸ்டிரியல் கவுன்ஸிலில் கலந்து வேலை செய்தபோது தொழிலாளர்கட்காக என்னால் கூடியமட்டும் சேவைசெய்துள்ளேன்.

எனக்கு பார்லிமேண்ட் ஸ்தானம்.

எம்மால் ஸ்தாபிதஞ்செய்யப்பட்ட லேபர் பார்ட்டி நாளுக்கு நாள் வலுவடைந்து அரசாங்கத்தின் கவனத்தையும் ஈர்ந்தது. அரசியல் விவகாரங்களில் லேபர் பார்ட்டிக்குச் செல்வாக்கும்சம்பந்தங்களும் ஏற்படலாயின. எனவே, லேபர் பார்ட்டி (தொழிலாளர் கட்சி) சார்பாக பார்லிமெண்ட் சபையின் ஓர் ஸ்தானத்துக்கு அபேக்ஷகனாய் நிற்கும்படி யான் கேட்டுக்கொள்ளப்பட்டேன். முதலில் யான் அந்த ஸ்தானமடைவதை அவ்வளவு ருசிகரமான விஷயமாய்க் கொள்ளவில்லை யெனினும், நண்பர் தோழர்களின் வற்புறுத்தலின்பேரில் யான் சம்மதித்து அபேக்ஷகனாய் நின்றேன். அதாவது, முதன் முறை யான் டோவர் என்ற பகுதியிலிருந்து ஜனங்களின் ஒட் (வாக்கு)களைப் பெற்று அதன் வெற்றியால் அந்த ஸ்தானத்துக்கு வரலாமென அபேக்ஷகனானேன். மேலும், இது விஷயத்தில் லேபர் பார்ட்டியினர் சிறிது முயற்சித்தால் யான் வெற்றியடைந்து பார்லிமெண்ட் ஸ்தானத்தைப் பெற்றுவிடுவது ஒரு பெரிதல்லவென்று நினைத்தேன். ஆனால் இவ்வெண்ணத்தில் யான் வெற்றிப் பெற முடியவில்லை. எனவே முதல் முறை நின்றதில் யான் தோல்விதானடைந்தேன். இச்சம்பவம் 1900-ல் நடந்ததாகும்.

இரண்டாவது வருடம் சவுத் ஹம்ப்டன் பகுதியின் வோட்டுகளுக்கு யான் ஓர் அபேக்ஷகனாக நிறுத்தி வைக்கப்பட்டேனாயினும் இம்முறையும் யான் வெற்றியடையவில்லை. இங்ஙனம் இருமுறை தோல்வியடைந்தும் யான் ஊக்கத்தைக் கைவிடவில்லை. மூன்றும் முறையாக அதாவது கி.பி. 1901-ம் ஆண்டில் ஒரு பகுதியின் அபேக்ஷகனாக நின்றேன். இம் முறை எனக்குப் பரிபூர்ணமான வெற்றிக் கிடைத்தது. அதாவது 4000-வோட்களைப் பெற்று பார்லிமெண்டின் ஸ்தானத்தைப் பெற்றேன்.

1901-ம் வருடம்தான் பார்லிமெண்டில் எனது வாழ்க்கையின் முதலாண்டாகும். அதன்பின் யான் எனது குன்றா ஊக்கத்தினாலும், தளரா முயற்சியினாலும், பகீரத ஆலோசனைகளினாலும் அரசாங்க சபை ஸ்தானங்களில் மேன்மைக்குவந்து பிரதம மந்திரியின் ஸ்தானத்தையும் அடையப்பெற்றேன். இதுவிஷயத்தை பத்திரிகா உலக மனைத்தும் நன்கறிந்து கொண்டுளது. ஆகவே என்னுடைய முன்னேற்றமெல்லாம் முயற்சியினாலேயாமென்பதை யாவருமறிதல் வேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சி யடையாரென்பது உண்மையாயிற்று.

தற்கால அப்கனிஸ்தான்.

கல்வியின் அபிவிருத்தியும், நாட்டின் முன்னேற்றமும்.

உலகத்தின் நன்னாகரீகமும் நல்லொழுக்கமும் அவ்வுலக மக்களின் கல்வி முன்னேற்றத்தையும், ஞான விவேக ஆற்றலையும் பொறுத்தன வாயிருக்கின்றன. எனவே கல்வி ஞானமற்று அவிவேகத்துக்காளாயிருக்கும் சமுதாயம் இத்தாரணியில் ஒரு சிறிதும் தலை தூக்கி முன்னேற்றமடையவும் கீர்த்தியுடன் வாழவும் முடியாது.

கீர்த்தி மிகுந்த மகுடாதி மன்னரான ஷாஹ் நாதிர்கான் அவர்கள், தங்கள் தேய சமுதாயத்தின் இறப்பும் சிறப்பும், தாழ்வும் வாழ்வும், மேன்பதவியும் வீழ்ச்சியும் ஏற்படுவதற்குரிய காரணங்களை தங்களது அறிவாற்றலினால் தீர்க்கமாய் உணர்ந்து கொண்டார்கள். ஆகையால், அவ்வுத்தம வேந்தர் தங்கள் சமுதாயத்தை சீரிய முன்னேற்றிற்குக்

கொண்டுவருவான்வேண்டி, சுதேசமாகிய அப்கனிஸ்தானின்கண் கல்வியபி விருத்திக்கான சகலவித முயற்சிகளேயும் குறைவரப் புரிந்துவிட கங்கணங்கட்டிக் கொண்டார்கள்.

அமீர் நாதிர்கானவர்கள் சிம்மாசனத்திலமர்ந்தபோது, பச்சாஸக்கூ வென்னும் கொடுங்கோலனின் அட்டூழியங்களின் காரணமாய் அந் நாட்டிலுள்ள எல்லாக் கல்வி ஸ்தாபனங்களும் மூடப்பட்டிருந்தன; எல்லா கலாசாலேகளும் அடைப்பட்டுக்கிடந்தன. கல்வி அபிவிர்த்தியாவதற்குக் காரணமாயிருந்த சகல சாதனங்களும் தொலைக்கப்பட்டுப் போயிருந்தன. எனவே கொடிய பச்சாஸக்கூவும் அவனது தீயத்தோழர்களும் கல்வி, ஆராய்ச்சி, ஒழுக்கம் முதலிய சகல சாதனங்களேயும் ஒழித்து நிர்மூலப்படுத்தி விட்டார்கள். இஃதொரு பக்கலிருக்க, அரசாங்கக் கஜானுக்களெல்லாம் காலியாக்கப்பட்டுப்போயிருந்ததுடன், அந்த நாட்டின் எந்த திக்கை நோக்கினும் எங்கிலும் அமைதியின்மையும் கலவரமுமே தாண்டவமாடிக் கொண் டிருந்தன.

அங்ஙனம் சீர் அழிந்து நலிந்துப் போயிருந்த அப்கனிஸ்தானத்தை, அமீர் காஜீ நாதிர்கானவர்கள், தங்களது திவ்விய அறிவாலோசனையினுல் அக்கொடிய ஸக்கூ கோஷ்டியாரிடமிருந்து காப்பாற்றியதுமன்றி அந் நாட்டின் இராணுவ பலத்தைப் பெருக்கி, அரசியல் பாரத்தை உறுதியுடன் நிலைநாட்டி, பல அரிய தொழிலபி விருத்திகளால் கஜானுக்களைப் போதியவள்வு நிரப்பி, இனியில்லா வண்ணம், அந்நாட்டுப் பாமரப் பிரஜைகளில் கல்வியறிகுண ஒழுக்காபி விருத்திக்காக வேண்டி அளவற்ற ஏற்பாடுகள் புரிந்து, இது காலே அப்கனிஸ்தானின் ஒவ்வொரு மூலேயிலும், பிரிதொரு பகுதியிலும் கல்வியபி விருத்திக்கான பாடசாலேகளேயும், கலாசாலேகளேயும் மதரஸாக்களேயும் ஸ்தாபிதஞ் செய்து வைத்துள்ளார்கள்.

அமீர் நாதிர்ஷா அவர்கள் அரசஸ்தானம் ஏற்ற ஆரம்ப காலத்தில் அது ஏழை அரசியலாகயிருந்ததால், அமீரவர்கள் தங்களது சொந்த திரவியத்தை ஏராளமாகச் செலவிட்டு அநேகப் பள்ளிக்கூடங்கள், மதரஸாக்கள் முதலியவற்றை ஏற்படுத்தி வைத்தார்கள். அதன்பின் கல்வி இலாக்காவை ஏற்படுத்தி அதன் வாயிலாக ஒவ்வொரு பகுதியின் ஜனங்களுக்கும் கல்வியொழுக்கம் போதிக்கும்படியான பிரஜோபகாரம் புரிந்தார்கள்.

அங்ஙனம் அமீர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கல்வி இலாக்கா சபையினர், அப்கனிஸ்தானத்திற்குத் தேவையான கல்விப் பயிற்சி முறைகளே மூன்றுவகையாக வகுத்தனர். அவையாவன :—

(1) அத்தேசமக்களில் சூட்சம புத்தியும் விளக்க சக்தியும் நுண்ணறிவும் உடைய மாணவர்களேத் தேர்ந்தெடுத்து, மேனுட்டு வைத்தியக்கலேயும், இஞ்ஜீனியரிங் சாஸ்திரமும், எலக்டிரிக் வித்தைகளும், ஆகாய விமானத்தொழிலும், மற்றும் பல நவீன கலேகளும் வித்தைகளும் கற்றுத் தேர்ந்து வருவதற்காக, அரசாங்கத்தின் சொந்தச் செலவில் ஐரோப்பாவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

(2) இஸ்லாமிய சன்மார்க்கக் கல்விபயில்வதற்காகவும், பிறர்க்குப் போதித்துக் கல்வியைப் பரத்தி வைப்பதற்காகவுமென்று, அரசாங்கத்தாருடைய சொந்த மேன்பார்வையின் கீழ் அப்கனிஸ்தானின் பற்பல பகுதிகளிலும் அநேக அரபிமத்ரஸாக்களும், அரபிக்காலேஜ்களும் திறக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

(3) அத்தேசம் முழுமையும் எங்கும் காலேஜ்களும், மதரஸாக்களும் விருத்தியாவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. இதன் பயனுய் தற்காலத்துக் கவசியமான எல்லாவிதக்கல்விகளும் நேர்த்தியான விதத்தில் அங்கு போதிக்கப்படுகின்றன. என்வே அங்கு, பற்பல பாஷைகளிலும் கல்வி போதிக்கப்படுகின்றது. ஒவ்வோர் ஸ்கூல்களிலும், காலேஜ்களிலுங்கூட அவசியமான அளவுக்கு சன்மார்க்கக் கல்வியும் கட்டாயமாக போதிக்கப்பட்டுவருகின்றது.

அமீர் நாதிர்ஷா அவர்கள், அரசஸ்தானம் வகித்து இதுவரை நான்கே வருடங்கள் தான் பூர்த்தியடைந்திருக்கிறதெனினும், இச்சொற்பகாலத்திற்குள் அவர்கள், கல்வியபி விருத்திக்காகச் செய்திருக்கும் தொண்டுகள் அபாரமானதாகும். அதைப்பற்றிய சுருக்கமான வரலாறுகளே ஈண்டெடுத்துக் கூறுவது அவசியமாகும். எனவே, நாதிர்ஷா அவர்களுடைய முயற்சியின்பயனுய் புதிதாக ஸ்தா

பிக்கப்பட்டதும், ஏற்கெனவே உண்டா யிருந்து க்ஷீணித்துப் போயிருந்தவற்றைப் புதுப்பித்து சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவரப்பட்டதுமான மதரஸாக்கள், காலேஜ்கள் ஆகியவற்றின் நாமங்களையும், அதன் மிகச் சுருக்க பூர்வ வரலாறுகளையும் மற்றும் விசேஷங்களையும் வரிசைக் கிரமப் படி இதன்கீழ் எடுத்துரைப்போம்:—

(1) ஹபீபிய்யா காலேஜ்.

ஹபீபிய்யா காலேஜ் என்பது காலஞ் சென்ற அமீரெகாபுல் ஹபீபுல்லாகான் அவர்களுடைய பெயரால் ஸ்தாபிதஞ் செய் யப்பட்டதாகும். மாஜீ அமீர் அமானுல்லா கானுடைய காலத்தில் இந்த காலேஜானது சாதாரணஸ்திதியில் ஒரு ஸ்கூலாகமட்டு மிருந்தது. அப்போது இந்த பாடசாலையின் நிலைமை நம்பத்தகுதியற்றதாயும், வருவாய் மிகக் குறைவானதாயும், செலவுகள் மிகமிக அதிகமானதாயுமிருந்து வந்தது. மேலும் அமானுல்லாகானுடைய காலத்தில் இதில் சிறுவர்களுக்குரிய ஆரம்ப படிப்பு மட்டுந் தான் சொல்லிக் கொடுக்கப்பட்டுவந்தது.

ஆனால், தற்போழ்து அந்தஸ்கூலை அமீர் நாதிர்ஷா அவர்கள், ஒரு பெரிய சிறப்பான காலேஜாக மாற்றி அமைத்திருக்கின்றார் கள். இக் கலாசாலைக்கு அரசாங்கத்தினர் போதுமான அளவு பொருளுதவி புரிந்து வருகின்றார்கள். மேலும் இந்தக் காலே ஜில் தற்காலத்துக்கு வேண்டுமான—அநேக மான சகலவித கல்விகளும், வித்தைகளும் பூர்த்தியாய் போதிக்கப்படுகின்றன. எனவே இக்கலாசாலையானது அப்கனிஸ்தானத்தின் கல்விச் செல்வத்துக்கே ஒரு மத்தியஸ்தல மாக விளங்கிவருகின்றது. இதன் கட்டிட மும் மிக நேர்த்தியாகவும் விசாலமாகவும் இருக்கின்றது.

(2) அமானிய்யா காலேஜ்.

அமானிய்யா காலேஜை மாஜீஅமீரான அமானுல்லாகானே தமது பெயரால் ஸ்தா பிதஞ்செய்து வைத்துச் சென்றார். பின்னர் அது இடிந்துப் பழுதாகியிருந்ததை, அமீர் நாதிர்ஷா அவர்கள் புதியமுறையில் கட்டிப் பூர்த்தியாக்கி மிககெம்பீரமாகச் செய்துவைத் தார்கள். தற்போழ்து இக்கலாசாலையின் வெளிப்பார்வை,பார்க்க ரம்பியமாக அழகாய் அமைந்திருக்கின்றது. இதில் கல்வியொழுக் கத்துக்கான ஏற்பாடுகளும் சிறந்த முறையில் செய்விக்கப் பட்டிருக்கிறது. போதகாசிரி யர்களை ஏற்பாடு செய்வதும் இக்காலேஜில் மிகவும் போற்றத்தக்க விதமாயிருக்கின்றது. இப்போதகாசிரியர்கட்கு அப்கன் அரசாங் கத்தினரே போதிய சம்பள உபகாரங்களும் கொடுத்துதவி செய்துவருகின்றார்கள்.

(3) காஜீ வ இஸ்திக்லால் காலேஜ்.

இது, காஜீகாலேஜ் என்றும் இஸ்திக்லால் காலேஜ் என்றும் இரண்டு பாடசாலைகளாக இருந்தன. நாதிர்ஷா அவர்கள் அவ்விரண் டையும் ஒன்றுகச்சேர்த்து ஒரே காலேஜாகச் செய்துவிட்டார்கள். இஃதானது அப்கனிஸ் தானுடைய முன்னேற்றத்தி னுடையவும், அமைதி சமாதான வாழ்வினுடையவும் ஒரு பெரும் ஞாபகார்த்தமாய் விளங்கி வருகின் றது.

(4) தாருல் முஅல்லிமீன் காலேஜ்.

இது அப்கனிஸ்தானத்தில் தனிப்பெ ருஞ் சிறப்புடைய டிரைனிங் காலேஜா கும். இதில் போதகாத் தொழிலுடைய உபாத்தியாயர்களைப் பயிற்சிபடுத்திவைக்கும் வேலை நடைபெறுகின்றது. அமீர் அமா னுல்லாகானுடைய காலத்தில் இந்தக் கலா சாலையில் சில உயர்தர வகுப்புக்கள்மட்டுந் தான் இருந்தன. ஆனால், இதுபொழ்து நாதிர் கானவர்களுடைய ஆட்சியில், ஆங்கு ஆரம்ப வகுப்புகள் பலதும் தற்கால அரசாங்கத்தின ரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் தற்கால அரசாங்கத்தினர் இந்த டிரைனிங் காலேஜின் அந்தரங்க பகிரங்க அம்சங்கள் பலவற்றையும் சீர்திருத்தி மேன்மைக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

(5) ஸன் அத்தீ (தொழிற்பயிற்சிக்) காலேஜ்.

இந்தக் கலாசாலையை முதன்முதலாய் ஸ்தாபிதஞ்செய்து வைத்தவர் மாஜீ அமீர் அமானுல்லாகானேயாவர். எனினும் அவரது காலத்தில் இக் கலாசாலையில் மாணவர்கட்கு அளிக்கப்பெற்றுவந்த வித்தைகள் மிகமிக அற்பசொற்பமாகவே இருந்தது. அதாவது, ரத்தினக் கம்பளம் நெய்தல், தச்சுவேலை, கட்டிட நிர்மாணப் பயிற்சி ஆகிய தொழிலுக் குரிய கல்விமட்டுந்தான் போதிக்கப்பட்டு

வந்தன. ஆனல், இதுபோது அக் கலா சாலையின் போதனும்சங்கள் மிக மிக அபிவிருத்தி செய்யப்பட் டிருக்கின்றது. எனவே, மேற்கூறிய தொழில்களோடு துணி நெய்தல், பழைய கட்டிடங்களைப் புதிய அரண் மனையாக மாற்றுவதற்குரிய பிளான்களை கற் பித்தல் முதலிய எண்ணற்ற புதிய தொழில் களும் போதிக்கப்பட்டு வருகின்றன. நாகரீக நவீனக்கலா ஆராய்ச்சியின்படி இன்னும் பலப்பல விதமான தொழில் வித்தைகளைப் போதிக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. எனவே தற்போதிய அப்கன் அர சாங்கத்தினர் தொழிலபிவிருத்திக்கான வழி யில்தான் அபரிமிதமாய்ப் பிரயாசை எடுத்து வருகின்றார்கள். ஆகையால் நாளுக்குநாள் இந்தக் காலேஜானது பலவிதத்திலும் அபி விருத்தி யடைந்துகொண்டே போகின்றது. மேலும் இந்தக் கலாசாலையானது இயற்கைக் காட்சிகள் மிகவும் ரமணீ கரமாயுள்ள மலைப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால், இக் கலா சாலையில் தொழில்களை அனுபவ பூர்வமாய் பயிற்றுவிப்பதற்கு அதிக சவுகரியங்கள் ஏற் படுகின்றன.

(6) அமானிய்யா காலேஜ்.

இது அப்கனிஸ்தானிலுள்ள மற்றெல்லா காலேஜ்களினும் மிகப் பெரியதாகும். இதனை அமானுல்லா கான்தான் ஆரம்பமாக ஸ்தா பிதஞ்செய்து வைத்தார். அமானுல்லா கானு டைய ஆட்சியினலான தேசோபகாரங்களில் இஃதொன்றுதான் பிரதானமானதாகும். எனினும் தற்கால அமீர் நாதிர்கானவர்கள் இந்தக்காலேஜை பலவிதத்திலும் மேன்மைக் குக் கொண்டுவந்து சீர்த்திருத்திவைத்துள் ளார்கள். மேலும் இதினுள் பல இலாக்காக் களும் அபிவிருத்தி செய்துவைக்கப் பட் டுள்ளன. இதற்காக புதிய கட்டடங்களும் கட்டிவைக்கப்பட்டுள்ளன. இன்னும் இப் பெரிய காலேஜின் நாற்புறமும் ஓர் அழ கிய உத்தியானவனமும் மிகநேர்த்தியாய் அமைத்து வைக்கப் பட்டிருக்கின்றன.

(7) அரபி காலேஜ்.

அரபிக்கலைப் பயில்வதற்குரிய மத்ரஸாக் களில் இதுவே மிகப்பெரிதாய் அமைக்கப் பட்டுளது. அமானுல்லாகானுடைய ஆட் சிக்காலத்தில் இக்காலேஜானது மிகவும் க்ஷீணித்த நிலைமையிலிருந்தது. அதன்பின் நாதிர்கானுடைய அரசாங்கத்தினர் இந்த காலேஜ்விஷயத்தில் அதிக சிரத்தை எடுத் துக்கொண்டு பலவிதத்திலும் இதனை மேன் மைக்குக் கொண்டுவந்தார்கள். இக்கலாசாலை யில் அரபிக்கலைகள் அனைத்தும் திவ்விய முறையில் போதிக்கப்படுகின்றன. இக்கல் விக் கழகத்தின் மேற்பார்வையின்கீழ் கிரா அத், தஜ்வீத் கலைக்கும், குர்ஆன் பாராயணஞ் செய்து ஹாபிஜாவதற்கும் சிறு சிறு மதர ஸாக்களும் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது. இந்தக் கலாசாலையில், முன்னி ருந்ததைவிட இப்போது மாணவர்கள் அபரி மிதமாயிருந்து கல்விப்பயின்றுவருகின்றனர்.

(8) விவசாயக் கலாசாலை.

'ஜிராஅத்தீ காலேஜ்' என்னும் இவ்விவ சாயக்கலாசாலை, அரசாங்கத்தின் விவசாய இலாக்காக்காரர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றது. கிருஷித் தொழிலை வித்தியா முறைப்படி போதிப்ப தற்காகவும், அதனை அனுபவப்பூர்வமாய் கற்பிப்பதற்காகவும் சாமர்த்தியம் மிக்க புரோப்ஸர் (தலைமையாசிரியர்கள்) பலர் உத்தியோகத்தி லமர்த்திவைக்கப்பட்டுள்ள னர். தவிர விவசாயத்தொழிலுக்குரிய நவீன நாகரிகக் கருவிகள் ஏராளமாக இக்கலாசாலை யில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

(9) தாருல் புனூன்

'தாருல் புனூன்' பலதையும் ஆராய்ச்சி செய்யும் இச்சர்வ கலாசாலையானது, ஷாஹ் நாதிர்கானவர்களால் பிரத்தியேகமாய் ஸ்தா பிக்கப்பட்டதாகும். இஃது அப்கனிஸ் தானத்தின் சரித்திரத்திலேயே தனிப்பெரும் மகிமைப் பொருந்தியதாகும். தற்சமயம் இக்கலாசாலை ஆரம்ப நிலைமையில் இருப்பி னும் இதற்கு நிகராக அப்கனிஸ்தானத் தில் வேறெதுவுமே கிடையாது. சுருங்கக் கூறுமிடத்து இதனையொரு பெரிய 'யூனிவர் ஸிட்டி' என்று கூறிவிடலாம்.

இந்த தாருல் புனூனுக்காக வென்று 'தாருல்அமான்' என்னும் வனப்பும் விசால மும் மிகுந்த கட்டிடத்தை ஒப்புவித்திருக் கின்றார்கள். ஆகையால் சகல அம்சத்திலும் இக்கலாசாலை சிறந்து விளங்குகின்றது. என வே தற்போது இக்கலாசாலையின் நிருவாகத்

தின்கீழ் இன்ஜினியரிங் கல்வி, கணித சாஸ்திரம், சட்டக்கலை, தத்துவ ஆராய்ச்சி, ஒழுக்க சாஸ்திரம், இரசாயனக்கலை, பிஜிக்ஸ், விவசாயக்கலை, உலோகங்கள் கண்டுபிடித்து சுரங்கந் தோண்டி எடுக்கும் கலை, வைத்தியக் கலை, மேனாட்டு வைத்திய (டாக்டரிங்) கலை, ஆப்ரேஷன்கள், மருந்துகள் தயாரித்தல் முதலிய இன்னும் பற்பலவிதமான நாகரீகக் கல்விகளெல்லாமும் போதிக்கப்பட்டு வருகின்றன. இக்கலாசாலையில் போதனைப் புரிவதற்காகவென்று ஐரோப்பா, ஆசியா முதலிய வெளிநாடுகளிலிருந்தும், அப்கனிஸ்தானின் உள்நாட்டிலிருந்தும் தக்க புரொப்ஸர்களும் விற்பன்னர்களும் வரவழைக்கப்பட்டு உத்தியோகஞ் செய்துவருகின்றார்கள். இக்கலாசாலையில் மற்றக்கல்விகள் போதிக்கப்படும் இலாகாக்களைக் காட்டிலும் வைத்தியக் கலை போதிக்கும் இலாக்காதான் மிகப்பெரிதாயிருக்கின்றது. இதுவன்றி இந்த தாருல் புனூனின் மேற்பார்வையில் தனிப்பட்ட முறையில், யூனானி வைத்தியம், டாக்டர் வைத்தியம், ஆப்ரேஷன்கள், மருந்துகள் தயாரித்தல் முதலிய வைத்தியத் துறைக்காகவென்றே பிரத்தியேகமான காலேஜ் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் இதை 'வைத்திய யூனிவர்ஸிடி' என்று கூறுவது தகுமானதாகும்.

இதர ஏற்பாடுகள்

மேலே கூறியவைகளெல்லாம் அப்கனிஸ்தானின் முன்னேற்றத்துக்கும் நன்னாகரிகத்துக்குமுரிய முதல் சாதனங்களேயாகும். எனவே இந்த சாதனங்களெல்லாம் நாளுக்கு நாள் மேன்மைக்கு வருவதற்குரிய அறிகுறிகள் அதிகம் காணப்படுகின்றன.

மேற்படி தாருல் புனூனும் வைத்திய யூனிவர்ஸிட்டியும் திறந்து வைக்கப்பட்டபோது, காபுலிலும் அப்கனிஸ்தான் முழுமையிலும் வசிக்கும் பிரஜைகளெல்லாம் கொண்டாட்டங்களும், சந்தோஷ ஆரவாரங்களும் புரிந்தார்கள். எனவே இதானது 1932-ம் வருஷத்தின் மிக முக்கியமான சம்பவமாகும்.

தாருல் புனூனையும், வைத்திய யூனிவர்ஸிட்டியையும் மேற்பார்வை பார்த்து நடத்தி வரும் பிரதமத் தலைவர் டாக்டர் ரபகிபேக் என்பவராவர். இவர் கல்வியாற்றலில் சிறந்தருக்கியராவர். இவருக்கு மாதந்தோறும் ஐந்தாயிரம் ரூபாய்கள் சம்பளம் அளிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கூறியவைகளன்றி கல்வி யபிவிருத்திக்காகவென்று மற்றும் பல சாதாரண மதரஸாக்களும் காலேஜ்களும் தக்கப்படி நடைபெற்று வருகிறதெனினும் அவற்றின் விபரங்கள் விரிவஞ்சி ஈண்டு கூறப்படவில்லை.

அப்கனிஸ்தானின் பாஷாபிவிருத்தி

அப்கனிஸ்தானின் கல்வித் துறைகளில் பார்ஸியும், புஷ்த்தூவும் தான் கட்டாய முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவர்களும் அவ்விரு பாஷைகளையும் கற்றுகவேண்டிய அவசியமேற்பட்டிருக்கின்றது. மேலும் அவ்வரசாங்கத்தின் நடைமுறைப் பாஷையும் இவ்விரண்டாகத்தானிருக்கிறது.

அமானிய்யா காலேஜிலும் இதர கலாசாலைகளிலும் ஜர்மன், பிரான்ஸ் முதலிய அன்னிய பாஷைகள் கற்பித்துக் கொடுப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜர்மன், பிரான்ஸ் முதலிய பாஷைகள் கற்றுக்கொள்வதற்கு இரண்டு வருடம் முதல் நான்கு வருடம்வரை கல்விப் பயிலவேண்டிய திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுளது. இக்காலேஜ்களில் அன்னிய பாஷை கற்றுக்கொடுப்பதற்காக அன்னிய தேச புரோப்ஸர்களும் போதகாசிரியர்களும் நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். உதாரணமாய் அமானிய்யா காலேஜில் எட்டுப் பேர்களும், நபீஸிய்யா தொழிற் கலாசாலையில் எழுபேர்களும், ஹபீபிய்யா காலேஜில் மூன்று பேர்களும், தாருல் முஅல்லிமீனில் ஒருவரும் அன்னியப் பாஷைக்குரிய புரோப்ஸர்களாக இருந்து வருகின்றார்கள்.

தாருல் முஸன்னிபீன்.

அப்கன் அரசாங்கத்தில் தாருல் முஸன்னிபீன் என்றொரு ஸ்தாபனமும் ஏற்படுத்திவைத்துள்ளார்கள். இவ் விஸ்தாபனத்தின் நோக்கம் அன்னியப் பாஷைகளிலுள்ள திவ்வியமான நூல்களை தக்க பாஷாப்பாண்டித்தியம் பெற்ற எழுத்தாளர்களைக் கொண்டு அப்கன் பாஷையில் மொழிபெயர்க்கச் செய்து புதுஞானத்தைப் பரத்துவதாகும். இந்த தாருல் முஸன்னிபீனில் அன்னிய நாட்டு அறிவாளிகளின் ஒரு கூட்டமும் இரு

ந்து வேலை பார்த்து வருகின்றது. இவ்விஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டு சொற்பகாலமேயாயிருப்பினும், இதுவரை 30-க்கு மேற்பட்ட புதிய நூல்கள் இயற்றப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டும் பிரசுரமாகியுள்ளன. எனவே ஓரிரண்டு வருடங்களுக்குள் மிக நேர்த்தியும் பிரயோஜனமுமான நூல்களை சுதேச பாஷையில் வெளிப்படுத்தி நாட்டுக்கு நலனிழைத்துளது. எனவே இவ் விஸ்தாபனத்தின் சேவை போற்றற்குரியதேயாகும்.

மாதப் பத்திரிகை.

இந்த தாருல் முஸன்னிபீனின் நிருவாகத்தின்கீழ் (ஆயின யே இர்பான்) என்றொரு மாதப் பத்திரிகையும் மிக நேர்த்தியான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. இது, கல்வி யபிவிருத்தியையும் நல்லொழுக்க தத்துவார்த்தங்களையும் மக்களுக்கு மாதந்தோறும் எடுத்து போதிப்பதில் இணையற்ற மாசிகையென்று அப்கனிஸ்தான் முழுமையும் பிரக்யாதி யடைந்துபோயிருக்கின்றது.

புஸ்தகவாசக சாலைகள்.

அப்கனிஸ்தானின் புரட்சிக் காலத்தில் கல்வியின் மகிமையை அறியாத சில மூர்க்கக் கலகக்காரர்கள் எல்லா புஸ்தகங்களையும் புஸ்தக சாலைகளையும் தீக்கிரையாக்கி நாசப்படுத்திவிட்டார்கள். அதன்பின், ஷாஹ் நாதிர்ஷா அவர்களுடைய் உபகாரத்தின் பயனாய், அப்கன் கல்வி இலக்காக்காதார் இதுவரை புதிதாகவே சுமார் நான்கு லக்ஷம் புஸ்தகங்கள் வரை சேமித்து, புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி ஜனோபகாரம் புரிந்துவைத்துள்ளார்கள்.

இதுவன்றி பொதுஜனவாசக சாலையும் அரசாங்கத்தினரால் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகரப் பகுதிகளிலும், ஜனப்பழக்கமுள்ள பொதுஸ்தலங்களிலும் எண்ணற்ற லைப்ரெரிகளும், புத்தகசாலைகளும் ஏற்படுத்தியுள்ளார்கள். அதைச்சேர்ந்த ஸ்தலங்களில் ஜனங்களின் மனோ உல்லாசத்துக்கான சாதனங்களும் செய்து வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெருக்கம்.

அப்கனிஸ்தானின் கலா சாலைகளிலுள்ள மாணவர்களில், நுண்ணறிவும் திறமையும் வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, விவசாயக்கலை, கணித சாஸ்திரம், பாலம் நிர்மாணக்கலை, இன்ஜினீரிங்கலை கட்டிட நிர்மாணக் கலை, ரேடியோ (ஆகாய வசனி)க்கலை, தந்தித் தொழில், டாக்டர் தொழில், பல் கட்டுந் தொழில், இரசாயனக்கலை, இராஜரீகத் தந்திரங்கள், குழாய்மூலம் நீர்ப்பாய்ச்சும் உபாயங்கள், பூமி ஆராய்ச்சிக்கலை, நாணயம் அச்சிடும் தொழில், இராணுவப்பயிற்சி, வர்த்தகத்தந்திரம், ஆலைத்தொழில் முதலிய வித்தைகளைக் கற்றுத் தேர்வதற்காகவென்று அரசாங்கச் செலவுகளாலும் போஷணையினாலும் பிரான்ஸ், ஜர்மன், அமெரிக்கா, லண்டன், ரஷியா முதலிய நாடுகட்கெல்லாம் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இதன் பயனாக சென்ற வருடம் 11-மாணவர்கள் பிரான்ஸ்ஜர்மனி ஆகிய நாடுகளிலிருந்து கோரிச்சென்ற கலைகளில் தேர்ந்து அப்கன் வந்து சேர்ந்தார்கள். இம்மாதிரியாக இதுவரை 148-மாணவர்கள் பற்பலவிதமான வித்தைகளில் படித்துத் தேர்ந்து பாண்டித்தியம் பெற்று தாய்நாடு வந்து சேர்ந்து, தாய் நாட்டிற்குத் தொண்டியற்றி வருகின்றார்கள்.

தவிர அப்கனிஸ்த்தானிலுள்ள (உள்நாட்டு) கலாசாலைகளிலிருந்தும் ஆண்டுகள் தோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியாராய்ச்சிகளிற் றேர்ந்து வெளிப்பட்டு வருகின்றார்கள். இன்னோரால் நாட்டுக்கும் மக்களுக்கும் அரசியலுக்கும் உண்டாகும் அனுகூலங்கள் அளவற்றனவாகும்.

கிராமப் பாடசாலைகள்.

அப்கன் அரசாங்கத்தினர், நகர்ப்பகுதிகளில் கல்விக்கான ஏற்பாடுகள் செய்துவைத்திருப்பதைப்போன்று, கிராமாந்தரப் பகுதிகளிலும் அந்தந்த இடத்துக்குத் தக்கமுறையில் கல்வி யபிவிருத்திக்கான தக்க ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். அதாவது, கந்தஹார், குத்கன், பதக்ஷான், ஹிராத், மஜார் ஷரீப், மைமனா, புர்ராஹ், தென்பகுதிகள், கிழக்குப்பகுதிகள் முதலிய பற்பல இலாக்காக்களிலும், பற்பல சிற்றூர் கிராமங்களிலும் ஆரம்ப பாடசாலைகளும், மக்தப்களும் தெருப்பள்ளிக்கூடங்களும், மதரஸாக்களும் ஏற்படுத்தி வைத்து அவைகளுக்குப் போதிய அளவு தராதரப்படி பொருளுபகாரங்களும் புரிந்து வருகின்றார்கள்.

மஸ்ஜிதின் பரிபாலனம்.

அப்கன் அரசாங்கத்தின் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு மஹல்லா (பகுதி) களிலும், மஸ்ஜிதும் மதரஸாவும் ஏற்படுத்தி நடத்தி வரும் வேலையையும் குறைவின்றி புரிந்து வருகின்றார்கள். அவ்வாறான மஸ்ஜிதின் மதரஸாக்களில் சிறு பிள்ளைகளுக்கு குர்ஆன் ஷரீபு ஓதிக்கொடுத்தலும், ஆரம்பப் பாடம் கற்பிக்கப்பட்டு வருவதும் நடைபெற்று வருகின்றன. எனவே அரசாங்கத்தினர் சிறுபிள்ளைகளின் கல்வி விஷயத்தில் அதிக சிரத்தைக்காட்டி வருகின்றார்கள். அன்னோர்க்கு பழைய கஷ்டமான முறையில்லாமல் இலேசான நவீன முறையில் பாடங்கள் கற்பித்துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அஞ்சுமன்-சங்கங்கள்.

அப்கனிஸ்தானிலுள்ள ஒவ்வொரு பெரிய காலேஜ்களிலுமுள்ள மாணவர்கள், தங்களைச் சீர்திருத்திக் கொள்ளவும், பிரசங்கம் செய்து பழகவும், கவி, வியாசம் முதலியன எழுதி பயிற்சிபெறவும், தர்க்கவாதஞ்செய்து வாக்கு வன்மைப் பெறவும், இன்னும் இதுபோன்ற அறிவிருத்திக்கான நற்காரியங்களுக்காகவுமென்று அநேக சபைகளையும் சங்கங்களையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். இவ்விதமான சங்கங்கள், ஹிராத், கந்தஹார், கால் முதலிய முக்கிய இடங்களில் பலமான ஏற்பாட்டின்மீது நடைபெற்று வருகின்றன.

சாரணப் படைகள்.

அப்கனிஸ்தானின் மாணவர்கள் சென்ற இரண்டாண்டுகளாக இஸ்கவுட்டு (சாரணத் தொண்டர்)களாகச் சேர்ந்து வேலைசெய்யும் இயக்கத்திலும் வெகுமும்மரமாய் உழைத்து மேன்மைக்குவந்துள்ளார்கள். எனவே, பிரிதொருகாலேஜ், ஸ்கூல்களின் மாணவர்கள் படிப்பு நேரம்போக மற்றும் நேரங்களில் சாரணர்படையில் சேர்ந்து பயிற்சிகள் பெறுவதிலும், ஜனோபகாரமான காரியங்களில் உழைப்பதிலும் நேரத்தைச் செலவுசெய்து வருகின்றார்கள். அரசாங்கத்தினர்கூட அத்தகைய இஸ்கவுட்களுக்கு உதவியாக, இஸ்கவுட்மாஸ்டர்களை நியமித்துவைத்துள்ளார்கள். இவ்வருடம் தான் அங்குள்ள இஸ்கவுட்லீக் காரர்கள் சர்வதேச இஸ்கவுட் இயக்கத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆகையால் மற்ற நாட்டு இஸ்கவுட்களுக்கு உலகமெங்கும் ஆதரவு இருப்பதைப் போல் இனி அப்கனின் இஸ்கவுட்களுக்கும் ஆதரவு இருந்துவரும்.

சமாச்சாரப் பத்திரிகை

நாடெங்கணும் செய்திகளைப் பரப்பும் பிரஸ் சாதனங்கள், அப்கனிஸ்தானத்தில் மற்ற நாடுகளுக்குக் குறைவாகவேயிருந்தது. ஆனால் இதுவும் தற்போது வன்மையும் விருத்தியும் அடைந்துவருவதால், கூடிய விரைவில் அப்கனும் இதுவிஷயத்தில் மற்றநாடுகட்குள்ள அந்தஸ்த்தை வகித்துவிடும். எனவே தற்போது அப்கனிஸ்தானத்தில் 'இஸ்லாஹ்' என்ற தினசரிப்பத்திரிகைதான் ஏராளமாகப் பிரசுரிக்கப்படுவதாகவும், ஜனங்களிடம் பூர்ண ஆதரவுப் பெற்றதாகவும் வெற்றியோடு நடைபெற்றுவருவதாகவுமுளது. 'காபல்' என்பதும் 'ஆயினயேஇர்பான்' என்பதும் கல்வியறிவு அபிவிருத்திக்கான நூதன விஷயங்களை மாதந்தோறும் வெளியிடும் சிறந்த சஞ்சிகைகளாகும். இதுவன்றி மற்றுஞ் சில பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன.

காஜீ நாதிர்ஷா நீடூழி வாழ்க!

மேலே கூறப்பட்டுவந்த அரும்பெருஞ் சேவைகளெல்லாம் ஷாஹ்காஜீ அமீர் நாதிர் கான் அவர்கள் அரசஸ்தானம் வகித்தபின் அவர்களுடைய நீதிமிகுந்த அரசாக்ஷியின் பயனாய்ச் சாதிக்கப் பெற்றவைகளாகும். அவைகளையும், இன்னும் மென்மேலும், நாதிர்ஷா அவர்கள் முயற்சித்து வருவதையும்நோக்குமிடத்து, நாதிர்ஷாவின் பொருட்டால் அப்கனிஸ்தானம் கல்வியிலும் நாகரிகத்திலும் நனி சிறந்த நாடாக விளங்கிவிடுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நாதிர்ஷாவின் ஆட்சியினாலான அனுகூலங்கள் பிரத்தியக்ஷமாய் விளங்கியிருந்துங்கூட, ஆங்குள்ள வஜீர்வர்க்கத்தினரிலும் மஸ்ஊதிக் கோஷ்டியினரிலும் ஒருசாரார் கிளர்ச்சியும் புரட்சியும் செய்தே வருகின்றார்கள். இத்தகைய நாசப்புரட்சியினால் அன்னோர் என்னபயன் காணுகின்றனரோ? அறிகிலேம். முன்னைய புரட்சியின் பலாபலன்களை

அன்னோர் கண்டனுபவித்தபின்னரும், அன்னோருக்கு நல்ல புத்திவராமை விந்தையினும் விந்தையே.

ஆகையால், கருணை மிகுந்த எல்லாம்வல்ல அல்லாஹ்தஆலா அப்கன் அரசாங்கத்தை மென்மேலும் முன்னுக்கு வரும்படி செய்வதோடு, அதன் அதிபராய காஜீ அமீர் நாதிர் ஷா அவர்கள் நீடூழிகாலம் வாழ்ந்து நாடும் பிரஜைகளும் செழிப்புற்றுவாழ இன்னருள் பாலிப்பானாக! ஆமீன்.

முரசின் முசடு.

அன்புற்றநேயர்காள்! 8-1-33 வெளியான 'முரசு' என்னும் தமிழ் பத்திரிகையில் 'முடியிழந்த மன்னர் அப்துல் காதர்' என்னும் மகுடத்தின் கீழ் ஒரு கட்டுரை வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் உண்மைக்கு மாறான அநேக அபாண்டப்புளுகுகள் வெளியாகி மலிந்து கிடப்பதோடு, துருக்கிதேச ராஜிய விஷயத்தைக் குறிப்பிடுங்கால், முஸ்லிம்களின் மனம் புண்படத் தக்க விதமாயும் வரையப்பட்டிருக்கிறது. எனவே அக்கட்டுரையின் ஒரு பாகத்தை கீழே தருகின்றோம். அதாவது:—

> பல்லாண்டுகளுக்கு முன் துருக்கி பலிஷ்டமாகி யிருந்ததுண்மை. ஆனால் 19-ம் நூற்றூண்டு பிறந்தது. அப்போது அந் நாட்டிலிருந்தவர்க்கு கல்வி அறிவு நாஸ்த்தி. அவர்களது அரசனான சுல்தானோ ஆண்மை அற்றவன். ஆகவே அவனது சர்க்காரும் எவ்விஷயத்தையும் பேசுவதில் ஜரூர், காரியத்தில் ஆமை வேகந்தான்.............19-ம் நூற்றூண்டின் அந்திய காலம் புது சுல்த்தான் அப்துல் ஹமீது பட்டத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் கடுமனத்தினர் நான் ஈஸ்வராம்சமாக, அவரது சாயை என இப்பூ உலகில் ஜனித்திருக்கிறேன்' என்றுகூறி தன் ஏதேச்சாதிகாரத்தை நடத்தலானூர்...........

இதுபோலவே அக்கட்டுரையின் போக்கிருக்கிறது. சுல்த்தான் அப்துல் ஹமீதுகான் அவர்கட்கும் துருக்கி தேசிய வாதிகளுக்கும் போராட்டம் ஏற்பட்டது உண்மையே. ஆனால் அவர்களின் காலத்திற்குப் பின் துருக்கி தேசம் அளவு கடந்து சீர் கெட்டு முன்னேற்றமடையாது போயிற்று. தவிர கிறிஸ்தவர்களின் சூழ்ச்சியிலகப்பட்டு அத்தேசம் சின்னாபின்னமாக்கப்பட்டுப்போயிற்றென்பதையும் யாவரும் நன்கறிவர். ஆனால் அதில் ஒரு சில பாகம் மட்டும் அத்தேச வீரர் முஸ்தபா கமால்பாஷா அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சுல்த்தான் அப்துல் ஹமீதுகான் அவர்களுடைய அரசாக்ஷியின் முக்கியாம்சங்களை அறியாதவர்கள்தான், அன்னவர்கள் மீது குறை கூறிவருகின்றனர். அவ்வாறே முரசும் தனது அறியாத்தனத்தால் குறைகூற முற்பட்டு, சுல்த்தான் ஈஸ்வராம்ஸமாக, தான் அவதரித்திருப்பதாகக் கூறி ஏதேச்சாதிகாரம் செலுத்தியதாக வரைகின்றது. சுல்த்தான் அவர்கள் முடியரசாக்ஷியின்மீது பிரீதி கொண்டிருந்தாலும் நீதி வழுவா நெறி முறையைக் கைக்கொண்டிருந்தார்களென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மேலும் சுல்த்தான் அவர்களுடைய புதல்வரின் விஷயத்திலும் ஆதாரமற்ற கட்டுரைகள் வெளியிடப் பட்டிருக்கிறது. இவ்வாறு ஆதாரமற்ற வீண் புழுகுகளை வெளியிட்டு ஒரு சமுகத்தினரின் மனதைப் புண்படுத்துவதில் முரசுக்கு யாது பயன் ஏற்படப்போகிறதோ தெரியவில்லை. சமுகச் சச்சரவுகளைக் கிளப்பி விடுவதே ஒரு சிலரின் நோக்கமாக யிருந்து வருகின்றது. அதற்காக அன்னோர் அநேக புழுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு வருகின்றூர்கள். இவ்வாறான கட்டுரையை கவர்ன்மெண்டார் கவனித்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

தா. இ. ஹாபிஸின் தடுமாற்றம்.

(ஜனப் M. V. அப்துல்ஜப்பார் சாஹிப் வரைவது)

நேயன்மீர்! 31-3-33-ல் வெளிவந்துள்ள தா. இ. வில் 'மார்க்க வினவிடை' என்னும் மகுடத்தின்கீழ் அடியில் குறிப்பிடும் வினவும் விடையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அதனை அப்படியே நேயர்களின் பார்வைக்குத் தந்து, அதில் வல்லவரான ஹாபிஸ் என்பார் இழைத்திருக்கும் தவறை விளக்கிக்காட்டி, வல்லவனுக்கு வல்லவன் இவ்வையகத்திலுண்டென்பதை விளக்கிக் காட்டுவோம்.

தா. இ. யில் வரையப்பட்டிருப்பதாவது :—

(2) நம் முஹம்மதிய லாப்படி தகப்பன் சொத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பாகமிருக்கும்போது தகப்பனுக்கு முன்னல் இறந்துபோன பெண்ணுக்கு மட்டிலும் ஏன் பாகமில்லை? இறந்துபோன பெண்ணுக்குக் குழந்தை இருந்தாலும் பாகமில்லையா? அப்படியானல் தகப்பனுக்கு முன் இறந்துபோன ஆண்பெற்ற குழந்தைக்கு மட்டிலும் ஏன் பாகம் கொடுக்கவேண்டும்?

விடை (2) தகப்பனுக்கு முன் மரணமடைந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ பாகமில்லை என்பது எமது மார்க்கவிதியாகும். இவ்விருபாலாருக்கே பாகமில்லை என்று சொன்னல் இவர்களுடைய சந்ததியார்களுக்கு மட்டில் எங்கிருந்து பாகம் கிடைக்கப் போகின்றது? ஆனல் கேள்வியில் கண்டபடி, தகப்பனுக்கு முன் இறந்துபோன ஆண்பெற்ற குழந்தைக்கு மட்டிலும் ஏன் பாகம் கொடுக்கவேண்டும்?' என்று கூறுவது ஆச்சரியமான ஒரு விஷயமேயாகும். இஸ்லாத்தின் எந்த சட்டத்திலிருக்கிற தென்பதை எம்மால் உணர்ந்து கொள்ளக் கூடவில்லை. வல்லவனுக்கு வல்லவன் இவ்வையகத்தி லுண்டென்பதை நான் அறிவேனகையால் இங்ஙனம் ஓர் அக்கிரம நூதன சட்டம் இஸ்லாத்தின் ஷரீஅத்துள் எங்குள்ளது என்பதைத் தெரியப்படுத்த யாரேனும் முன்வரக் கூடுமா?

சோதரீர்! சன்மார்க்கத்தில் சற்றேனும் அனுபோகமுள்ள ஒவ்வொவரும், இஸ்லாம் மார்க்கத்தில் ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை சம்மந்தமான ஓர் சிறிய விஷயத்தில் ஹாபீஸ் தடுமாற்றமடைந்திருப்பதை நன்கு தெரிந்து கொள்வர். எனவே, தகப்பனுக்கு முன் இறந்துபோன பிள்ளைகளுக்கு, தகப்பன் சொத்திலிருந்து பாகம் கிடைக்காதென்பது இஸ்லாத்தின் சட்டமே யாகுமென்பதிலய்ய மில்லை. இதனல், இவர்களின் சந்ததிகளுக்கும் பாகம் கிடைக்கமாட்டா தென்றும், அவ்வாறு பாகம் கிடைக்குமென்று கூறுவது அக்கிரம நூதனச் சட்டம் என்றும் ஹாபிஸ் உளறிக்கொட்டுகின்ருர். இதிலிருந்து, இவர் முஸ்லிம்களின் பாகப் பிரிவினை விஷயங்களை நன்குணர்ந்தவரென்பதும், அவ்வாறு விடை அளிக்கும் பத்வாக்களுக்கு சன்மானமாக ரூ. 5 பெற அருகதை யுள்ளவரென்பதும் செவ்வனே புலனுகின்றது?

தகப்பனுக்குமுன் இறந்துபோன பிள்ளைகளின் சந்ததிகளுக்கு ஏகதேசத்தில் பாகம் கிடைக்காதென்று கூறுவது தவறேயாகும். ஏனெனில், அச்சந்ததிகளுக்கு அந்தப்பாட்டனின் பிள்ளைகள் அதாவது, அச்சந்ததிகளின் சிற்றப்பர், பெரியப்பர் இருப்பார்களாயின், அச்சந்ததிகளுக்கு பாகம் கிடைக்கமாட்டாது. சிற்றப்பார், பெரியப்பாரின்றி அச்சந்ததிகள் மட்டுமிருப்பார்களாயின், அதாவது ஒருவன் இறந்தான் அவனுக்குமுன் இறந்துபோன அவனது ஆண்பிள்ளையின் மகன் மட்டும் இருக்கின்ருன் இதில் அந்தசந்ததி பாட்டனுடைய சொத்திலிருந்து அனந்தரம் பெறுவான். ஆனல் இவனுடன் அப்பாட்டனுக்கு முன் இறந்துபோன பெண்மகளின் மகனெருவன் இருப்பானுகில், அவனுக்கு பாகம் கிடைக்கமாட்டாது. ஆண்பிள்ளையின் சந்ததிக்குத்தான் பாகம் கிடைக்கும். ஆனல் பெண்பிள்ளையின் சந்ததிமட்டு மிருக்குமாயின் அதாவது, அப்துல்லா இறந்துபோனன் அவனுக்குமுன் மரணமடைந்த பெண்பிள்ளையின் சந்ததிமட்டுமிருப்பார்களாயின், அவர்களுக்கு ஹனபிமத்ஹப் பிரகாரம் பாட்

டனுடைய சொத்திலிருந்து அனந்தரம் கிடைக்கும். இதுவிஷயங்கள் றத்துல் முஹ்த்தார், ஸிராஜீ முதலிய கிரந்தங்களில் விபரிக்கப் பட்டிருக்கின்றது.

வினவிடுத்தவர், தகப்பனுக்குமுன் இறந்துபோன ஆண்பிள்ளையின் சந்ததிக்கு மட்டும் பாகம் கிடைப்பானேன்? அவ்வாறு இறந்துபோன பெண்பிள்ளையின் சந்ததிகளுக்கு மட்டில் ஏன் பாகம் கிடைப்பதில்லை என வினவுகின்றார். அதன் காரணம் இன்னதென்பதை யான்மேலே விளக்கியுள்ளேன். இதனையறியாது, தகப்பனுக்கு முன் இறந்துபோன பிள்ளையின் சந்ததிகளுக்கு பாட்டன் சொத்தில் அறவே பாகம் கிடைக்காது; அவ்வாறு அவர்கள் பாகம் எடுத்துக் கொள்வது, 'வல்லவன்வகுத்தது வாய்க்கால்' என்றுசொல்வதற்கேற்ப அக்கிரமமானதாகுமென்று வரைகின்றார். ஹாபிஸ் என்பார் தமது அறியாமையால், இதற்கு முன் பலவாறு மார்க்கவினக்களுக்குத் தவறிழைத்தது போல் இதுபொழுதும் தவறிழைத்திருக்கிறு ரென்பது திண்ணம். ஆனல் இவ்வாறு தவறிழைத்துவிட்டு, சட்டப்படி பாகம் கிடைக்குமென்பது அக்கிரம நூதன சட்டமென்று தன் அறியாத்தனத்தால் கூறுகின்றார். தவிர, சன்மார்க்க கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப பாகம் கிடைக்குமென்று கூறுவது அக்கிரம சட்டமாயின், பாகம் கிடைக்கமாட்டாதென்று சன்மார்க்கத்திற்கு முற்றமுற்ற மாற்றமாய்க் கூறுவதுதான் ஒழுங்கான அக்கிரமமற்ற சட்டம் என்று ஹாபிஸ் நினைத்துக்கொண்டிருக்கிறார்போலும். என்னே இவரின் அறியாமை? இவர், இவ்வாறு சன்மார்க்கத்திற்கு முரணுக மார்க்கவிடையளித்துக்கொண்டிருக்கும் நிலைமையில், பட்டம் பரிகொடுத்ததை யுன்னி யுன்னி ஏன் கவலைப்படவேண்டும்? ஆகவே இவ்வாறு அவர் அளிக்கும் மார்க்கவிடை என்று கூறப் படுபவைகளைக் கண்டு யுவர்கள் ஏமாந்து போகாமல் விஷயத்தை நன்குணர்வார்களாக. தவிர ஹாபிஸ் என்பார் இவ்வாறு மார்க்கவிடை யில் அநேகத்தவறுகள் செய்திருப்பதை பன்முறையும் நம்மால் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதை நேயர்கள் நன்கறிவர். இந்த இலக்ஷணத்திலும் ஹாபிஸ், பறிபட்டுப்போன பாக்கவி பட்டத்தைக் கைவிடாது'பழைய பிளாக்கை அப்படியே பிரசுரித்து வருவது விந்தைக்குறியதல்லவா? எனவே, நேயர்கள் உண்மையைக் கடைப்பிடித்து அதனைப் பின்பற்றி யொழுவார்களாக.

'யவ்முந்நபீ' விழாவும், முஸ்லிம்களின் கடமையும்.

தேசத்தலைவர்களின் அறிக்கை.

முஸ்லிம் சோதரர்காள்!

உலக ரெட்சகர் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது அழகிய முன் மாதிரியை உலகமக்களிடையே பிரசாரஞ் செய்வதானது, இருபதிகளிலும் மானிடன் சிரேஷ்டத்தனம் பெற்று சிறந்து விளங்குவதற்குள்ள முக்கியகாரணமாகத் திகழ்கின்றது. எனவே நம் முஸ்லிம் நேயர்கள், உத்தமகுணசீலர் ஏகத்துவத்தூதர் (ஸல்.) அவர்களின் வனுப்பம் தங்கிய சற்குணங்களையும் நடவடிக்கைகளையும் முன்மாதிரியாகக்கொண்டு அதன்படி நடந்து வருவார்களாகில், உலக மானிடர்களுக்கிடையே. உயர்பதவி அடைவதற்குத் தகுதியுள்ளவர்களாய் விடுகின்றார்கள். ஆகவே முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுவதற்கும் ஒருவரோ டொருவர் சகோதர வாஞ்சை பாராட்டுவதற்கும், ஈமானில் பரிபூர்ணமானவர்களாகத் திகழ்வதற்கும், இஸ்லாத்தின் உண்மைக்கொள்கைகளையும் அதன் மகிமைகளையும் தெரிந்துகொள்வதற்கும், நேரான உண்மையான மார்க்கம் ஒன்றுதானிருக்கிறது. அஃதாவது, முஸ்லிம்கள் தங்கள் நடவடிக்கைகளையும் சற்குண ஒழுக்கங்களையும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரிக்கு ஒற்றவிதத்தில் அமைத்து அதன்படி நடக்க முற்படுவதேயாகும்.

லாகூர்பட்டி வீரத் பிரசார சபையாரின் அரிய முயற்சியால் உலகமுஸ்லிம்கள் இது காலை எம்பிரான் உத்தமத்தூதர் (ஸல்.) அவர்களின் நடவடிக்கைகளை முன்னோக்க முற்பட்டிருக்கின்றார்கள். எனவே உலக முஸ்லிம்களில் மாபெரும் தலைவர்களும், கல்வியறிவாளரும், முஸ்லிம் அரசர்களும், இவ்வியக்கத்தை அன்போடு வரவேற்கின்றார்கள். மேலும் லாகூர் வீரத்கமிட்டியானது இவ்வியக்கத்தை ஆரம்பமுதல் வியாபாரத் தோரணையிலேயே நடத்திவருவது, இது சிறந்து விளங்குவதற்கு ஒருகாரணமாக யிருக்கின்றது. தவிர வீரத்கமிட்டியானது தனது பிரசாரகர்களை எல்லைப்புறம், குஜ்ராத், மத்திய மாகாணம், பம்பாய் முதலிய இடங்களுக்கு அனுப்பி முஸ்லிம்களை 'ரஹ்மதுன்லில் ஆலமீன்' உலகதயாளர் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதற்குப் பிரசாரம் செய்துவருவதாக செக்ரெடரி அவர்களின் அறிக்கைமூலம் தெரியவருகிறது. ஆகவே ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள தலைவர்கள், ஆலிம்கள், முஸ்லிம் சபைகளின் அங்கத்தினர்கள் முதலியயாவரும் முழுமனதோடு வீரத் பிரசாரகர்களுக்கு தக்க உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வுலகினில் சகல விஷயங்களைப் பார்க்கினும் அதிகப் பிரயோசன மளிக்க வல்லதும், அல்லாஹ்த ஆலாவின் விருப்பத்தைப் பெறக்கூடியதும், ஆண்டவனல் படைக்கப்பட்ட வஸ்த்துக்களுக்கு நலன் அளிக்கக் கூடியதுமான விஷயம், முஸ்லிம் மக்கள் யாவரும் ஒற்றுமையாகி பரிசுத்த மனதோடு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரியைப்பின்பற்றி நடப்பதற்கு முயற்சிப்பதேயாகு மென்பதை எடுத்துக் கூறத்தேவையில்லை. ஆகவே ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பிரசாரஞ்செய்வது, இருபதியிலும் விடுதலை பெறுவதற்குள்ள முக்கிய காரணமாகு மென்பதையும், மார்க்கம், தேசியம், ஆண்டவனது பொருத்தம், மானிடனது செயல்கள் ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்படுவது முதலியவைகளுக்கு உயிர்போலிருக்கிறதென்பதையும் நாம் நல்விதமாகஅறிந்து கொள்ளல் அத்தியா அவசியமாகும். வஸ்ஸலாம்.

(எச்ஹைனஸ்நவ்வாப்)முஹம்மத் ஜஹான்நீர் (மான்குலூர்), (கெப்தான்ஸர்) சிகந்தர்ஹயாத்கான் (லாகூர்), (நவ்வாப்ஸர்) அப்துல்கய்யூம் (மந்திரி), (மலிக்ஸர்) பைரோஜ்கான் நூன் (பஞ்சாப்கல்வி மந்திரி) (நவ்வாப்) முஹம்மது இஸ்மாயீல்கான் (அலீகட்,) (நவ்வாப்) அஹ்மத்யார்கான் தூல்தான (முல்தான்), (மௌலான) அப்துல் மஜீது சாலிக் (லாகூர்), (நவ்வாப்) குலாம் அஹ்மத் கலாமீ (பங்ளூர்), (டாக்டர்ஸர்) ராஸ்மஸ்ஊத் (நவ்வாப்மஸ்ஊத்யார்ஜங்பஹதூர்), (டாக்டர்ஸர்) முஹம்மது இக்பால் (லாகூர்), (ஸவ்கார்) ஜமால்முஹம்மது (மதராஸ்), (சேட்) யஅகூப்ஹஸன் (மதராஸ்), (மௌலான) அஹ்மத்அலீ (லாகூர்), (மௌலான) ஷாஹ முஹம்மது சுலைமான் (புல்வாரீஷரீப்), (மௌலான) நஸ்ருல்லா கான் அஜீஜ் (பிஜ்னூர்), (காஜா) அப்துற் றஹ்மான் காஜீ (அமர்தஸர்).

நேயர்காள்! நம்தமிழ்நாடு, சிலோன், பர்மா, மலாயா, பினங், சிங்கப்பூர் ஜாவா, சைகோன் முதலிய தேசங்களில் வதியும் முஸ்லிம்களில்தமிழைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களிடையே மேலே கூறப்பட்டுள்ள மகத்தான புனிதநோக்கத்தைப் பிரசாரஞ் செய்வதற்காகவென்றே சென்ற மூன்றுண்டுகளாய் நம் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்தார் முயற்சித்து, லாகூர் அகில உலக வீரத் கமிட்டியாரால் ஒவ்வொரு ஆண்டிலும் தயாரிக்கப்படும் வீரத் பிரசங்கத்தை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அநேகமாயிரம் பிரதிகளை அச்சிட்டு வெளியாக்கி வருகின்றார்களென்பதும், ஆங்காங்கு யவ்முன் நபீ விழா அழகிய மாதிரியில் கொண்டாடப் பட்டுவருகிறதென்பதும் யாவரும் அறிந்ததே.

எனவே சென்ற ஆண்டில் நமது சங்க சார்பாக 20 ஆயிரம் பிரதிகள் வரை அச்சிடப்பட்டுப்பல இடங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனல் பலர் முற்கூட்டியே தங்கள் ஆடர்களைப் பதிவுசெய்துகொள்ளாது குறுகிய காலத்தில் தந்தி தபால் மூலமும், மணியார்டர் அனுப்பியும் வி. பி. செய்வதற்கு தபால் அனுப்பியும் அவர்களுக்குப் பிரதிகள் அனுப்பமுடியாது வருத்தத்தோடு பதில் எழுதி விடும்படி நேர்ந்தது. ஆகவே சென்ற ஆண்டுகளைவிட இவ்வருடம் யவ்முந் நபீ விழாவை சகலத் துறைகளிலும் சிறந்த விதத்